# சுடர் ஒளி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

THE SUDAR OLI வார மலர்


மதக்கலவரத்தைத் தூண்டும் சி. டி. வெளியிட்டால் பி. ஜே. பிக்கு தடை?

புத்தாண்டு வாழ்த்துக்கள்




## இணைத் தலைமைகளின் முயற்சி பயன் அளிக்குமா?

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.



# சமாதானப் பேச்சு சாத்தியமே அல்ல

சமாதானப்பேச்சுக்கள் தொடர்பான 'பேச்சுகள்' கடந்த சில தினங்களாக



பத்திரிகைகளில் அடிபட்டன.

புத்தாண்டைக் கொண்டாடும் சமயத்தில் பேச்சு பற்றிய செய்திகள் மக்களுக்கு சிறு உற்சாகத்தைக் கொடுத்தபோதும் சமாதானம் என்பது வெறும் கடதாசியில் மட்டும் அல்லது வாய்ப்பேச்சில் மட்டும் தான் இருக்கிறது என்பதே யதார்த்தம்.

வன்னியில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை சந்தித்தபோது புலிகளின் பிரதிநிதிகள் சமாதானப் பேச்சுப் பற்றி பிரஸ்தாபித்தனர் என்று ஊடகங்கள் கூறின. அந்த செய்தி வெளியாகி மறுநாளே பேச்சுக்கான கதவை நாங்களும் திறந்து வைத்திருக்கிறோம் என்று அரசின் கருத்தும் அமைச்சர் ஒருவரிடம் இருந்து வெளியானது.

செய்தித் தலைப்புகள் அழகாகவே இருந்தன. 'சமாதானப் பேச்சுக்கு தயார் என்று அரசும் புலிகளும் ஏதோ புதிதாக அறிவித்திருப்பது போன்று காட்டப்பட்ட ஒரு தோற்றப்பாடு எந்தவிதமான புதிய நம்பிக்கையையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தவில்லை.

இலங்கையில் மோதலில் ஈடுபட்டிருக்கும் இரண்டு தரப்புகளினதும் விடாப்பிடியான நிலைப்பாடுகளை நோக்கினால் நாட்டில் சமாதானம் என்பது கண்ணுக்கு எட்டிய தூரத்தில் மட்டுமல்ல இனி சாத்தியமே இல்லை என்பது தெளிவாகும்.

பிரகடனப்படுத்தப்படாத போர் ஒன்றில் ஈடுபட்டிருக்கும் தரப்புகள் போர் நிறுத்தத்துக்குள் இன்னுமொரு மோதல் நிறுத்தத்துக்கு வரவேண்டி உள்ளது.

2002ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டே - அதை அப்படியே அடி ஒற்றி - தங்கள் கருத்துக்களை - நகர்வுகளை முன்னெடுப்பதில் புலிகள் உறுதியாக உள்ளனர். எதற்குமே அடிப்படை அந்த உடன்பாடுதான். அதை ஏற்றுக்கொண்டால் அடுத்த நிமிடமே அரசுடன் பேசுவதற்கு வருவோம் என்று புலிகள் திரும்பத்திரும்ப கூறுகிறார்கள்.

போர் நிறுத்த உடன்படிக்கையின் அமுலாக்கமே புலிகள் தரப்பு பேச்சுக்கு விதிக்கும் நிபந்தனையாக உள்ளது.

அரசுத் தரப்பைப் பொறுத்தவரை இந்தப் போர் நிறுத்த உடன்படிக்கையை கைகழுவிவிட்டு அரசியல் தீர்வு யோசனைகளை முன்னெடுக்க விரும்புகிறது. போர் நிறுத்த உடன்படிக்கையை அது 'வேண்டாப் பெண்டாட்டியாக' வைத்திருக்கிறது. 'பயங்கரவாதம்' என்று அரசு கூறும் விவகாரத்துக்கு இராணுவ வழி மூலம் தீர்வு காணும் அதேவேளை, புலிகளோடு பேசுவதற்கும் தயார் என்று ஒரு குழப்பமான நிலைப்பாட்டையே அரசு தொடர்ந்து பேணி வருகிறது.

சமாதானப் பேச்சுக்கு போர் நிறுத்த உடன்படிக்கை வேண்டாம். அதை புறமொதுக்கி விட்டுப் பேசலாம். இதுவே அரசின் நிலைப்பாடு. இதுவே பேச்சுக்கான அரசின் நிபந்தனையும் கூட.

இப்போது பேச்சுக்கான இரண்டு தரப்பு நிபந்தனைகளும் ஒன்றுக்கு ஒன்று நேர் முரணானவை.

போர் நிறுத்த உடன்படிக்கைதான் பேச்சுக்கு அடிப்படை என்பது புலிகளின் நிபந்தனை. போர் நிறுத்த உடன்படிக்கை பேச்சுக்கு அடிப்படை அல்ல என்பது அரசுத் தரப்பின் நிபந்தனை.

அடிப்படையில் முரண்பட்ட - இருவேறு துருவங்கள் போன்ற நிலைப்பாடுகளில் நின்று கொண்டு - சமாதானப் பேச்சுக்கு நாங்கள் தயார் என்று இருதரப்பும் கூறிக்கொள்வது வெறும் வேடிக்கைப் பேச்சாகவே தெரிகிறது.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைத் தயார் செய்து வருவதாகக் கூறும் மஹிந்தவின் அரசுத் தலைமை,

வந்த வான் வழிக் குண்டு வீச்சுகளை போர் நிறுத்த மீறலாகவே உலகம் கணித்தது. கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதான புலிகளின் வான் தாக்குதலை - அது ஒரு அப்பட்டமான மீறலாக இருந்தபோதும் - உலகம் அதனை பொரிந்து தள்ளி கண்டிக்காதமை போர் நிறுத்த மீறல்கள் பற்றிய உலகின் தெளிவான கணிப்பை வெளிக்காட்டியது. விடுதலைப் புலிகளின் இத்தகைய மீறல்களை 'பயங்கரவாதம்' என்று முத்திரையிட்டு அதை ஒடுக்குவதற்கான வன்முறை வழிகளை அரசு விரிவுபடுத்திச் செல்கின்றது. இரண்டு தரப்புகளும் போர்நிறுத்த உடன்படிக்கைக்கு அமைய நடப்பதே இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் என்று உலக நாடுகள் திரும்பத் திரும்பக் கூறுகின்றன. ஆனால், இந்த உடன்படிக்கைதான் இன்று மாபெரும் பிரச்சினையாக உருவெடுத்து நிற்கிறது. அவ்வாறாயின் சமாதானப் பேச்சு என்பது இனி சாத்தியமே அல்ல.

கிழக்கில் கடந்த சுமார் நான்கு மாதகாலமாக அரசுப் படைகள் விடுதலைப் புலிகளின் பிரதேசங்களுக்குள் முன்னேறி

முன்னெடுக்க இருப்பதையே வெளிவிவகார அமைச்சர் ரோகித்த போகொல்லாகமவின் அண்மைய கருத்துக்கள் புலப்படுத்துகின்றன. 'சமாதானப் பேச்சுக்கு கதவுகள் திறந்திருந்தபோதும் பயங்கரவாதம் ஒடுக்கப்படவேண்டியதுதான்' என்று அவர் கூறி இருப்பது மோதல்கள் தொடர இருப்பதையே கோடி காட்டுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி அதிகாரம் அதன் அணுகுமுறை என்பன போர் நிறுத்த உடன்படிக்கையை மீண்டும் உயிர்த்தெழுவதற்கு விடப்போவதில்லை.



ஆகவே, அண்மைக்காலத்தில் நாட்டில் சமாதானம் தோன்றக்கூடிய அறிகுறிகள் அறவே இல்லை என்று கூறலாம்.


ஆனால், ஒன்றை நம்பலாம். தெற்கில் ஏற்படக்கூடிய அதிகார மாற்றம் ஏதேனும் மாறுதல்களைக் கொண்டுவரலாம்.

நாட்டில் உருவாகி இருக்கும் அச்ச சூழ்நிலை, பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகியவற்றை ஒன்றுபடுத்தி மக்கள் முன்நிறுத்தி - ஆட்சிக்கு எதிரான

# அது வெறும் — வாய்ப் பேச்சுத்தான்!

விடுதலைப் புலிகளின் 'பயங்கரவாதப்' பிரச்சினைக்கு இராணுவ வழியில் தீர்வு காண்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கிறது.

ஏக காலத்தில் இரண்டையும் முன்னெடுத்தல் என்பது ஏற்கனவே, இதற்கு முன்னர் தென்னிலங்கை ஆட்சி அதிகாரத்தில் இருந்த சிங்களத் தலைவர்கள் பலர் கையாண்டு தோல்வி கண்ட இரட்டை அணுகுமுறை. இந்த அணுகு முறைகாரணமாக ஏற்பட்ட அழிவுகளின் உச்சத்தில் தான், 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன்படிக்கையின் அவசியம் உணரப்பட்டு அது ஏற்படுத்தப் பட்டது.



இப்போது அந்த உடன்பாடு அமுலில் இல்லை. அது உயிரற்றுக் கிடக்கிறது. நாடு முழுவதும் அழிவுகள் பெருகி அவலங்கள் சூழ்ந்துள்ளன.

போர் நிறுத்த உடன்படிக்கை மீறப்பட்டமை உண்மையானது. இரு தரப்புகளுமே அதை மீறிச் செயற்பட்டன என்பது கண்காணிப்பாளர்களின் கணிப்பு. விடுதலைப் புலிகளின் பிரதேசங்கள் மீது அரசுப் படைகள் தொடர்ச்சியாக நடத்தி

நடத்தி வந்த தாக்குதல் நடவடிக்கைகள் காரணமாக போர் அரங்கில் மட்டுமன்றி தமிழ் மக்கள் மனங்களிலும் ஏற்பட்டிருந்த சோர்வு நிலையை -

கட்டுநாயக்கா விமானப் படைத் தளம் மீது - விமானப்படையின் இருதயப் பகுதி மீது - விமானங்கள் மூலங்கள் நான்கு குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியதன் மூலம் அகற்றி தங்களது வலுவை - இமேஜை - மீண்டும் தூக்கி நிமிர்த்தியிருக் கின்றனர் புலிகள்.

கிழக்கில் பலநூறு மணித்தியாலங்கள் தனது பீரங்கள் மூலம் பல லட்சக்கணக்கான குண்டுகளை ஏவி அரசு சாதித்ததை, ஆக 25 கிலோக்கிராம் எடையுடைய நான்கு குண்டுகளை மட்டும் கொழும்பில் வீசியதன் மூலம் புலிகள் முறியடித்து வலுச் சமநிலையில் பிரமிப்பை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

புலிகளைத் தோற்கடிப்பதன் மூலம் பேச்சு மேசைக்கு அழைக்கலாம் என்ற அரசின் கணக்கு மார்ச் 26 ஆம் திகதி தாக்குதலோடு தப்புக் கணக்காகிவிட்டது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை அரசு புத்தண்டுக்குப் பின்னரும்

அரசியல் போர்முனை ஒன்றைத் திறப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிக்கிறது.

தென்னிலங்கையில் குழப்பங்களுக்கு மத்தியிலும் நிதானமான அரசியல் அணுகுமுறை ஒன்றைக் கடைப்பிடித்து மக்கள் மத்தியில் தனது கவர்ச்சியை உயர்த்தி வருகிறார் என்று கணிக்கப்படும் ரணில் விக்கிரமசிங்க, புத்தாண்டுக்குப் பின்னர் அரசியல் அரங்கில் அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் புதிய வியூகங்களை வகுக்கத் திட்டமிட்டிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளோடு மஹிந்த ராஜபக்ஷ இரகசிய ஒப்பந்தம் செய்தார் எனக் கூறப்படும் விவகாரத்தைப் பெரிது படுத்திவரும் ஐ.தே.கட்சி, தனது பிரதிநிதிகள் குழு ஒன்றை வன்னிக்கு அனுப்புவதற்கும், புலிகளோடு பேச்சு நடத்துவதற்கும் திட்டமிட்டிருக்கிறது என்ற தகவலும் வெளியாகி இருக்கிறது.

**கேக்கே**

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைபலத்தை தேடிப்பிடிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கக்கூடும். ஒருவேளை அத்தகைய நிலை ஏற்படுமானால் தென்னிலங்கையில் இருவேறு ஆட்சி அதிகார மையங்கள் - நாடாளுமன்றம் - ஜனாதிபதி என்ற இருவேறு அதிகாரமையங்கள் - உருவாகலாம்.

தென்னிலங்கையில் ஏற்படக்கூடிய அதிகார மாற்றங்கள் தான் நாட்டின் இன்றைய போக்கிலும் மாற்றங்களைக் கொண்டு வர முடியும்.

அதுவரை நிச்சயமற்ற - இருண்ட - பாதையூடாகவே நாடு பயணிக்க வேண்டி இருக்கும்.

மாநகராட்சி மன்றம்

# இணைத் தலைமைகளின் முயற்சி பயன் அளிக்குமா?

வடக்கு - கிழக்கில் மட்டுமல்லாது தெற்கிலும் வன்செயல்கள் உச்ச கட்டத்தை அடைந்து ஓரளவு அமைதி நிலவும் இந்த நேரத்தில் -

பிரஸல்ஸில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறப் போவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

வன்செயல்கள் எல்லை கடந்து போகின்றன. ஏதோ ஓர் இடத்தில் அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்து சமாதான முயற்சிகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவது தொடர்பாக, காட்டமான முடிவுகளை இந்த இணைத்தலைமை நாடுகள் எடுக்கப்போகின்றன.

அந்த இணைத்தலைமை நாடுகளின் முடிவுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் - உந்துதல் அளிக்கும் வகையில் - புனித பாப்பரசர் பெனடிக்ட் ஆண்டகையின் உயிர்த்த ஞாயிறுச் செய்தியும் வந்துள்ளது.

வத்திக்கானில் சென்.பீற்றர்ஸ் சதுக்கத்தில் பல ஆயிரம் பக்தர்கள் முன் உரையாற்றுகையில் இலங்கை தொடர்பாக முக்கிய கருத்து ஒன்றை சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பாப்பரசர் விடுத்துள்ளார். இலங்கையில் இப்போது தேவைப்படுவது அமைதியே. அந்நாட்டில் மோதலில் ஈடுபடும் இரு தரப்புகளும் அவற்றைக் கைவிட்டு சமரச முயற்சிகளை முன்னெடுக்கவேண்டும். "இலங்கையில் பெரும் இரத்தக்களரிக்கு வழி வகுத்த மோதல்களுக்கு முடிவுகாண சமரசத் தீர்வு ஒன்றினால் மாத்திரமே முடியும்"

இப்படி இரத்தினச் சுருக்கமாக பாப்பரசர் தனது ஈஸ்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பாப்பரசர் வெளியிட்ட செய்தி இலங்கையில் மோதலில் ஈடுபட்டுள்ள ஸ்ரீலங்கா அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் மட்டுமல்லாது சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இரு தரப்புகளுக்கும் இச்செய்தி ஒரு வற்புறுத்தலை - அழுத்தத்தை - சுட்டி நிற்பதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் தொடரும் வன்செயல்கள் மூலம் பொதுமக்கள் உயிரிழப்புகளும் இடப்பெயர்வுகளும் தீவிரமாகி வருவதையும், அதில் இருந்து அந்த மக்கள் மீட்சி பெறுவதற்கு சமரசத் தீர்வு ஒன்றே வழி என பாப்பரசர் விடுக்கும் செய்தி, மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் ஆழச் சிந்தித்து செயற்பட வேண்டும் என்று தேவையை வலியுறுத்தி நிற்கின்றது.

இலங்கை அரசு சமாதான வழியில் இன்னமும் நம்பிக்கை இருப்பதாக சர்வதேசத்துக்குக் காட்டிக் கொண்டு, பயங்கர வாதத்தில் இருந்து மக்களைக் காப்பாற்றும் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது என நோக்கர்கள் கூறுகின்றனர்.

அரசியல் தீர்வு யோசனை ஒன்றின் மூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணப் புறப்பட்டு நிற்பதாக அரசு கூறிவந்தாலும் அந்தத் தீர்வுக்கான யோசனைத் திட்டத்தை இன்னமும் காணமுடியாத இக்கட்டு நிலையில் நிற்கின்றது.

சர்வகட்சி மாநாட்டின் மூலம் யோசனைத் திட்டம் ஒன்றை வகுத்து விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சு நடத்தப் போவதாக அரசு கூறினாலும், தெற்கு அரசியல் கட்சிகளின் ஒன்றுபட்ட கருத்தை எட்டமுடியாத நிலையே தொடர்கின்றது.

ஆரம்பத்தில் சர்வகட்சி மாநாட்டுப் பிரதிநிதிகள் ஒன்றுபட்டு தீர்வு யோசனைகளைத் தயாரிக்க முடிவு செய்தனர். பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், அரசியல் நெருக்கடிகள் அந்த யோசனையைத் தயாரிக்கும் பணியைக் காலதாமதமாக்கிக் கொண்டு போகின்றன.

ஜே.வி.பி. மற்றும் ஹெலஉறுமய போன்ற பேரினவாதக் கட்சிகள் தீர்வு யோசனையை தயாரிக்கும் பணிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சர்வ கட்சி மாநாட்டுக் குழுவில் இருந்து வெளியேறிவிட்டன.

பிரதான கட்சிகளான சுதந்திரக் கட்சிக்கும் ஐ.தே. கட்சிக்கும் இடையில் உருவான புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் இரு கட்சிகளும் இணைந்து யோசனைகளைத் தயாரிக்க முனைந்தன.

எனினும், ஐ.தே. கட்சியின் உறுப்பினர்களை வளைத்துப் பிடித்து அமைச்சுப் பதவிகளை வழங்கிய அரசின் போக்கால் ஐ.தே. கட்சி சற்று விலகியே நிற்கின்றது.

இதன் காரணமாக தீர்வு யோசனைகளை இனங்காணும் செயற்பாடுகள் மந்தகதியிலேயே நகர்கின்றன.

இது ஒருபுறமிருக்க, அரசு ஆரம்பித்த இராணுவ நடவடிக்கைகள் மூலம் சம்பூர், வாகரை - போன்ற பிரதேசங்கள் அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. ஆனால், அதன் மூலம் வன்செயல்கள் தீவிரமானதுடன், அங்குள்ள மக்களும் இடம்பெயர்ந்து அவல வாழ்வை தொடரும் நிலை தோற்றுவிக்கப்பட்டது. அகதிகளின் அவலம், கொலைகள், ஆள்கடத்தல் போன்றவற்றின் தீவிரம் சர்வதேசம் தலையிடும் சூழல் இப்போது வந்துவிட்டது.

2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில்" கைச்சாத்தான யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னர் சர்வதேசத்தின் பிரசன்னத்தில் ஆறு கட்டப் பேச்சுகள் இடம்பெற்றன.

அந்தப் பேச்சுகளில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக, அரசையும் விடுதலைப் புலிகளையும் பங்காளர்களாகக் கொண்டு நாட்டைக் கட்டி எழுப்ப நிதி உதவிகளை வழங்க உருவானது தான் இணைத்தலைமைகளின் கூட்டு.

ஒஸ்லோவில் நடந்த நிதி வழங்கும் கூட்டத்தில் அமெரிக்கா, நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நான்கு நாடுகளும் இணைந்து உருவாக்கிய இந்த அமைப்பு இலங்கை விவகாரத்தில் ஆழக் காலூன்றியது.

ஒஸ்லோவிலும் பின்னர் ரோக்கியோவிலும் கூடிய இந்த இணைத்தலைமை நாடுகள் அமைப்பு பெரும் தொகையான நிதியை வாரி வழங்க முன்வந்தது.

ஒஸ்லோ மாநாட்டில் அரசும் விடுதலைப் புலிகளும் சமதரப்பாக - சமமாக அமர்ந்து - இந்த இணைத்தலைமை நாடுகளுடன் பேரம் பேசி நிதி உதவிகளைப் பெற முனைந்தன.

அதன்பின் ரோக்கியோவில் நடந்த மாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுக்காமல் அவர்களைப் புறந்தள்ளி இலங்கையரசு மட்டும் பங்குபற்றியதன் விளைவு, விடுதலைப் புலிகள் அரசுடன் நேரடிப் பேச்சுகளில் பங்கு கொள்வதை இடைநிறுத்தியது.

தொடர்ந்து தெற்கில் உருவான அரசியல் நெருக்கடிகள், ஆழிப்பேரலை அனர்த்தம் போன்ற புறக்காரணிகளால் பேச்சுகள் முடங்கிப் போயின. எனினும், இணைத் தலைமைகள் நாடுகள் அமைப்பு இலங்கை விவகாரத்தில் தொடர்ந்தும் பங்களித்துக்கொண்டிருந்தது.

மூன்றரை வருடங்களாக முடங்கிக் கிடந்த சமரச முயற்சிகள் - நேரடிப் பேச்சுகள் மீண்டும் புதிய ஜனாதிபதியாக 2005ஆம் ஆண்டு நவம்பரில் மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின் துளிர்விட்டன.

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற கையோடு வந்த மாவீரர் தினத்தை ஒட்டிய உரை மூலம் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ற தீர்வுத் திட்டத்தை அவர் முன்வைத்தால் பரிசீலிக்கத் தயார் என விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அறிவித்து நேசக்கரம் நீட்டினார்.

இந்த நேசக்கரத்தைப் பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தனது பங்காளிக் கட்சிகளான ஜே.வி.பி. ஹெல உறுமய போன்றவற்றை உதறித் தள்ளிவிட்டு நோர்வேயின் பங்களிப்புடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த முன்வந்தார்.

அதன் பயனாக மூன்றரை வருடங்களாக முடங்கிக் கிடந்த சமாதானப் பேச்சுகள் - 2006ஆம் ஆண்டு யுத்தநிறுத்த உடன்படிக்கை நாலாம் ஆண்டில் காலடி எடுத்துவைத்த நாளான பெப்ரவரி 22ஆம், 23ஆம் திகதிகளில் ஜெனிவாவில் ஆரம்பமாகின.

இரு தினங்கள் நடைபெற்ற பேச்சுகளின் இறுதியில் இரு தரப்புகளும் இணக்கம் கண்ட விடயங்களை உள்ளடக்கிய கூட்டறிக்கை ஒன்றை விடுத்தன.

அக்கூட்டறிக்கையில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் நடைமுறைக்கு வராத காரணத்தால் மோதல்கள் வெடித்தன. ஏ-9 போக்குவரத்துப் பாதை மூடப்பட்டது. விமான மற்றும் ஷெல் தாக்குதல்கள் தீவிரமாகின. கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தன. கொலைகள், காணாமற் போதல், ஆள்கடத்தல்கள் மலிந்தன.

நிஜ யுத்தம் ஒன்றுக்கு முன்னோடியாக நிழல் யுத்தம் ஒன்று கட்டவிழ்த்து விடப்பட்டது.

நிலைமை மோசமடையும் கட்டத்தில் இணைத் தலைமை நாடுகள் செப்ரெம்பர் மாதம் பிரஸல்ஸில் கூடி ஆராய்ந்தன. மோதல்களுக்கு முடிவு காண இரு தரப்புகளும் நேரடிப் பேச்சில் ஈடுபடவேண்டும் என்று தெரிவித்து பேச்சுக்கான திகதிகளைக் கூட அறிவித்தன.

அந்தச் செய்தியை அனுசரணையாளரான நோர்வே இரு தரப்பினருக்கும் எடுத்து விளக்கிய தன் பயனாக, மீண்டும் இரண்டாம் கட்டப் பேச்சு ஒக்ரோபர் மாதம் 28,29ஆம் திகதிகளில் ஜெனிவாவில் அரங்கேறியது.

அந்தப் பேச்சுகளில் பங்குபற்றிய விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், மக்கள் அவலங்களைத் தீர்க்கும் வகையில் ஏ-9, ஏ-15 பாதைகளை மக்கள் போக்குவரத்துக்குத் திறக்கவேண்டும். அதன் மூலமே பேச்சுகளை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தலாம் என்று கூறினர்.

பல்வேறு காரணங்களைக் காட்டி, அந்தப் பாதைகளைத் திறக்கமுடியாது என்று அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் கூறிவிட்டனர்.

இதன் காரணமாக பேசுக்கள் தோல்வியடைந்த நிலையில் இரு தரப்புகளின் பிரதிநிதிகளும் தாயகம் திரும்பினார்கள்.

பேச்சுகள் தோல்வியடைந்த நிலையில், அனுசரணையாளர்களான நோர்வேயும் சற்று விலக்கிக்கொண்டது.

எனினும், காலத்துக்குக்காலம் இரு தரப்புகளுடனும் தொடர்புகளைப் பேணிவந்த நோர்வே இலங்கையின் கள நிலைவரங்களை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்தது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை ஐந்தாண்டைப் பூர்த்திசெய்து இன்னமும் நடைமுறையில் உள்ள நிலையில், மோதல்களில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளும் மாறுபட்ட கருத்துகளை வெளியிட்டுக்கொண்டிருக்கின்றன.

"மோதல்களை முடிவுக்குக்கொண்டுவர வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகவே யுத்த நிறுத்த உடன்பாடு கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் என்ன நடந்தது என்பது எங்கள் அனைவருக்கும் தெரியும். எனவே, களத்தில் யுத்தம் இருக்கக்கூடாது என்ற சிறிய விடயத்தை நோக்காகக் கொண்டதாக அல்லாமல் முழுப் பிரச்சினைக்குமே தீர்வு காண்பதற்கான பேச்சை அடிப்படையாகக் கொண்டதாக எமது அணுகுமுறை அமையவேண்டும். யுத்த நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில் இனிமேலும் நாங்கள் பேச்சைத் தொடரலாம் என நான் நம்பவில்லை"

- இப்படி வெளிவிவகார அமைச்சின் செயலாளரும் சமாதான செயலகப் பணிப்பாளருமான பாலித கொஹன கருத்து வெளியிட்டுள்ளார்.

"யுத்தநிறுத்த உடன்பாட்டைப் பேணுவதற்கு அரசு விரும்பாவிட்டால், அமைதிப் பேச்சுகளை மீள ஆரம்பிக்க வாய்ப்பு இல்லை. அதேவேளை மோசமான போரும் வெடிக்கும்.

யுத்தநிறுத்த உடன்பாடு ஒரு சரித்திரப் பிரசித்திமிக்க திருப்புமுனை. அது வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. மனித அவலங்களுக்கு முடிவு கட்டியது. இருதரப்புகளுக்கும் இடையில் புரிந்துணர்வு அபிவிருத்தி அடைய வழி செய்தது. நேரடிப் பேச்சை சாத்தியமாக்கியது.

இந்த சரித்திரபூர்வ நிகழ்வை புறமொதுக்கி விட்டு தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை நடத்துவது என்பது சாத்தியமல்ல.

சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் யுத்த நிறுத்த உடன்பாட்டை நூறுவீதம் நடைமுறைப் படுத்துவதன்மூலம் மட்டுமே நேரடிப் பேச்சுக்கான சூழலை உருவாக்கமுடியும்"

- இப்படி விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.

யுத்த நிறுத்த உடன்பாடு தொடர்பாக முரண்பாடாக இரு தரப்பினரும் கருத்துவெளியிட்டுள்ள நிலையில் -

பிரஸல்ஸில் இணைத் தலைமை நாடுகள் கூடுகின்றன.

நிலைமை மோசமடைந்துள்ள இன்றைய நிலையில் இணைத்தலைமை நாடுகள் சாதிக்கப் போவது என்ன என்ற கேள்வி சகலரது மட்டங்களிலும் எழுந்துள்ளன.

மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரக் கூடியவகையில், இணைத் தலைமை நாடுகள் இரு தரப்பினருக்கும் அழுத்தம் கொடுக்கும் வகையிலும் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கக்கூடிய வகையிலும் -

காட்டமான முடிவுகளை எடுக்கப்போகின்றன என கொழும்பு அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளது.

கட்டுநாயக்கா விமானத் தளம்மீது விடுதலைப் புலிகள் வான் தாக்குதலை நடத்திய பின்னர், அதை சர்வதேச நாடுகள் கண்டிக்காத நிலையில் ஏமாற்றம் அடைந்துள்ள தெற்குத் தலைமைகள், சர்வதேசத்தின் கரிசனையை கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டிய இக்கட்டு நிலை உருவாகியுள்ளது என்று விமர்சகர்கள் கருத்துக் கூறுகின்றனர்.

இணைத்தலைமை நாடுகள் எடுக்கப் போகும் முடிவுகள் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவந்து பயன் உள்ளதாக அமையுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## குடாநாட்டில் ஏக்கத்துடன் கலந்த புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்

கடந்த ஓகஸ்டில் மோதல்கள் வெடித்த பின்னர் வந்த கிறிஸ்மஸ், ஆங்கில புத்தாண்டு, தைப் பொங்கல் போன்ற சமய நிகழ்வுகள் எல்லாம் சோபை இழந்த நிலையில் குடாநாட்டு மக்களால் கொண்டாடப்பட்டன.

பங்கீட்டுக்குக் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு அரை குறையாக வயிற்றை நிரப்பிய அந்தக் காலத்தில் எப்படி சமயக் கொண்டாட்டங்களை மக்கள் நிம்மதியாக் கொண்டாடமுடியும்?

அரைகுறையாகக் கிடைத்த பொருள்களைக் கொண்டும் அறாவிலை கொடுத்து வாங்கிய பொருள்களைக் கொண்டும் மக்கள் அந்தக் கொண்டாட்டங்களை அமைதியாக சமய வழிபாடுகளுடன் கொண்டாடினர்.

சிங்கள - தமிழ் புத்தாண்டு பிறக்கப்போகின்றது. இக்கொண்டாட்டத்தை மக்கள் விரும்பியபடி - விரும்பிய பொருள்களைக் கொள்வனவு செய்ய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

அரச அதிபருக்குப் புறம்பாக, தனியார் வர்த்தகர்கள் தினம்தினம் கொண்டுவந்து குவிக்கும் பொருள்களால் நகரப்பகுதி நிரம்பி வழிகின்றது. நகரப் பகுதியில் மட்டுமல்லாமல், குடாநாட்டில் சகல பகுதிகளிலும் மக்கள் தனியார் வர்த்தக நிறுவனங்களில் பொருள்களை ஓரளவு கட்டுப்பாட்டு விலைக்குத் தாராளமாகக் கொள்வனவு செய்யக்கூடிய சூழல் உருவாகியுள்ளது.

பொருள்களைக் கொள்வனவு செய்து புத்தாண்டைக் கொண்டாட குடாநாட்டுக்கு மக்கள் தயாரானபோதும் இனந்தெரியாத அச்சநிலையும் அவர்களிடம் குடிகொண்டுள்ளது.

கடத்தல்கள், காணாமற்போதல், கொலைகள் ஓரளவு குறைந்துள்ளபோதும் மக்கள் மனங்களில் சந்தோஷத்தைக் காணமுடியவில்லை. அவர்கள் அடுத்து என்ன நடக்குமோ என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்கள்.

புத்தாண்டு நல்வழி காட்டாதா என்ற ஏக்கமே அவர்கள் மனங்களில் விஞ்சி நிற்கின்றது.

எனினும், புத்தாண்டை புத்தெழுச்சியுடன் கொண்டாட குடாநாட்டு மக்கள் தயாராகிவிட்டனர். ✱

**யாழவன்**


**வீடு/காணி**

*விற்பனைக்கு/வாடகைக்கு/குத்தகைக்கு*

வத்தளைப் பிரதேசத்தில் வீடு, காணி, வியாபார ஸ்தாபனம், களஞ்சியசாலை கொள்வனவு செய்வதற்கும் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு பெறுவதற்கும் தொடர்புகொள்ளவும்.

Wattala Property Sales,
No:83, E-1/2, Negombo Rd, Wattala.
Tel:+9411-29806 95/6, 0773455605.
E.mail:wps@sltnet.lk.web.
www.wattalaproperty sales.com





நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்

# உறவுகளைத் தேடி...!

கடத்தப்பட்டு காணாமற்போனோர் தொடர்பான மாநாடு இந்த நாட்டில்தான் முதன்முறையாக நடத்தப்பட்டிருக்கிறது. இது கின்னஸ் சாதனையென்றால் அது மிகையாகாது.

மக்கள் கண்காணிப்புக் குழு கடந்த திங்கட்கிழமை கொழும்பு வீரமைலன் மண்டபத்தில், கடத்தப்பட்டு காணாமற்போனோரின் குடும்பத்தினர், உறவினர்களைக் கூட்டி இந்த மாநாட்டை நடத்தியது. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐ.தே.க. எம்.பிகளான ஜோன் அமரதுங்க, ரவி கருணாநாயக்க ஆகியோர் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.





மக்கள் கண்காணிப்புக் குழுத் தலைவர் சிரிதுங்க ஜயசூரிய, அமைப்பாளர் மனோ கணேசன் எம்.பி. அங்கத்தவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தனர்.

இம்மாநாட்டுக்கு வந்திருந்தோர் கண்ணீரும் கம்பலையுமாக அழுது வீங்கிய முகங்களுடன் காணப்பட்டனர். காணாமற்போன தமது உடன்பிறப்புகள், கணவன்மாரை எப்படியாவது விடுவித்துவிடவேண்டுமென்ற ஆதங்கம் இவர்களிடம் காணப்பட்டது. இதுபோன்றதொரு மாநாடு இலங்கையில் நடப்பது இதுவே முதல் தடவையாகும்.

காணாமற்போனோரின் படங்களை ஏந்தியவண்ணம் மனைவிமார், பெற்றோர், பிள்ளைகள் மேடையில் கண்ணீர் சிந்தியவண்ணம் நின்ற காட்சி காண்போரைக் கண் கலங்கச் செய்தது.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் 2006 ஜனவரி முதல் சுமார் 150 பேர் வரை கடத்தப்பட்டு காணாமற்போயுள்ளனர். இவர்களில் 90 பேரின் முழு விவரங்கள் மக்கள் கண்காணிப்புக் குழுவிடம் இருப்பதாக மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார். இவர்களில் சிலர் கொல்லப்பட்டுவிட்டனர். மேலும் சிலரிடம் கப்பம் பெற்றும் கூட அவர்கள் இன்றுவரை விடுவிக்கப்படவில்லை. இவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்பதே தெரியவில்லை எனவும் மனோ கணேசன் எம்.பி தெரிவித்தார். இதேவேளை, வடக்கு, கிழக்கில் இதே காலப்பகுதியில் சுமார் 1,500 இற்கு மேற்பட்டோர் காணாமற்போயுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

காணாமற் போனோரின் உறவினர்கள் தமது உறவுகள் என்றாவது விடுவிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையிலேயே காத்திருக்கின்றனர். தந்தையை காணாமல் தவிக்கும் பிள்ளைகள், தமது பிள்ளைகளைக் காணாமல் கண்ணீர் சிந்தி அழும் தாய்மார், தமது வாழ்க்கைத் துணையை இழந்து தவிக்கும் மனைவிமார் என பல தரப்பட்டோரின் கண்ணீர் வீரமைலன் மண்டபத்தை ஈரமாக்கியது என்னவோ உண்மைதான்.

இந்த நாட்டில் தமிழர்கள் கிழக்கில் இடம்பெயர்ந்து தவிக்கின்றனர். வடக்கில் ஷெல் வீச்சு, கடத்தல், கொலை, பாலியல் வல்லுறவு என தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவருகின்றனர்.

**எஸ். கணேசன்**

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வாழும் தமிழர்கள் எப்போது கடத்தப்படுவோம் என்ற அச்சத்துடன் அவல வாழ்க்கை நடத்துகின்றனர். மொத்தத்தில் இந்நாட்டில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழும் சூழ்நிலை குறைந்துவருகிறது.

கடத்தப்பட்டு காணாமற்போனோரது உறவினர்களின் இந்த மாநாடு கொழும்புத் தமிழர்கள் நிம்மதியாக வாழமுடியாது என்பதற்கு கட்டியம் கூறுவதாக அமைந்திருந்தது.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த மாநாட்டில் பேசும்போது கூறியதாவது:-

"அரசுடன் இணைந்துள்ள ஆயுதக் குழுக்களே இக்கடத்தல்களுக்குக் காரணமெனக் கூறப்படுகிறது. இலங்கைக்குப் புகழ் சேர்க்கும் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கூட கப்பம் பெறுவதற்காகக் கடத்தப்படலாம். ஒரே றுஹுணு புத்திரன்தான் நாட்டில் இருக்கவேண்டும் என்ற காரணத்துக்காக இலங்கைக் கிரிக்கெட் அணியில் சாதனை படைத்துவரும் சனத்ஜய சூரிய கடத்தப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால் இவரும் றுஹுணு புத்திரன் தான்.

மனித உரிமைகளை அரசுதான் பாதுகாக்க முடியும். எம்மால் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக குரல் எழுப்பமுடியும். கொழும்பில் கடத்தப்பட்டவர்கள் பொலன்னறுவைப் பகுதியில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. இதுபோன்ற கடத்தல் சம்பவங்கள் புலிகளுக்கு சர்வதேச ரீதியில் அனுதாபத்தைப் பெற்றுக்கொடுத்து அவர்களை மேலும் பலமடையவே செய்யும்."

- இவ்வாறு ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் காணாமற்போனோரைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளில் அசமந்தப் போக்கையே அரசு கடைப்பிடிக்கின்றது. கொழும்பில் காணாமற்போனோரில் ஒருவரைக் கூட பொலிஸார் கண்டுபிடிக்கவில்லை. காணாமற்போனோரைக் கண்டுபிடித்து அவர்களை இழந்து தவிக்கும் குடும்பங்களை ஆறுதல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த மனோ கணேசன் ஐ.தே.கட்சி இதற்கு ஆதரவு வழங்கும் என நம்புவதாகத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட அனைவரும் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டனர்.

'பலவந்த ஆட்கடத்தல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட குழு இலங்கைக்கு விஜயம் செய்வதற்காக விடுத்திருக்கும் கோரிக்கையை சாதகமாகப் பரிசீலித்து அவர்களை நாட்டுக்குள் அனுமதித்து காணாமற்போன எமது உறவுகளை மீட்கவும், கடத்தல்கள் மற்றும் ஆட்கள் காணாமற்போதல் போன்ற சம்பவங்கள் இனி மேலும் தொடராது இருப்பதை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுங்கள்.'

மாநாட்டில் அரசை இவ்வாறு கோரும் பிரகடனமொன்றும் வெளியிடப்பட்டது.

மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து அரசு அலட்டிக்கொள்ளவில்லையென்பது அரசின் நடவடிக்கைகளில் இருந்தே நிருபணமாகின்றது.

இந்த மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்கின்றார் என்பதை அறிந்து அன்றைய தினமே கொழும்பு முழுவதும் சுவரொட்டியொன்று ஒட்டப்பட்டிருந்தது.

அந்த சுவரொட்டியில் '1984 முதல் 1991 வரை பட்டலந்த, சூரியகந்த, எலியகந்த தொடர் கொலைகள் மூலம் மனித உரிமைகளை குழி தோண்டிப் புதைத்த ரணில் விக்கிரமசிங்க, இன்று மனித உரிமைகளுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கின்றார்.' என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, கடந்த வாரம் அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஸ்ரீ.ல.சு.கட்சி பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன கருத்து தெரிவிக்கையில்,

"ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போதுதான் அதிகமானோர் கடத்தப்பட்டனர், காணாமற் போயினர், கொலை செய்யப்பட்டனர். எமது ஆட்சியில் காணாமற் போனோர் குறித்துப் பேசும் அருகதை ஐ.தே.கட்சிக்கு இல்லை" என்றார். இதிலிருந்தே அரசு காணாமற் போனோர் குறித்து எதுவும் செய்யப்போவதில்லை என்பது தெளிவாகின்றது.

இதேவேளை, ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் தொடர்பான மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாக கலந்துகொண்ட மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க மனித உரிமைகள் மீறல் தொடர்பாக இலங்கையை கண்டிக்கும் தீர்மானம் இந்த மாநாட்டில் கொண்டு வரப்படாமலிருக்க பகீரத பிரயத்தனங்களை மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றுள்ளார். மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய இலங்கை வர முயற்சிக்கும் சர்வதேச குழுக்களை இலங்கைக்கு வரவிடாமல் தடுப்பதிலேயே அரசு அதிக கரிசனை காட்டுகின்றது.

### திருத்தம்

ஆறாம் பக்கத்தில் வெளியாகியுள்ள 'அரசியல் தளம்பலில் ரணிலின் காய் நகர்த்தல்' என்ற தலைப்பிலான கட்டுரையில் அமைச்சர் போகொல்லாகமவின் படத்துக்குப் பதிலாக அமைச்சர் ராஜித்த சேனாரத்னவின் படம் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது.

- ஆர்.

# புத்தாண்டிலாவது யாழ்ப்பாண மக்களின் விடுதலைப் பாதைக்கு வழிகிடைக்குமா...?

இன்று யாழ்.குடாநாட்டின் நிலைமை மிகவும் மோச மடைந்துகொண்டே செல்கின்றது. பிறக்கும் இந்தப் புத்தாண்டிலாவது தமக்கு ஒரு விடிவு கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்ருக்கின்றார்கள் யாழ்.குடாநாட்டு மக்கள். இந்த நிலைமை எங்கு போய் முடியப்போகின்றதோ என்று அங்கலாய்த்தவாறு

திரும்பிய பின்னரே சுதந்திரக்காற்றைத் தாம் சுவாசிப்பதாகக் கூறுவர்.

மேலதிக சிகிச்சைக்காக யாழ். குடாநாட்டிலிருந்து தலைநகருக்குக் கொண்டு வரப்படும் நோயாளிகள்கூட தமது, உயிர் போகவேண்டும் என்றால் அந்தப் புனித



முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலை தவிர்க்கப்படவேண்டும்.

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தமது ஈஸ்டர் தினச் செய்தியில் தெரிவிக்கையில், "இந்த திறந்தவெளிச் சிறைச்சாலை வாழ்க்கையிலிருந்து தப்பியோடவே யாழ். குடாநாட்டுமக்கள் துடிக்கின்றனர். ஆட்கடத்தல்கள், காணாமற்போதல்கள், படுகொலைகள் அன்றாட நிகழ்வுகளாகி விட்ட நிலையில் பயத்துடனும், பதற்றத்துடனும் யாழ்.குடாநாட்டு மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.குடாநாட்டில் யாராவது இனந்தெரியாத நபர்களால் சுடப்பட்டு இறந்தால், அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ளச் செல்பவர்களுக்கே அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது.

இதனால், சுடப்பட்டு இறப்பவர்களின் இறுதிக்கிரியை நிகழ்வுகளில் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. குறிப்பாக அங்கு இளவட்டங்களைக் காணவே முடிவதில்லை. ஒரு மனிதன் இறந்தபின்னர் அவனுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையைக்கூட கொடுக்கமுடியாத நிலை மிகவும் வருந்தத்தக்கது.

யாழ்.குடாநாட்டில் இடம்பெறும் படுகொலைகளில் பல, தொலைபேசி மூலம் நண்பர்கள் அழைப்பதுபோல அழைத்து, பின்னர் கடத்தப்பட்டு, சித்திரவதை செய்தபின்னரே

அமுலில் இருந்து வருகின்றது.

மாலை 6 மணி ஆகியதும் அங்கு வீடுகளின் கேற்றுக்கள் அனைத்தும் மூடப்படுகின்றன.

> "இந்த திறந்தவெளிச் சிறைச்சாலை வாழ்க்கையிலிருந்து தப்பியோடவே யாழ்குடாநாட்டுமக்கள் துடிக்கின்றனர். ஆட்கடத்தல்கள், காணாமற்போதல்கள், படுகொலைகள் அன்றாட நிகழ்வுகளாகிவிட்ட நிலையில் பயத்துடனும், பதற்றத்துடனும் யாழ்குடாநாட்டு மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்"
>
> -யாழ். ஆயர்.

அதன்பின்னர் வீதியில் இரையும் வாகனங்களின் ஓசைகள், குரைக்கும் நாய்களின் சத்தங்கள் என எல்லாமே யாழ். மக்களை அச்சமூட்டிக் கொண்டே இருக்கும். இளவட்டங்களை வைத்திருப்பவர்களுக்கு அச்சம் இரட்டிப்பாக இருக்கும். இவ்வாறுதான் யாழ்.குடாநாட்டின் இரவுகள் அச்சமூட்டும் இரவுகளாக நகர்கின்றன. மறுநாள் விடியும்போது, இன்று என்ன அசம்பாவிதங்கள்

யாழ். பஸ்நிலையத்தில் இருந்து இறுதிபஸ் மாலை 3 மணிக்கு புறப்படுகின்றது. அந்த குறுகிய நேரத்திற்குள் தமது பயண அலுவல்களைப் பார்க்கவேண்டிய நிலையும் உள்ளது.

பலரும் பயணத்திற்கென நாயாய் அலைந்து, பல சிரமங்களுக்கு மத்தியில் அனுமதியைப் பெற்றாலும், பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி சோதனை மேல் சோதனையாகவே இவர்கள் பயணத்தைத் தொடர்கின்றனர்.

இந்தப் பயணத்தின்போது கப்பலில் அடிப்படைவசதிகள் எதுவும் செய்யப்படவில்லை எனவும்- கப்பலில் மலசல கூடவசதிகள் மிகவும் மோசமாக உள்ளன எனவும் - பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த 8ஆம் திகதி ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்ட தினத்தின் 5 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளது. கடந்த 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 8 ஆம் திகதி ஏ-9



உள்ளவர்கள் பலர்.

யாழ்.குடாநாட்டில் போக்குவரத்து நிலைமையே மிகவும் பாரதூரமான விளைவுகளைக் கொடுத்து வருகின்றது. அங்கு நிலவும் கெடுபிடிகள் எல்லை மீறியதால், அங்குள்ள மக்கள் எப்படியாவது குடாநாட்டை விட்டுப் பாதுகாப்புக்காக வெளியேறி வேறு இடங்களுக்குச் செல்வதற்கு நினைப்பது இயல்பானதே. தொடரும் கெடுபிடிகளில் இருந்து தமது பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக அவர்களின் கல்வி நடவடிக்கைகள், தொழில்கள் போன்றவற்றைக் கூட ஒதுக்கிவிட்டு அவர்களை தலைநகருக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பிவிடலாம் என்று பல பெற்றோர்கள் நினைத்து விட்டனர். இதற்கு செயல் வடிவம் கொடுப் பதற்கும் இறங்கிவிட்டனர்.

ஆனால், பாதுகாப்புக் கெடுபிடிகள் காரணமாக பாதுகாப்புப் படையினரின் வெளியேறும் அனுமதி கிடைப்பதுதான் முயற்கொம்பாக உள்ளது. அப்படியிருந்தும் சிலருக்கு அதிர்ஷ்டவசமாக அனுமதி கிடைக்கின்றது. அவ்வாறான வர்கள் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகின்றனர்.

கடந்த ஓகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் இதுவரை யாழ்.குடாநாட்டை விட்டு 40 ஆயிரம் பொதுமக்கள் வெளியேறியுள்ளதாக அறியவருகின்றது.

யாழ்.குடாநாடு என்றால், புனித பூமியாகக் கருதி அங்கு மக்கள் திரண்டு, அங்குள்ள புனிதத் தலங்களைத் தரிசிப்பதற்காக விரைந்த காலங்களை எம்மால் இலகுவில் மறந்துவிட முடியாது.

முன்னர் தலைநகருக்கு வரும் யாழ். மக்கள், எப்போது மீண்டும் அங்கு திரும்புவோம் என்று காத்திருப்பார்கள். அங்கு மீண்டும்

பூமியிலேயே போகவேண்டும், இறந்தாலும் அங்கு உடலைக் கொண்டுசென்றால்தான் தமது கட்டை வேகும் என்றெல்லாம் கூறுவதை மறுக்கமுடியாதுதான். அந்தளவிற்கு அங்கு மண்பற்றும் கலாசாரமும் ஊறிக்கிடக்கின்றது.

அவ்வாறான மண்ணை விட்டு இன்று மக்கள் வெளியேறத் துடிக்கும் நிலை எவரைத்தான் மனமுருக வைக்காது.

'யாழ்.குடாநாடா, ஆளைவிட்டால் போதும் சாமி' என்று ஓடும் அளவிற்கு அங்கு நிலைமை மோச மடைந்துள்ளது.

கொலை, ஆட்கடத்தல்கள், கொள்ளை, பாலியல் பலாத்காரம் என்ற நிலைமைகள் தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில், தற்போது ஒரு புதிய பிரச்சினை உருவெடுத்துள்ளது. இரவுவேளைகளில் தொலை பேசிமூலம் மிரட்டி கப்பம்

## சிந்தியுங்கள்...! செயற்படுங்கள்....!

கேட்கும் முயற்சியில் ஒரு கும்பல் முயன்று வருகின்றது. 'தட்டிக்கேட்க ஆளில்லா விட்டால், தம்பி சண்டப் பிரசங்கிதான்' என்ற நிலையில் இவர்கள் செயற்படுகின்றனர். முன்னர் வாய்கட்டி, பெட்டிப்பாம்பாய் அடங்கிக் கிடந்தவர்கள்தான் இன்று கிடைத்த சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப்

**- கந்தரதன்**

பயன்படுத்துகின்றனர்; பழிவாங்கும் படலத்தில் இறங்கியுள்ளனர்.

இவ்வாறு கப்பம் கேட்பதற்கு கொலை அச்சுறுத்தல் மற்றும் ஆட்கடத்தல், பயமுறுத்தல் போன்றவற்றை முன்வைக்கின்றனர்.

இவ்வாறான அச்சுறுத்தலுக்குப் பயந்து பலர் மனித உரிமை ஆணைக்குழுவிலும் பொலிஸ் நிலையங்களிலும்

இடப்பெற்றுள்ளன.

கொலை வெறிபிடித் தவர்கள் எதனைத்தான் யாழ். மக்களிடம் எதிர்பார்க்கின்ற னரோ என்பது புரியவில்லை. ஆயினும், நீண்ட நாள் வஞ்சத்தைத் தீர்க்கும் நிலைதான் இது என்று பலரும் தமக்குள்ளே பேசிக்கொள்கின்றனர்.

யாழ். குடாநாட்டில் அதிகமாக இடம்பெறும் வன்செயல்கள் அனைத்தும் ஊரடங்கு நடைமுறையில் உள்ளபோதே இடம் பெறுகின்றன. அவ்வாறான வேளையில் பாதுகாப்புத் தரப்பினரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டா இந்த வன்செயல்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

ஆயினும் தமக்கு சாதகமாக ஊரடங்கு நேரத்தையும் நடைமுறையில் வைத்துள்ள னர். மாலை 6 மணியிலிருந்து அதிகாலை 5 மணிவரை யாழ்.குடாநாட்டில் ஊரடங்கு

ஏற்படப்போகின்றனவோ என்ற ஏக்கத்துடனேயே யாழ். மக்கள் எழுகின்றனர்.

இன்று ஒவ்வொரு விடியலும் அஸ்தமனமும் இவ்வாறுதான் அங்கு ஏற்படுகின்றது.

இவற்றிலிருந்து விடுபடுவதற்கு என்றே பலரும் யாழ்.குடாநாட்டைவிட்டு வெளியேற முன்வருகின்றனர். ஆனால், யாழ்.குடாநாட்டை விட்டு வெளியேறுவதற்கு அவர்கள் படும்பாடு, சிரமங்கள் சொல்லில் அடங்காதவை.

திறக்கப்பட்டது.

கடந்த 11 ஆம் திகதியுடன் ஏ-9 நெடுஞ்சாலை மூடப்பட்டு 8 மாதங்கள் பூர்த்தியாகின்றன.

இதன்பின்னர் யாழ். மக்கள் ஒரு திறந்த வெளிச்சிறைச் சாலை போலவே நடத்தப்படு கின்றனர். எத்தனையோ உணவுப் பற்றாக்குறைகளைச் சந்தித்து பிறக்கும் இந்தப் புத்தாண்டிலாவது யாழ்.குடா நாட்டு மக்களுக்கு விடிவு பிறக்குமா? இவர்களின் துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா? ஏ-9 திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

உரிய தரப்பினரே விடை உங்களின் மனங்களில்தான்.

## சுடர் ஒளி வாரஇதழ்

### யாழ். வாசகர்களின் கவனத்துக்கு!

'சுடர் ஒளி' வார இதழ் வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க சுமார் 8மாதகால இடைவெளிக்குப் பின்பு, பெரும் சிரமங்களுக்கு மத்தியில் 'சுடர்ஒளி' வார இதழின் மிகச்சொற்ப பிரதிகளை இம்முறை குடாநாட்டுக்கு அனுப்பிவைத்துள்ளோம். ஆனால், விலையில் சிறு அதிகரிப்பு.

விமானம் மூலம் அனுப்புவதில் ஏற்பட்ட அதிகரித்த கட்டணச்செலவு காரணமாக குடாநாட்டு வாசகர்கள், குறிப்பிட்ட விலையைவிட ஒரு சிறு தொகைப் பணத்தை அதிகமாகக் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

போக்குவரத்தில் தற்போது இருந்துவரும் நெருக்கடி குறைந்து வழமை நிலை ஏற்படும்போது 'சுடர்ஒளி' வார இதழை முன்னைய விலைக்கே வாசகர்கள் பெற்றுக்கொள்ளமுடியும்.

- நிர்வாகி

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

சுடர் ஒளி

ஏப்ரல் 15 - 21. 2007

35, ஜெயந்த் மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன் 0114734401—6
பாக்ஸ் : 011 4734404
E-mail: editorial@sudaroli.com

## தடம் புரளும் தமிழகத் தலைவர்கள்

இலங்கைத் தமிழர்களுக்கும் தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கும் இடையிலான உறவு தொப்புள் கொடி உறவு என்று அரசியல் வாதிகளினால் அடிக்கடி கூறப்பட்டு 'வரு கிறது. இலங்கையில் உள்ள தமிழர்களின் பரம்பரையினர் தமிழ்நாட்டில் இருந்து வந்த வர்கள் என்பதினாலேயே இப்படிக் கூறப்படு கிறது.

எம்.ஜி.ஆரின் ஆட்சிக்காலத்தில் இந்த உணர்வு உச்சத்தில இருந்ததை எவரும் மறுக்க முடியாது. ஈழத் தமிழர்களுக்கு நேசக்கரம் நீட்ட எம்.ஜி.ஆர். ஒருபோதும் தயங்கியதில்லை. அத்துடன் தமிழீழ மக்களின் இன விடு தலைப் போராட்டம் தற்போதைய தோற்றம் பெற - ஸ்ரீலங்கா அரசின் விமானத் தளம்மீது குண்டுவீசும் அளவுக்கு வளர்ச்சி அடைய பெரும் நிதி உதவி மூலம், ஆரம்பத்திலேயே கை கொடுத்தவர் எம்.ஜி.ஆர். தான்.

ஆனால், எம்.ஜி.ஆருக்குப் பின்பு தமிழ் நாட்டின் தலைமைப் பதவியை ஏற்ற தலை வர்கள், எம்.ஜி.ஆரின் இலட்சியப் பாதையை கைவிட்டு, இலங்கைத் தமிழ் மக்களின் இன விடுதலைப் போராட்டத்தைத் தமது சுய அரசியல் லாபத்துக்குப் பயன்படுத்தி வரு வதைக் காணமுடிகிறது.

ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினை காரண மாக தமிழ்நாடு மாநில அரசு மட்டும் அல்ல மத்திய அரசு கூட கவிழ்க்கப்பட்டிருப்பது இந்த அரசியல் சுயநலத்தின் உச்ச வெளிப் பாடே. சமீபத்தில் தமிழ்நாட்டில் இடம்பெற்ற ஒரு சம்பவமும் இந்த அரசியல் சுய நலத் துக்கு ஓர் எடுத்துக்காட்டு.

தமிழ்நாடு திண்டிவனத்தில் பாரிய வெடிவிபத்து ஒன்று வார முற்பகுதியில் ஏற்பட்டது. வாகனம் ஒன்றில் வெடிமருந்துக் குச்சிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றிச் சென்றபோது இடம்பெற்ற இந்த வெடி விபத்தினால் 27 அப்பாவிப் பொதுமக்கள் பலியாகினர். 50க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். ஆனால், இந்தச் சம்பவம் இடம் பெற்றவுடன், கார்க்குண்டு ஒன்றே வெடித்ததாக தமிழ்நாடெங்கும் பரபரப்பாகப் பேசப்பட்டது.

உண்மையாக இது கார்க் குண்டுதானா அல்லது ஏதாவது வெடிவிபத்தா என்பதைக் கூட ஆராய நேர அவகாசம் எடுக்காமல் விடுதலைப் புலிகளே இதற்குக் காரணம் என்று செல்வி ஜெயலலிதாவைத் தலைவரா கக் கொண்ட அ.தி.மு.கவினர் தமது டெலி விஷனில் பிரசாரத்தை கட்டவிழ்த்து விட்ட னர். அமைதிப் பூங்காவாக இருந்த தமிழ் நாட்டை கருணாநிதி குண்டுப் பூங்காவாக மாற்றிவிட்டார் என்று ஜெயலலிதா குற்றம் சாட்டினார்.

ஆனால், நடந்தது என்ன? அளவுக்கு அதிகமாக வெடிமருந்து வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டதே இந்த வெடி விபத்துக்குக் காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை தற்பொழுது ஒரு முக்கிய கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

- விடுதலைப் போரில் போராளிகள், பொதுமக்கள் என 75 ஆயிரத்துக்கும் மேற் பட்டோர் இதுவரை உயிர்த்தியாகம் செய்து விட்டனர்.
- வடக்கு - கிழக்கில் இரண்டு லட்சம் பேர் வரை இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ் கின்றனர்.
- வடக்கு - கிழக்கில் கைதுகள், கடத்தல்கள், படுகொலைகள் தொடருகின்றன.
- ஏ - 9 பாதை மூடப்பட்டிருப்பதால் குடா நாடு பட்டினி நிலைமையை எதிர்நோக்கு கிறது.
- தமிழர் பகுதிகளில் இடம் பெறும் விமானக் குண்டுவீச்சுகளினால் அப்பாவி மக்கள் உயிரிழக்கின்றனர்.

மொத்தத்தில் தமிழ் மக்கள் தற்பொழுது பெரும் சோதனையை எதிர்நோக்கி உள்ளனர்.


முழு இலங்கையிலுமே அவர்களின் பாது காப்பு கேள்விக் குறியாகிவிட்டது.

தற்போதைய நிலையில் ஈழத் தமிழர் களுக்கு தமிழ்நாடுதான் கைகொடுக்கா விட்டாலும் பேசாமலாவது இருக்கலாம். அதனைவிட்டுவிட்டு ஜெயலலிதா போன் றோர் ஈழத் தமிழர்களின் போராட்டத்தை வைத்து அரசியல் லாபம் தேட முயற்சிப்பது வரலாற்றுத் துரோகம் ஆகும். தமிழ் பேசும் உலகம் இதனை மன்னிக்க மாட்டாது.

# அரசியல் தளம்பலில் ரணிலின் காய்நகர்த்தல்

ஜனநாயகம் என்ற போர்வைக்குள் அரசியல்வாதிகள் நடத்தும் சூதாட்டத்தில் பகடைக் காய்களாகச் சிக்கி மூச்சுத் திணறிக்கொண்டிருக்கின்றனர் நாட்டுமக்கள்.

உலக வரலாற்றில் அல்லது ஒரு நாட்டின் சரித்திரத்தில் அவ்வப்போது நடைபெறும் சம்பவங்களை கிறிஸ்துவுக்கு முன் கிறிஸ்துவுக்குப் பின் என கோடிட்டுக் காட்டுவதுதான் வழமை.



ரணில்

ஆனால், நமது நாட்டைப் பொறுத்த வரையில் தேர்தலுக்கு முன் தேர்தலுக்குப் பின் என்று குறிப்பிடுவது தான் பொருத்தமாக இருக்கும்.

தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகளின் கண்கண்ட தெய்வங்களாகத் தெரியும் பொதுமக்கள் தேர்தல்களின் பின் ஒருதுரும்பாகக் கூடமதிக்கப்படுவதில்லை.

குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு என்பதுபோல் அரசியல்வாதிகளின் பேச்சும் அந்த தேர்தல் மேடைகளோடு போச்சு.

இது ஒன்றும் புதிய கதை அல்ல. வழமையாகக் கண்டும் கேட்டும் புளித்துப்போன பழைய விடயம்தான்.

என்றாலும் கூட நமது நாட்டில் அன்றாடம் இடம்பெறும் சம்பவங்கள் சற்றுவித்தியாசமாகவும் அதேவேளை, வேதனைப்படக்கூடியதாகவும் அமைந்துள்ளன.

தேர்தல்களின்போது இவர்கள் அளித்த வாக்குறுதிகளும் மேடைகளில் இவர்கள் இட்ட முழக்கங்களும் எழுத்துமூலம் அச்சடித்துக்கொடுத்த கொள்கைப் பிரகடனங்களும் நம் நாட்டில் அப்படியே மலிந்து கிடக்கின்றன. ஆனால், இந்த



ஆறுமுகன் தொண்டமான்

அரசியல்வாதிகளோ அங்கிட்ட மை காய்வதற்குள் அதனை மறந்துவிட்டனர்.

ஒருநாட்டின் தலைவிதியை தீர்மானிப்பது அங்கு நடைபெறும் தேர்தல்கள்தான். அப்போது இவர்கள் அள்ளிவீசிய கவர்ச்சியான வாக்குறுதிகள் மக்களை முட்டாள்களாக்கி விட்டுள்ளன. தேர்தல்களின் முன் ஒரே குடும்பமாக ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் வாழ்ந்த மக்களை கட்சி, கொடி, கொள்கை என்று கூறிக்கொண்டு குத்துவெட்டுகளில் ஈடுபடவைத்துள்ளது.

தாம் ஆதரிக்கும் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வதே தமது ஒரே நோக்கம் என்ற சிந்தனையுடன் அந்த வேட்பாளர்களுக்காக உயிரையும் பணயம் வைத்து செயற்படுகின்றனர். எத்தனை பேர் உயிர் இழந்தனர். எத்தனைபேர் கை, கால்களை இழந்து ஊனமாகியுள்ளனர். அதைவிட இன்றும் எத்தனைபேர் சிறைக்கூடங்களில் கம்பி எண்ணிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால், இந்த வேட்பாளர்களோ இன்று எந்தக்கட்சியில் இருக்கின்றோம் என்று கூடத் தெரியாமல் இன்று ஒருகட்சி, நாளை ஒரு கட்சி என்று நாளுக்கு நாள் பல்டி அடித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களுடைய இச்செயல் நாட்டுமக்களைப் பைத்தியக்காரர்களாக்கி விட்டுள்ளது.ஆதிமுதல் இதனை ஆராய்ச்சி செய்யப்போனால் மேலும் எங்களையும் உங்களையும் அது பைத்தியமாக்கிவிடும்.

எனவே, இன்று நாட்டில் ஐந்தாவது, ஆறாவது நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட அரசியல்வாதிகளின் பல்டிகளை மட்டும் பார்ப்போம்.

தேர்தலுக்கு முன் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் நின்று ஸ்ரீ.ல.சு.கட்சியை திட்டோ திட்டு என்று திட்டியவர்களுள் முதலாவது பல்டியை ஆரம்பித்தவர்கள் இன்று அமைச்சர்களாக இருக்கும் ரோஹித்த போகொல்லாகமவும் ஹுசைன் பைலாவும் பல்டிக்கு



போகொல்லாகம

பிள்ளையார் சுழி போட்டனர்.

ஹுசைன் பைலா ஐ.தே.கவின் கூடாரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் தேசியப் பட்டியல் எம்.பியாக நாடாளுமன்றத்திற்குள் அடியெடுத்து வைத்தவுடனேயே ஆளுங்கட்சிக்குத் தாவி ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

அமைச்சர் போகொல்லாகம முற்பகல் அமர்வின்போது ஐ.தே.கபக்கமிருந்து ஆளுங்கட்சியை பார்த்து கூச்சல்போட்டுக் கொண்டிருந்துவிட்டு மதிய இடைவேளையின்போது பகல்உணவு அருந்தியபின் அந்த கைகளின் ஈரம் காய்வதற்கு முன் பிற்பகல் அமர்வின்போது அமைச்சராகி ஆளுங்கட்சிக்குத் தாவிவிட்டார்.

என்ன வேடிக்கையாக இருக்கின்றதா? இவற்றைவிட இன்னும் பல இருக்கின்றன.

அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க கெஹெலிய ரம்புக்வெல ஆகியோர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் இரு கரங்களாக இருந்தவர்கள்.

மஹிந்த சமரசிங்க நாடாளுமன்றத்தில் ஐ.தே.கவின் ஆட்சியில் ஆளுங்கட்சிக் கொரடாவாகவும் பின்னர் எதிர்க்கட்சிக் கொரடாவாகவும் இருந்து செயற்பட்டவர். ஐ.தே.கவின் பிரசார பீரங்கியாகவும் மதிக்கப்பட்டவர்.

அதேபோன்றுகெஹெலிய ரம்புக்வெல ரணில் விக்கிரமசிங்க அன்றாடம் உடுத்தும் ஆடைகளைக் கூடத்தானே தெரிவுசெய்வதாகக் கூறிப் பெருமைபட்டுக்கொண்டவர்.ரணிலுக்கும் தனக்கும் அவ்வளவு நெருக்கம் இருப்பதாகத் தம்பட்டம் அடித்துக்கொண்டவர்.

ஆறுமுகன் தொண்டமான் கோஷ்டியினர் முதலாவது பல்டி அடித்தபோது "ஐ.தே.கவிடம்



கருஜயசூரிய

பலகோடிகளை வாங்கிக்கொண்டு ஐ.தே.கவுடன் சேர்ந்து யானைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள், கட்சி தோல்வியடைந்ததால் ஆளும்கட்சியின் பக்கம் ஓடிவிட்டனர்" என மிகவும் கேவலமாக விமர்சனம் செய்தவர்கள்தான் இந்த கெஹெலிய ரம்புக்வெல.

இந்த இரண்டு பெரும் புள்ளிகளுமே ஒரே இரவில் ஜனாதிபதியின் நண்பர்களாகி அமைச்சர்களாகிவிட்டனர். இது ஐ.தே.கவுக்கு விழுந்த முதலாவது அடி.

இவர்களைப் போலவே ரணில் விக்கிரமசிங்கவின் தானைத் தளபதிகளாகவும் பிரசாரப் பீரங்கிகளாகவும் இருந்தவர்கள் தான். கருஜயசூரிய, டாக்டர் ராஜித சேனாரத்ன, பந்துல குணவர்த்தன, பேராசிரியர் பீரிஸ், மிலிந்த மொரகொட ஆகியோர்.

கடைசிவரையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பக்கபலமாக இருந்து கைகொடுத்தவர்கள். ஆனால், சிறிதும் எதிர்பாராதவேளையில் கருஜயசூரிய தலைமையில் ஒரே குடும்பமாக 18பேர் எதிரணி வரிசையில் இருந்து ஆளும் கட்சிக்குப் பல்டி அடித்து அமைச்சர்களாகிவிட்டனர்.



ஹக்கீம்

என்ன இவர்களுக்கு மட்டும்தான் முடியுமா? நாங்கள் மட்டும் என்ன ஒன்றும் முடியாதவர்களா என முஷ்டிகளை முறுக்கிக்கொண்டு இ.தோ.கா.தலைவர் ஆறுமுகன், ஸ்ரீ.ல.மு.கா. தலைவர் ரவூப்ஹக்கீம், மலையக மக்கள் முன்னணி சந்திரசேகரன்

(23ஆம் பக்கம் பார்க்க)

இரா. புத்திரசிகாமணி

# தோட்டத் தொழிலாளர்களுக்கு கை கொடுக்கும் மரண சகாய நிதி

தோட்டத் தொழிலாளி ஒருவர் இறந்தால் அவரது குடும்பத்துக்கு 25 ஆயிரம் ரூபாவை மரண சகாய நிதியாகவும்பத்தாயிரம் ரூபாவை இறுதிக் கிரியைகளுக்காகவும் வழங்க இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தீர்மானித்துள்ளது. இதன்படி கடந்தவாரம் இருதோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளரும் ஊவா மாகாண சபையின் உறுப்பினருமாகிய கே.வேலாயுதம் வழங்கினார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்துக்கு மாதாந்தம் ஒரு நாட் சம்பளத்தில் மூன்றில் ஒருபகுதியை சந்தாவாகச் செலுத்தும் தோட்டத் தொழிலாளருக்கே இந்த மரண சகாய நிதி வழங்கப்படுமென இச்சங்கம் தெரிவித்துள்ளது.ஒரு நாட் சம்பளத்தின் மூன்றில் ஒருபகுதி என்பது சுமார் 70ரூபாவாகும்.



## மலையகக் கண்ணோட்டம்

நிரஞ்சன்

தோட்டத் தொழிலாளர்கள் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்க்கை நடத்துகின்றனர். திடீரென்று ஏற்படும் மரணங்கள் பொருளாதார ரீதியில் இவர்களைப் பெரிதும் பாதிக்கின்றன. மரணம் சம்பவித்தால் அந்தக்குடும்பம் இறுதிக் கிரியைகளுக்காக கடன்பெறவேண்டிய சூழ்நிலையே பெரும்பாலும் ஏற்படுகின்றது.

தோட்டத் தொழிற் சங்க வரலாற்றில் முதன்முறையாக இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் மறைந்த தோட்டத் தொழிலாளியின் குடும்பத்துக்கு 35ஆயிரம் ரூபாவை வழங்குவது பெரும் சாதனையாகும்.

கிராமங்களில் மரண உதவிச் சங்கங்கள் இயங்குகின்றன. இச்சங்கங்களில் அங்கம் வகிக்கும் குடும்பங்கள் 50 ரூபாவுக்கும் அதிகமான தொகையை மாதாந்தம் இச்சங்கங்களுக்கு செலுத்தவேண்டும். குடும்ப உறுப்பினர் யாராவது இறந்தால் பத்தாயிரம் ரூபா வரை பணம் வழங்கப்படும். ஆனால், மாதாந்த சந்தாவை மட்டுமே பெற்றுக்கொண்டு மரண சகாய நிதியாக 35ஆயிரம் ரூபா வழங்கப்படுவது வரலாற்று சாதனை என்றே கூறவேண்டும்.

பெருந்தோட்டத்துறையில் புற்றீசல்கள் போல் பல தொழிற்சங்கங்கள் இயங்குகின்றன. இவை அனைத்தும் தொழிலாளர்களின் சந்தாப் பணத்தை இலக்காகக்கொண்டே இயங்கிவருகின்றன. இச்சங்கங்கள் தொழிலாளர்களின் நலனைக்கூட முறையாகக் கவனிப்பதில்லை. தொழிலாளர்கள் வழங்கும் சந்தாப் பணத்தில் சுகபோக வாழ்வுநடத்தும் தொழிற்சங்கத் தலைவர்கள் இவர்களது வாக்குகளைப் பெற்று



அரசியல்வாதிகளாகவும் மாறி வசதி வாய்ப்புகளை பெருக்கிக்கொண்டுள்ளனர். ஆனால், அவலவாழ்க்கை நடத்தும் தோட்டத் தொழிலாளர்களின் நலன்குறித்து எதுவுமே செய்வதில்லை.

இந்நிலையில் இலங்கை தேசியதோட்டத் தொழிலாளர் சங்கம் தொழிலாளர் நலன்குறித்து கவனம் செலுத்தியுள்ளமை பாராட்டுக்குரியது. ஒரு தொழிலாளி இறந்துவிட்டால் அவரது குடும்பத்துக்கு 35ஆயிரம் ரூபா மரண சகாய நிதி வழங்குவதுடன் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தனது சேவையை நிறுத்திக்கொள்ளவும் போவதில்லை என பொதுச் செயலாளர் கே.வேலாயுதம் தெரிவிக்கின்றார். எதிர்காலத்தில் தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகளின் கல்வி குறித்தும் கவனம் செலுத்தப்படும் என்றும் புலமைப் பரிசில் மற்றும் க.பொ.த. சாதாரணதரம், உயர்தரத்தில் திறமைச் சித்தி பெறும் மாணவ மாணவிகளது உயர்கல்விக்கு நிதியுதவி வழங்குவது குறித்தும் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் வழங்கும் இந்த மரண சகாய நிதி ஒரு தொழிலாளி தோட்டத்தில் வேலைசெய்யும் முழுக்காலமும் வழங்கும் சந்தாத் தொகையைவிட அதிகமாகும். இந்த மரண சகாயநிதியானது தொழிலாளர் தமது வாழ்நாள் முழுவதும் இந்த தொழிற்சங்கத்துக்கு வழங்கிய சந்தாவை வட்டியுடன் திரும்பப் பெற்றுக்கொண்டது போலாகுமென இத்திட்டத்தைப் பாராட்டிய தோட்டத் தொழிலாளர் ஒருவர் தெரிவித்தார்.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | நேரம் | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6.00 | காலைநேரச் செய்திகள் | காலை நேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | 6.00 | நிகழ்ச்சிகள் ஆரம்பம், பத்திரிகைச் செய்திகள் | நிகழ்ச்சிகள் ஆரம்பம், பத்திரிகைச்செய்திகள் |
| 6.30 | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | 6.30 | சங்கீத மேடை | சங்கீத மேடை |
| 7.00 | சக்தியின் உதயம் | சக்தியின் உதயம் | சக்தியின் உதயம் | சக்தியின் உதயம் | சக்தியின் உதயம் | 7.00 | ராசிபலன் | கார்ட்டூன் |
| 7.30 | குட்மோர்னிங் சிறிலங்கா | குட்மோர்னிங் சிறிலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | 7.30 | சிறுவர் உலகம் | கிட்ஸ் |
| 8.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொண்டாட்டம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | கொமடி ரைம் | 8.00 | | அரட்டை அரங்கம் |
| 9.00 | உங்கள் சொய்ஸ் | புத்தம் புது பாடல் | நீங்கள் கேட்டபாடல் | சுப்பர் 10 | உங்கள் சொய்ஸ் | 8.30 | | சின்னச் சின்ன ஆசைகள் |
| 9.30 | நேற்று இன்று நாளை | நினைவுகள் | நட்சத்திரம் | இயக்குநர் பார்வை | நேற்று இன்று நாளை | 9.00 | திரை விமர்சனம் | |
| 10.00 | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | 9.30 | ராஜ ராஜேஸ்வரி | அல்லி ராஜ்யம் |
| 10.30 | அகல்யா | அகல்யா | அகல்யா | அகல்யா | அகல்யா | 10.00 | அது மட்டும் ரகசியம் | வேப்பிலைக் காரி |
| 11.00 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | 10.30 | இளமை புதுமை | சண்டே சமையல் |
| 11.30 | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | 11.00 | | சுப்பர் சீன்ஸ் |
| 12.00 | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | 11.30 | சினி சொய்ஸ் | இளைய கானம் |
| 12.30 | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கை | 12.00 | அஞ்சலி | |
| 01.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதியசெய்திகள் | 12.30 | | |
| 01.15 | சக்திமூவி (துடிக்கும் கரங்கள்) | சக்திமூவி (கைராசிக்காரன்) | சக்திமூவி (பிக்பாக்கட்) | சக்திமூவி [illegible] | சக்திமூவி (பாயும் புலி) | 1.00 | சக்திமூவி (நாளை) | சக்திமூவி (குஸ்தி) |
| 04.00 | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | 4.00 | ஜொலிவூட் எக்ஸ்பிரஸ் | ஸ்ராருடன் பேசலாம் |
| 4.30 | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | 4.30 | குஷி ரைம் | ரிலாக்ஸ் ரைம் |
| 5.00 | கார்ட்டூன் | கார்ட்டூன் | கார்ட்டூன் | கார்ட்டூன் | கார்ட்டூன் | 5.00 | நலந்தானா | ரொப் 10 மூவிஸ் |
| 5.30 | கிட்ஸ் டிராமா | கிட்ஸ் டிராமா | கிட்ஸ் டிராமா | கிட்ஸ் டிராமா | கிட்ஸ் டிராமா | 5.30 | ஊரும் உலகமும் | புதிய ராகங்கள் |
| 6.00 | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | 6.00 | அறிவு | மின்னல் |
| 6.30 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | 6.30 | திமிதகதா , | |
| 7.00 | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | 7.00 | சக்தி சுப்பர் ஸ்டார் | |
| 7.30 | கணவருக்காக | கணவருக்காக | கணவருக்காக | கணவருக்காக | கணவருக்காக | 7.30 | | |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | 8.00 | செய்திகள் | செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | 8.30 | வா வாத்தியாரே வா | வா வாத்தியாரே வா |
| 9.00 | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | 9.00 | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் |
| 9.30 | லக்ஷ்மி | லக்ஷ்மி | லக்ஷ்மி | லக்ஷ்மி | லக்ஷ்மி | 9.30 | நிஜத்தின் நிழல் | சிதம்பர ரகசியம் |
| 10.00 | மலர்கள் | மலர்கள் | மலர்கள் | மலர்கள் | மலர்கள் | 10.00 | களம் | [illegible] பாட்டு அரங்கம் |
| 10.30 | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | சக்தி காவிய சினிமா (மௌனராகம்) | 10.30 | சக்தி காவிய சினிமா (காதலிக்க நேரமில்லை) | அசத்தப்போவது யாரு |
| 11.30 | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | | 11.30 | | திரை மசாலா |
| 12.00 | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | 12.00 | | நிகழ்ச்சி நிறைவு |

மணித்தியாலச் செய்திகள் 10.25, 11.25, 14.25, 15.25, 16.25, 17.25

**ஒரு தனிமையான பெரிய வீடு. சகல வசதிகளும் கொண்டது. ஒரு வேலைக்காரனோ, வேலைக்காரியோ அந்த வீட்டில் இல்லை. ஓர் அற்புத மான கூண்டுக்குள் அடைபட்ட அழ கிய கிளியாக லோரா அடைபட்டுக் கிடந்தாள்.**

**அந்தப் பறவை விடுதலையைத் தேடுகிறது. முடிந்ததா?...**

# ஒரு சின்னப் பறவை விடுதலை தேடி...!



(சென்ற வாரத் தொடர்ச்சி...)

கொமட்டின் மேல் நின்று கொண்டிருந்த லோரா ஜன்னலால் எட்டிப் பார்த்தாள்.

வெலிங்டன் ஜன்னலுக்குக் கீழ் நின்று கொண்டிருந்தான். அவனுடைய முதுகுப் பாகத்தையே அவள் கண்டாள்.

அவன் பார்வை கடலின் பக்கமாகவிருந்தது. கடற்கரையில் ஓர் அழகான படகு நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. அதைக் கரையோரமாக ஒதுக்கி நங்கூரமிட்டிருந்தார்கள். சிலர் அதை அங்குமிங்கும் இழுப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். ஏதோ பரீட்சை செய்வது போலிருந்தது. ஒரு தடித்த குள்ளமான ஆசாமி வெலிங்டனை நோக்கி வந்துகொண்டிருந்தான். அவனைப் பார்த்தால் வேலை செய்துகொண்டிருப்பவர்களைப் போலில்லை. அவர்களுக்கு முதலாளிபோல் இருந்தான்.

அவன் வெலிங்டனை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தான். அருகில் வந்தால் அவன் தன்னை கண்டுவிடக்கூடும் என்று லோரா பயந்தாள். வெலிங்டன் மறைப்பறையின் பின்புறமாக நின்று கொண்டிருப்பதைக் கண்டதுமே அவள் வெலவெலத்துப் போயிருந்தாள். தான் தப்பிப்போக முயல்வதை கண்டுபிடிப்பதற்காகவே அவன் அங்கு காத்திருக்கிறான் என்றே அவள் திகிலடைந்தாள். ஆனால், விடயம் அது அல்ல; வெலிங்டன் படகொன்றை வாங்குகிறான் அல்லது குத்தகைக்கு எடுக்கிறான் என்று தோன்றுகிறது.

ஜன்னல் கதவு ஓசையின்றி மூடப்படுகிறது. அவள் பூனை போல் கொமட்டின் மீதிருந்து கீழிறங்கினாள்.

அப்போது-

அந்த பழங் கொமட் உடைந்துவிட்டது. 'படார்' என்று சத்தம் கேட்கிறது.

லோரா நடுநடுங்கிப் போனாள்.

ஜன்னலுக்கு அப்பால் நின்று கொண்டிருக்கும் வெலிங்டனின் பாம்புச் செவிக்குள் அந்த ஓசை ஊடுருவி இருக்கும். தப்பிச்செல்லும் ஒருமுயற்சியில் தான் ஈடுபட்டிருப்பதை அவன் தெரிந்துகொள்வான் அல்லது சந்தேகப்படுவான்.

தொலைந்தேன்; துவம்சம் செய்துவிடுவான். அவள் திகிலில் நடுங்கினாள். அச்சத்தினால் கைகால்கள் வெடவெடத்தன..

ஓசையின்றி வேகமாக நடந்து தன் அறையை அடைந்து, கதவை மூடி தாழ்ப்பாளைப் போட்டுக்கொண்டு கட்டிலில் சாய்ந்துவிட்டாள்.

நிச்சயமாக இன்று தன்னை நன்றாக பதம்பார்த்துவிடுவான் என்ற பயத்தில் அவளது பிஞ்சுமேனி என்னதான் கட்டுப்படுத்திக்கொண்டாலும் தனது அதிர்வை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

நாழிகை, நிமிடங்களாகி வேகமாக நகர்ந்து, விரைந்து, மறைந்து கொண்டிருந்தபோதும் வெலிங்டன் வீட்டுக்கதவைத் திறந்து உள்ளே வந்த பாட்டைக் காணவில்லை.

லோராவுக்கு அழுகை அழுகையாக வந்தது. கண்களில் நீர் நிறைந்து பொங்கிப் பிரவாகமெடுத்தது. அந்த கண்ணீர் பெருக்கத்தினூடே குருட்டுப் பெண்ணான தன் அன்னையை நினைத்துக்கொண்டாள்.

'பாவம் அம்மா! நான் இங்கே எவ்வளவு இம்சைக்குள்ளாகி வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று தெரிந்தால் அவள் துடித்துப் போவாள்' என்று மனம் கதறுகின்றது.

கண்களை மூடி எண்ணங்களில் மூழ்கி விட்ட லோராவை லேசாக நித்திரை அணைத்துக்கொள்ள ஆரம்பித்திருந்தது.

"லோரா! லோரா!"

அதோ வெலிங்டனின் குரல் கேட்கிறது.அவள் துடித்தெழுந்தாள். தாமதித்தால் ஆபத்து என்பதை அறிவாள். ஓடோடிச்சென்று கதவைத் திறந்தாள்.

வெலிங்டன் நின்றிருந்தான். அவளுக்கு மேலாக அவனுடைய கண்கள் கட்டிலை எட்டிப்பார்த்தன.

"தூக்கமா?" மென்மையாகக் கேட்டான்.

"யெஸ் டார்லிங்"

"குட்!"

அப்படியே அள்ளித் தூக்கிக்கொண்டு போய் கட்டிலில் போட்டான்.

அவனுடைய சரச லீலைகள் ஆரம்பமாகின.

"வரவர உனக்கு என்னைப் பிடிக்கிறது இல்லையா"

அவள் புன்னகைத்தாள்

"உன்மேல் உள்ள அன்பினால்தான் உன்னை க் கடத்திக்கொண்டு வந்தேன். ஒரு கன்னியாஸ்திரியைப் போல் மடத்தில் வாழ்ந்துகொண்டிருந்த உனக்கு என்னைப் பிடிக்கவில்லை என்று நினைத்தேன். அதனால்தான் இப்படி அடைத்து வைத்திருக்கிறேன். நீ என்னை விரும்பினால் இந்த சொர்க்கத்தை உன் காலடிக்கு கொண்டு வருவேன். அந்த குருடி, அதுதான் உன் அம்மா அவள் எங்கிருக்கிறாள் என்று தெரியாது. நீ விரும்பினால் அவளையும் கூட்டிவருவேன். பார்! இன்று உனக்கொரு அழகான படகு வாங்கினேன். கடலுக்கு கூப்பிட்டால் எனக்கு நீந்தத் தெரியாது என்று அடம்பிடிப்பாய் அல்லவா? அதனால்தான் இந்த படகு இன்று நாங்கள் கடலுக்கு போவோம்...!"

அவன் மூச்சுவிடாமல் பேசினான். தலையிலிருந்து பாதங்கள் வரை முத்தமிட்டான். திடீரென அவன் பேச்சு நின்றது. நனைந்து கிடந்த தலையணையை தொட்டுப் பார்த்தான். "ஓ! நீ தூங்க வில்லை. அழுதுகொண்டிருந்திருக்கிறாய்! இல்லையா?"

அவளை வெறித்தான்.

"ஏன் அழுதாய், நாடகமாடி போடுகிறாய்" வார்த்தைகள் கனல்துண்டுகளாக விழுந்தன. அதன்பிறகு அந்த பூவுடல் துவம்சமானது.

ஒவ்வொரு அடிக்கும், அறைக்கும், உதைக்கும் லோரா பறந்து விழுந்து சுருண்டாள்,

இரண்டு நாட்களின் பின்னர் லோராவை படகுப் பயணத்துக்காக வெலிங்டன் கூட்டிச்சென்றான். "லோரா! வெறுமனே ஒன்றும் தெரியாத வண்ணமாக வளர்ந்திருக்கிறாய். நீச்சல் தெரியாது, டிரைவிங் தெரியாது என்ன இது, இனிமேல் உனக்கு எல்லாவற்றையும் பழக்கித் தருகிறேன்..." அவள் நாடியைப் பிடித்து அன்பாகச் சொன்னான்.

அவள் புன்னகைத்தாள்.

படகுப் பயணம் உல்லாசமாகவிருந்தது. மிதக்கும் படகிலும் அவளை அணுஅணுவாக அநுபவிக்கவேண்டும் என்ற வேட்கை அவனுக்கு. அதற்காகவே இந்த ஏற்பாடு என்பதை அவள் அறிவாள். மகா கேவலமான ஒரு பைசாசம், ஸ்திரீலோலன் இவன் என்பதை அவள் என்றோ உணர்ந்துவிட்டாள். அதனால், அவள் என்ன சொன்னாலும் ஒரு புன்னகையைச் சிந்துவதுடன் நிறுத்திவிடுவாள். பேசுவது ஆபத்து. அவளை வசீகரிக்கும் மருந்து அவள் புன்னகைதான்.

கடல்மாதா மீது ஒரு சிறு பெண்ணை வைத்துக்கொண்டு வெலிங்டன் ஆடிக்கொண்டிருந்த வெறித்தனத்தை பொறுக்கமுடியாமலோ என்னவோ திடீரென அலைகளின் ஆக்ரோஷம் அதிகரித்தது. பலமான காற்று வீசியது. படகு ஆட்டம் போட்டது. பேயாட்டம் ஆடியது.

வெலிங்டன் பதறிப்போனான். திடீரென அவள் கையிலிருந்து எகிறி விழுந்தாள் லோரா. ஒரு பட்சியாகப் பறந்த அவள் கடலில் விழுந்துவிட்டாள்.


"ஐயோ! லோரா! லோரா!!

வெலிங்டன் ஒரு யானையின் பிளிறலாக அலறினான்.

நீர்த்தடாகத்தில் கூட நீந்தமுடியாத அவள் இந்த பேயாட்டம் போடும் அலைகடலில் எப்படி நீந்தப் போகிறாள்.

"லோரா! லோரா!லோரா!"

ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தபடகு அவனை அங்குமிங்கும் வீசியெறிய அவன் கதறி கதறி அங்குமிங்கும் மோதி மோதி விழுந்தான்.



**எழுதுவது கே. வி.**

ஆனால், லோரா வேகமாக நீந்தினாள். அவளுக்கு நன்றாகவே நீந்தத் தெரியும். அவள் நீச்சல் போட்டிகளில் பரிசு பெற்றவள். இந்த இரகசியத்தை வெலிங்டன் அறியாமல் பாதுகாத்து வந்தாள். அது என்றைக்காவது தன்னைப் பாதுகாக்கும்; தனக்கு உதவும் என்று அவள் நினைத்திருந்தாள்.

இதோ! அந்த சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. அற்புதமாக நீந்தி கரையொதுங்கியவேளையில் காற்றின் வேகம் தணிந்திருந்தாலும் அதுவீச்சுடன் சுழன்று கொண்டிருந்தது.

படகில் இருந்தபோது வெலிங்டனின் சரச சல்லாபத்தின் இறுக்கமான பிடிக்குள் சிக்கிக் கிடந்த வேளையில் அவள் நாசூக்காக வீட்டின் வாசற்கதவைத் திறக்கும் ரிமோட் கொன்ட்ரோலை எடுத்துக் கொண்டு விட்டாள். காற்றும் பெய்த கடும் மழையும் அவளுக்கு உதவின.

கரை சேர்ந்த லோரா மணலில் விழுந்தும் எழும்பியும் வீட்டை நோக்கி ஓடினாள். அவள் நிர்வாணமாக இருந்தாள். வாயில் ரிமோல்ட் கன்ட்ரோல் இருந்தது.

கதவைத் திறந்து உள்ளே நுழைந்த லோரா படபடவென மின்னல் வேகத்தில் காரியங்களில் ஈடுபட்டாள். உடலைத் துவட்டிக்கொண்டு தனக்குத் தேவையான உடுதுணி உட்பட சகலவற்றையும் ஒரு பையில் போட்டுக்கொண்டு வேகமாக வெளியேறினாள்.

வீதிவழியே வேகமாக ஓடுகிறாள். ஓடும் வழி முழுவதும் காணப்படும் விளக்குக் கம்பங்களின் மின்குமிழ்களை கல்லெறிந்து பளீரென சிதறச்செய்தவண்ணமே ஓடுகிறாள்.

இருள்செறிந்து விடுகிறது. காற்று நின்று விட்டது.

ரயில்வே கேட் மூடப்பட்டிருந்தது. இதேவேளை -

வெலிங்டன் கரைசேர்ந்து விட்டான். மிகவும் சோகத்தில் ஆழ்ந்துவிட்ட அவன் தள்ளாடித் தள்ளாடி வீட்டுக்கு வந்தபோது அவனுக்கு அதிர்ச்சிகாத்திருந்தது.

வீட்டின் கதவு திறந்துகிடக்கிறது.

அவன் திடுக்கிட்டான். வேகமாக உள்ளே ஓடினான்.

ஆ! லோராவின் உடுதுணிகளெல்லாம் இழுக்கப்பட்டு சிதறிக்கிடக்கின்றனவே!

என்ன அதிசயம்...! எங்கே போனாள்?

அவன்சுற்றும் முற்றும் பார்த்தான்.

"லோரா!"

என்று கத்தினான். அப்புறம் வீட்டைச் சுற்றி ஓடினான். "லோரா! லோரா!" என்று அலறினான்.

அவன் வீதிப் பக்கமாக ஓடிவந்து பார்த்தபோது வெகுதொலைவில் ஒரு புள்ளியாக...

அது லோராதான். அவன் கார் கரேஜுக்கு ஓடினான். அவனுடைய அந்த வாகனம் உறுமலோடு வெளியில் பாய்ந்தது.

முன்விளக்குகளை நெடுக பாய்ச்சியவண்ணம் அது சீறிக்கொண்டு முன்நோக்கி புயலென விரைந்தது.

புள்ளியாகத் தெரிந்த லோராவைக் காணவில்லை.

அதேவேளை மூடப்பட்டுக் கிடந்த ரயில்வேகேட், மேலே உயர்ந்தது. எக்ஸ்பிரஸ் ரயில் கடவையை கடந்துவிட்டிருக்கக்கூடும். லோரா அதற்கு முன்னரே ரயில் தண்டவாளத்தை கடந்து விட்டிருப்பாள்.

அது எப்படி முடியும்? அவ்வளவு வேகமாக அவளால் கடந்துவிட்டிருக்க முடியுமா?

ஒருவேளை எக்ஸ்பிரஸ் லோராவை பந்தாடி, துவம்சம் செய்து விட்டிருக்கலாம். இவ்வாறெல்லாம் எண்ணமிட்ட அவனால் தன்னை கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

ரயில் கேட்டை கடந்துகார் மின்னல் வேகத்தில் பறந்தது.

அதேவேளை-

எக்ஸ்பிரஸ் புயல்வேகத்தில் வந்துகொண்டிருந்தது.

படீலென இடி முழக்கமொன்று பிரதேசத்தையே நடுங்கவைத்தது. காரை மோதித்தள்ளிய ரயில் ஓர் ஆட்டுக்குட்டியை இழுத்துக்கொண்டு போவதுபோல் அதனை இழுத்துக் கொண்டு சென்றது. ஏதோ விதத்தில் கடவையை தாக்கிவிட்ட லோரா பற்றைக் குள்ளிருந்து வெளியில் வந்தாள்.

வெலிங்டனை காரோடு இழுத்துச் செல்லும் எக்ஸ்பிரஸை விறைத்துப்போய் பார்த்துக்கொண்டு நின்றாள்.

ஏனோ அவள் கண்கள் நீரில் மிதந்தன.

(முற்றும்)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.



# கவிதைப் புனல்

தயாரிப்பு: அஸ்மினா

## சங்கத் தமிழ் கவிபாடு!

முத்துக் கவித் தமிழ்
சித்தம் சிலிர்த்திட
நித்தம் கவிதைகள் கூறு! - இங்கு
ரத்தம் குடிப் பவர்
பித்தம் தெளிந்திட
கத்தும் கடலென பாடு!

கொட்டும் மழையிலும்
வெட்டும் வெயிலிலும்
சிட்டு தவிப்பதை பாடு! - பேய்
சட்டச் சடவென
கொட்ட மடிக்குது
வெட்டி அழித்ததைப் பாடு!

புட்டி மதுவிலே
முட்டி மகிழ்ந்திடும்
கெட்டித் தனத்தை நீக்கு! - உடல்
கட்டுக் குலைத் துயிர்
விட்டுப் பிரியு முன்
மட்டித் தனமதை போக்கு!

அட்டைத் தனம் விடு!
பெட்டைத் தனம் சுடு!
வெட்டித் தனத்தினை ஒட்டு! - துயர்
விட்டு விலகிட
விட்டுக் கொடுத் துத்தன்
பட்டு மனத்தினை காட்டு!

சிங்கம் புலி விடு!
தங்க மனம் நடு!
எங்கும் அமைதியே நாடு! - எங்கள்
மங்கை மலர் கலை
தங்கை யென நினை
சங்கத் தமிழ் கவிபாடு!

வங்கம் அதிர்ந்திட
சங்கை முழங்கிடும்
கங்குல் அரக்கனை எரிப்போம்! - இங்கு
பங்க மடைந் தவர்
பங்கை வழங்கி நாம்
பங்கயமாய் நிதம் சிரிப்போம்!

பொத்துவில்
அஸ்மின் உதுமாலெவ்வை.

## மாயை

காற்றை அடக்கிவிட்டதாய்
ஆர்ப்பரித்தது பலூன்
வெளியில் பரந்து நின்று
மௌனப் புன்னகையை
வெளிவிட்டபடி காற்று
தொடர்ந்து ஏழு அல்ல
எத்தனை பலூன்களில்
அடைபட்டு விடுபட்டாலும்
காற்றுக்கு அழிவில்லை!

சூ.மதன்,
உவர்மலை.

## அவமானம்

எனக்கு
அவன்
அடித்தான்
அவன் கையிலே
இரும்புத் துப்பாக்கி
தலையில் இரும்புச் சட்டி
உடல் முழுவதும்
ஆயுதங்கள் தொங்கின.

என்னை
அடிமைப்படுத்த
நினைப்பவன்
நாடு முரடான
தெருவில்
முட்டுக்கால்
போடச் சொல்லி
கன்னத்திலும்
நெஞ்சிலும்
பலமாய் அடித்தான்.

என் வயதையொத்த
சிறுவர்களும்
அரும்புமீசை
அண்ணன்களும்
தாடி வளர்த்த
அண்ணன்களும்
தலைமுடி பழுத்த
அப்பாக்களும்
அவன்
அடியிலிருந்து
தப்புவதற்காய்
முட்டுக்காலில்
கிடந்தார்கள்
மிகவும் வலித்தது.

கலிஸ்டி றொபேட்.

## ஒரு கருவறையின் எதிர்பார்ப்பு....!

எனக்குத் தெரியும்...
என் தாயே
நீ அழுவாய்...
நான் சிறையில் தவிக்க....

உன் தொப்புள் கொடி
வலிக்கும்..
கொடுமையின் உச்சம்
என் உடலில்
குடி கொண்டிருப்பதால்...

இன்று உன்
கர்ப்பப்பையானது
கலங்கித் தவிக்கும்...
என் கண்ணில்
இரத்தம் சொட்டுவதால்....

உன் பெருங்குடலும்
சிறுகுடலும்
புண்ணாகிப்போகும்
நான்
பட்டினியால்
வாடுவதால்....

உன்
'கரு'வின் வாசலில்
காத்திருந்தேன்....

அது ஒரு
பௌர்ணமியின்
பூரிப்பு....

புதிதாய்
பார்க்கப்போகும்
பூமியை நினைத்து....

இன்று
சிறை வாசலில்
காத்திருக்கின்றேன்....

புதிதாய்
பார்க்கப்போகும்
பூமியை நினைத்து...

அதே
பௌர்ணமியின்
பூரிப்போடு....

எஸ்.ஜெகன் (நானாட்டான்),
தமிழ் அரசியல் கைதிகள் பிரிவு,
புதிய மெகசின்சிறை,
கொழும்பு -09.




## அகதியின் பாடல்



உணர்வு வாசகர்களே! இவ்வாரம் எனக்குள் ஊற்றெடுத்தது கவிதையே. சற்றுப் பருகிப் பாருங்களேன்.

யுத்தம் செய்து கண்டதென்ன
தாண்டவக் கோனே! - எங்கள்
யுகங்கள் தானே இருண்டு போச்சு
தாண்டவக் கோனே!
நித்தம் சிந்தும் ரத்தத்தினால்
தாண்டவக் கோனே! - எங்கள்
நிம்மதிதான் தொலைந்து போச்சு
தாண்டவக் கோனே!

வீடுவாசல் இழந்து விட்டோம்
தாண்டவக் கோனே! - நாளும்
வீதியிலே உண்ணுகிறோம்
தாண்டவக் கோனே!
நாடுபோகும் போக் கினைப்பார்
தாண்டவக் கோனே! - எலும்புக்
கூடுதானே மிஞ்சி நிற்கும்
தாண்டவக் கோனே!

ஆடுமாடாய் நடத்துகிறார்
தாண்டவக் கோனே! - அதனால்
ஆளவழி தேடுகிறோம்
தாண்டவக் கோனே! - பேய்
ஆடுகின்ற ஆட்டத்தைப்பார்
தாண்டவக் கோனே! - அதை
அடக்கிவிட ஆளனுப்பு
தாண்டவக் கோனே!

கேடுகெட்ட ஆசைகளால்
தாண்டவக் கோனே! - மனிதன்
கேவலமாய் ஆகிவிட்டான்
தாண்டவக் கோனே!
பாடுபட்டு வளர்த்த பயிர்
தாண்டவக் கோனே - இங்கே
பாதியிலே அழிகிறதேன்
தாண்டவக் கோனே!

தலைநகரம் தேடிவந்தான்
தாண்டவக் கோனே! - அவன்
'தலை' நகரில் உருண்டதுவாம்
தாண்டவக் கோனே! - கொழும்பு
கொலை நகரம் ஆனதுவே
தாண்டவக் கோனே! - அதை
கொடும் நரக மாக்கியதார்
தாண்டவக் கோனே!

தமிழ் மொழியை பேசிவிடின்
தாண்டவக் கோனே! - இங்கே
தறுதலைகள் கைது செய்வர்
தாண்டவக் கோனே!
தலைநகரில் வாழ்ந் திடுவோர்
தாண்டவக் கோனே! - விரைவில்
தமிழ் மொழியை மறந்திடுவார்
தாண்டவக் கோனே!

வயலுக் கின்று போகப்பயம்
தாண்டவக் கோனே! - எம்மை
வளைத்து நின்று அறுக்கிறார்கள்
தாண்டவக் கோனே!
புயலடியால் படும் வதையால்
தாண்டவக் கோனே!-தமிழன்
புலியெனவே மாறுகிறான்
தாண்டவக் கோனே!

பஸ்ஸிலையும் ஏறப்பயம்
தாண்டவக் கோனே! - இங்கு
பார்சல் குண்டு வெடிக்கிறதாம்
தாண்டவக் கோனே!
கடலுக்குள்ள மீன்பிடித்தால்
தாண்டவக் கோனே! - எமக்கு
கண்டபடி சுடுகிறார்கள்
தாண்டவக் கோனே!

காட்டுக்குள்ளே வாழும்போது
தாண்டவக் கோனே! - எம்மை
கணக்கிலுமே எடுத்திடாதோர்
தாண்டவக் கோனே! - இன்று
ஓட்டுக் கேட்டு ஓடிவாரார்
தாண்டவக் கோனே! - அவரின்
சேட்டுக் கொலரைப்பிடித்து அறை
தாண்டவக் கோனே!

நாட்டில் வாழும் வாழ்வை விட
தாண்டவக் கோனே! - நாம்
நடுக்கடலில் வீழ்ந்திடலாம்
தாண்டவக் கோனே!
பாட்டில் இதைப் பாடிவிடின்
தாண்டவக் கோனே! - இங்கு
பரிகசிக்க ஆளிருக்கார்
தாண்டவக் கோனே!

உணர்வுகள் தொடரும்....

## சமத்துவம்

வாகரை வயிரமுத்து வீட்டுக் கதவும் ஜன்னலும்
வறக்காப் பொலயில்
வண்டாவின் வீட்டில் திறக்கிறது
கன்னன்குடா கந்தப்போடியின் வீட்டு
பொங்கல் பானையும் குத்துவிளக்கும்
களுத்துறையில்
காமினி வீட்டுக்குள் மின்னுகின்றன
கட்டைபறிச்சானில் கந்தசாமியின்வீட்டு
சீ.டி.எம்.ஏ.தொலைபேசி
கட்டுகஸ்தோட்டயில்
கருணாதிலகவின் வீட்டில் பேசுகிறது
சம்பூரில் சதாசிவம் வீட்டு தொலைக்காட்சி
சமணபுரவில்
சமிந்தவாசின் வீட்டில் பார்க்கிறது
திக்கோடையில்
திருச்செல்வம் ஓடிய மோட்டார் சைக்கிள்
திகம்புவயில் தீலக ரெட்ணா ஓடுகிறான்
கொக்கட்டிச்சோலை குமரகுருவின் வீட்டு தளவாடம்
குளியாப்பிட்டியில்
கொடித்துவக்கு வீட்டுக்குள் இருக்கிறது
பழுகாமத்து பாவிப்போடியின் தோணியும், வலையும்
பகிலவத்தையில் பனகவண்டார மீன்பிடிக்கிறான்
அம்பிளாந்துறை அழகுராசாவின் வீட்டு அலுமாரி
அநுராதபுரத்தில்
அத்துக்கொறளயின் வீட்டில் இருக்கிறது
படுவான்கரையின்
பசுமை நிலத்தில் மேய்ந்த மாடுகளும், கன்றுகளும்
பாமன்கடையில் வீதி ஓரத்தில் ஏங்குகின்றன
இது தமிழரின் இடம்பெயர்வால்
சொந்தங்களுக்குக் கிடைத்த சமத்துவம்.

-அம்பிளாந்துறையூர் அரியம்.

## வேதனை

எங்கும் ஆட்கடத்தல்
எதிலுமே ஊழல்கள்
பொங்கும் இனவாதம்
போர் சூழும் அபாயம்
ஓங்கி உயர்ந்து செல்லும்
விலைவாசி உயர்வுகள்
தாங்க முடியாத் துயரங்கள்
தமிழர் படும் வேதனைகள்!

- கவிக்குயிலன்,
சேனையூர்.

## வாழ்வென்ற சொல்லதனைப் பொதுமை செய்வோம்

புறப்படென ஒரு சொல்லுக் கேட்டால் போதும்
பொங்கி யெழும் வேங்கையென பாய்ந்து செல்லும்
மறப்படையின் அங்கம் நாம் அகிலம் எங்கும்
மார்தட்டி மறங்காட்டி விரைவோமென்று
விறல் கூறும் பரம்பரையின் அணியில் நிற்கும்
வீரர் நாம் எரிமலையின் தோழரும் நாம்
புறப்பட்டோம் புறப்பட்டோம் போருக் கென்று
புரட்சியுரு தருங் கவிதை இசைக்க வாரீர்!

பொன்தட்டில் நஞ்சூற்றி பழச்சா றென்று
பொய்யுரைக்கும் வஞ்சகரின் பல்லைத் தட்ட
வன்மையுடன் புறப்படுக எஃகுத் தோழா
வச்சிரம் நீ வானளக்கும் மலையை எல்லாம்
உன் கையால் பொடிபொடியாய் ஆக்கும் சக்தி
அடைந்தவன் நீ ஆழ்கடலின் ஆழம் பார்க்கும்
வன்மகன் நீ வாள் தூக்கு பகையை வெல்வோம்
வாழ்வென்ற சொல்லதனைப் பொதுமை செய்வோம்!

- கவிஞர் சுபத்திரன்.

நல்லூர் இளை நூலகம்

# டெலிவிஷன் பெட்டியை உடைத்த ரசிகர்

தமிழ்நாடு விருதுநகர் மாவட்டம் மம்சாபுரத்தில் சரவணன் என்பவரது வீட்டில் இந்தியா - இலங்கை மோதிய உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை டெலிவிஷனில் கூட்டமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். இந்தியா தோல்வியடைந்ததும் ஆத்திரம் அடைந்த சரவணன் டெலிவிஷன் திரைமீது ஓங்கி குத்தினார். இதில் டெலிவிஷன் பெட்டி உடைந்தது.

தீவிர கிரிக்கெட் ரசிகரான அவர் பின்னர் கூறும்போது, இந்தியா தோல்வி அடைந்ததைவிட தனது டி.வி. உடைந்தது தனக்கு அதிக கவலையை தந்துவிடவில்லை என்றும், இதுபோல இந்திய வீரர்களின் ஆட்டம் நீடித்தால் ரசிகர்கள் தற்கொலை கூட செய்துவிடுவார்கள் என்றும் வருத்தத்துடன் தெரிவித்தார்.

# பாசக்கார குடும்பம்

குட்டி செல்லமாக தனது முகத்தை உதைப்பதை பார்த்து மனசெல்லாம் மகிழ்ச்சியில் துள்ளுகிறது அப்பா சிம்பன்ஸி. ஒரு கையால் குட்டியை அணைத்துக்கொண்டே, இதை பரவசத்துடன் ரசிக்கிறது அம்மா குரங்கு.



அப்பா குரங்கின் பெயர் ஆல்வின். அம்மா பெயர் ஜோடி. இந்த ஜோடிக்கு ஒரு மாதத்துக்கு முன்புதான் குட்டி பிறந்தது. அதன் மீதுதான் அம்மாவும் அப்பாவும் பாசத்தை பொழிகின்றனர். இந்த பாசக்கார குடும்பம் இருப்பது அமெரிக்காவின் ஒக்லஹாமா மாகாணத்தில் உள்ள துல்சா பூங்காவில். 1929ஆம் ஆண்டு முதல் செயல்படும் இந்த பூங்காவின் புது வரவு இந்த குட்டி.

# பத்து ஆண்டுகள் தொடர்ந்த 'நாய்' சண்டை வழக்கு

குஜராத் மாநிலம் அகமதாபாத்தைச் சேர்ந்தவர்கள் முகமது ரபீக், நாசீர் முகமது இருவரும். அடுத்தடுத்த வீடுகளில் வசித்து வருகிறார்கள். நாசீர் தனது வீட்டில் செல்லமாக நாய் ஒன்றை வளர்த்து வந்தார்.

அந்த நாய் காலையில் இருந்து இரவு வரை சத்தமாக குரைத்துக் கொண்டே இருக்கும். இது ரபீக்கின் குடும்பத்தினருக்கு எரிச்சலைக் கிளப்பியது. மகிழ்ச்சியாக டி.வியோ, எப்.எம்.ரேடியோவில் பாட்டோ கேட்க முடிவதில்லை.



இதனால் டென்ஷனான ரபீக், நாசீரிடம் சென்று, "உனது நாயால் எங்களால் ஒரு நிமிஷம் கூட நிம்மதியாக இருக்க முடியவில்லை. இனி உன் நாய் என் வீட்டுப்பக்கம் வந்தால் தொலைத்துவிடுவேன்" என்றார். நாசீரோ, "வீட்டில் நாய் வளர்ப்பது என் இஷ்டம் அதை கேட்க நீ யார்?" என்று சண்டை போட்டார்.

மறுநாள் நாசீரின் நாய் வழக்கம் போல் குரைக்கத் தொடங்கியது. இதனால் ஆத்திரமடைந்த ரபீக் அந்த நாயை அகமதாபாத் நகராட்சி ஊழியரிடம் பிடித்துக் கொடுத்தார். இதையறிந்ததும் நாசீர் வெறி பிடித்தவர் போல் மாறினார். ரபீக்கின் வீட்டுக்குள் அடியாட்களுடன் சென்று அடித்து உதைத்தார்.

இதில் ரபீக் படுகாயமடைந்தார். இதை அடுத்து அவர் நாசீர் மீது அங்குள்ள பொலிஸ் நிலையத்தில் புகார் கொடுத்தார். பொலிஸார் நடவடிக்கை எதுவும் எடுக்காததால் ரபீக் அகமதாபாத் கோர்ட்டில் 1997 ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி வழக்குத் தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி 1999 ஆம் ஆண்டு நாசீரை விடுதலை செய்து தீர்ப்புக் கூறினார். இதனால் ஏமாற்றம் அடைந்த ரபீக் கீழ் கோர்ட்டின் தீர்ப்பை எதிர்த்து ஹைகோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார்.

ஹைகோர்ட்டில் 6 மாதங்கள் விசாரணை நடந்தது. அதன் பிறகு கீழ் கோர்ட் அளித்த தீர்ப்பு சரிதான் என்று ரபீக்கை விடுதலை செய்தது.

ஆனாலும் ரபீக் விடுவதாக இல்லை, ஹைகோர்ட்டின் தீர்ப்பை எதிர்த்து சுப்பிரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார். சுப்பிரீம் கோர்ட்டில் இவ்வழக்கு விசாரணை 7 ஆண்டுகள் இழுத்தடிக்கப்பட்டது.

இவ்வழக்கை கடந்த வாரம் நீதிபதிகள் அகர்வால், நாலேசர், சுதர்சன்ரெட்டி ஆகியோர் விசாரித்தனர். பின்னர் அவர்கள் வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்புக் கூறினார்கள். அப்போது அவர்கள், "முக்கியமான சட்டப் பிரச்சினைகள், சமூகப்பிரச்சினைகளுக்குத்தான் சுப்பிரீம் கோர்ட்டை நாடவேண்டும். சாதாரண நாய்ச் சண்டைக்காக சுப்பிரீம் கோர்ட்டை நாடுவது நன்றாக இருக்காது" என்று கருத்துத் தெரிவித்தனர். இந்த நாய்ச் சண்டை வழக்குக்காக ரபீக்கும் நாசீரும் லட்சக்கணக்கில் செலவு செய்துள்ளனர்.



"சமையலறைக்குப் போன மன்னர் மயக்கம் போட்டுட்டாரே! ஏன்?"
"ராணி பீட்ரூட்டைக் கத்தியால நறுக்கிட்டு இருக்கிறதைப் பார்த்துப் பயந்துட்டார்!"




## கூண்டுக்கிளி

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் பெண் கலைஞர்களின் பெண்மைக்கு ஆதரவான கண்காட்சி நடக்கிறது. ப்ரூக்ளின் அருங்காட்சியகத்தில் நடக்கும் இதில் கயிற்றுச் சங்கிலிக்குள் அதேபோன்ற சங்கிலி உடை அணிந்து காட்சி அளிப்பவர் இத்தாலிய கலைஞர் சிசி.



"சர்வதேச பெண்மைக் கலைகள்" என்ற தலைப்பில் அமெரிக்காவில் இதுபோன்ற பெண்கள் கை வண்ணத்தில் உருவான கலைகளுக்கான கண்காட்சி நடப்பது இதுவே முதல்முறை.

## பணக்காரரின் தாராளம்

ஜப்பானைச் சேர்ந்த கோடீஸ்வரரான ரியல் எஸ்டேட் அதிபர் ஜென்ஷிரோ கவாமோடோ. வயது 75. கடற்கரை ஓரத்தில் இவருக்கு சொந்தமாக அரண்மனை போன்ற பங்களாக்கள் ஏராளமாக உள்ளன.



அவற்றில் சிலவற்றில் ஹவாய் தீவைச் சேர்ந்த ஏழைக் குடும்பங்களை வாடகையின்றித் தங்க வைக்க முடிவு செய்து கடந்த ஆண்டு இறுதியில் விளம்பரம் செய்தார். 3, 000 குடும்பங்கள் வீடு கேட்டு விண்ணப்பித்தன. அவற்றில் 8 குடும்பங்களை கவாமோடோ கடந்த வாரம் தேர்வு செய்தார். அவற்றில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த டோரி அன் (இடது) அவரது 4 குழந்தைகள் இவர்கள். பல கோடி ரூபாய் மதிப்புள்ள பங்களாவின் பளிங்கு குளியல் தொட்டி மீது அமர்ந்து போஸ் தருகின்றனர்.

## திருமணங்கள் நெட்டில் நிச்சயிக்கப்படுகின்றன



திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்று சொல்வார்கள். அது அந்தக் காலம். இந்தக் கம்பியூட்டர் காலத்தில் திருமணங்கள் இணையத்தளத்தில் நிச்சயிக்கப்படுகின்றன.

முன்பெல்லாம் வரன் தேடுவது என்பது கடினமான செயல். திருமண புரோக்கரைப் பார்த்து ஜாதகம் கொடுத்து, அவர் நடையாய் நடப்பார். பொருளாதார நிலை, நிறம், குலம், வேலை எனத் தேவைப்படும் தகுதியுடைய மாப்பிள்ளையையோ அல்லது பெண்ணையோ தேடிக் கொண்டு வருவார். இதில் கால விரயமும், சிரமங்களும் இருந்தன. ஆனால், தற்போது இந்தச் சேவையை பல இணையத்தளங்கள் செய்து கொடுக்கின்றன.

இந்த இணையத்தளங்களில் ஆணோ, பெண்ணோ தங்களது விவரங்களை இலவசமாகப் பதிவு செய்து கொள்ளலாம். எமது விவரங்களுக்கு ஏற்ற வரன்களை உலகம் முழுவதும் இருந்து புகைப்படங்களுடன் கொண்டு வந்த கொடுக்கின்றன இந்த இணையத்தளங்கள். அதிலிருந்து நமக்கு பிடித்த வரன்களை தொடர்பு கொள்ளலாம். பிடித்திருந்தால் திருமணமும் செய்து கொள்ளலாம். பல்லாயிரக்கணக்கான திருமணங்கள் கடந்த சில வருடங்களில் இணையத்தளங்களின் சேவையின் மூலம் நடந்துள்ளன. வரன்களுடன் ஒன்லைனில் 'சாட்' செய்யும் வசதி, பேசும்வசதி போன்றவற்றை கட்டண சேவையாகவும் அளிக்கின்றன இந்த இணையத்தளங்கள். பாரத் மேட், ரிமோனியல், ஷாதி, ஜீவன் ஷாதி, மேரேஜட் மேட்ச், நிக்காஹ் போன்ற பெயர்களில் இணையத் தளங்கள் உள்ளன. பெரும்பாலான திருமண தகவல் இணையத் தளங்கள் இலவச சேவை அளித்தாலும், வரன்களின் முகவரி மற்றும் கூடுதல் தகவல்கைள அறியக் கட்டணம் வசூல் செய்கின்றன. சில இணையத்தளங்கள் நீங்கள் விரும்பும் ஆண் - பெண் பற்றிய தகவல்கள் சரிதானா? என்று விசாரித்து சொல்லும் பணியையும் செய்கின்றன. ஆனால் அதற்கு தனிக்கட்டணம் உண்டு.

# கடலில் மிதந்தார் 89வயது 'இளைஞர்'

இன்றைய இளைஞர்கள் யோகா கற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, தூத்துக்குடி திரேஸ்புரம் கடலில் 89 வயது 'இளைஞர்' தம்பிரான் மல்லாந்து மிதந்தார்.

நெல்லை டவுனைச் சேர்ந்தவர் தம்பிரான். வருவாய்த்துறையில் நில அளவையாளராகப் பணிபுரிந்து 1973 இல் ஓய்வு பெற்றார். தற்போது, தூத்துக்குடி மில்லர் புரத்தில் வசித்து வருகிறார். அவருக்கு யோகா மற்றும் ஆன்மிகத்தில் அதிக ஈடுபாடு உண்டு.

மனதை ஒருமுகப்படுத்தும் யோகா குறித்து தனது வீட்டில் சிலருக்குப்பயிற்சி அளித்து வருகிறார்.

# ரூ 35 லட்சம் சீ.டிக்கள் உருளை ஏற்றி அழிப்பு

வெளிநாடுகளில் இருந்து கடத்தி வரப்பட்ட ரூ. 35 லட்சம் மதிப்புள்ள திருட்டு சி.டிக்கள் மற்றும் டி.வி.டிக்கள் உருளை ஏற்றி அழிக்கப்பட்டன.



வெளிநாடுகளில் இருந்து சிலர் கள்ளத்தனமாக சி.டிக்கள் மற்றும் டி.வி.டிகேசட்டுக்களை விமானம் மூலம் சென்னைக்கு கடத்தி வருகின்றனர். அவற்றை சுங்க இலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்து, கடத்தல்காரர்கள் மீது வழக்குத் தொடர்ந்து வருகிறார்கள்.

இவ்வாறு கடந்த ஒருவருடமாகப் பறிமுதல் செய்து வைக்கப்பட்டிருந்த கடத்தல் சி.டிக்கள் மற்றும் டி.வி.டிக்கள் சென்னை மீனம்பாக்கம் விமான நிலைய வளாகத்தில் வைத்து அழிக்கப்பட்டன. ரோட் உருளைகள் மூலம் அவற்றை அழிக்கும் பணியை சுங்க இலாகா ஆணையாளர் தொடங்கி வைத்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

"சென்னைக்கு சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் இருந்து கள்ளத்தனமாக சி.டிக்கள் மற்றும் டி.வி.டிக்கள் கடத்தி வரப்படுகின்றன. கடத்தல்காரர்கள் அவற்றை பிஸ்கெட் மற்றும் பால்பவுடர் பக்கெட்டுகளுக்கு மத்தியில் மறைத்து வைத்து கடத்தி வருகின்றனர். இவ்வாறு கடந்த ஒரு வருடமாக கடத்தி வரப்பட்ட 35 ஆயிரம் ஹிந்தி, ஆங்கில சினிமாப் படக் கசட்டுக்களைப் பறிமுதல் செய்து வைத்து இருந்தோம். அவற்றின் மதிப்பு 35 லட்சம் ரூபா (இந்திய ரூபா) ஆகும். இது தொடர்பாக கடத்தல்காரர்கள் மீது 54 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கோர்ட்டில் வழக்குகள் நிலுவையில் உள்ளன. அந்த கசட்டுகளை இன்று சுமார் 3 மணி நேரத்தில் அழித்து விட்டோம்" - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

சி.டிக்கள், டி.வி.டிக்கள் அழிக்கப்படுவதை ஏராளமான பொதுமக்கள் கூட்டமாக நின்று வேடிக்கை பார்த்தனர்.

# நாவினால் பிரஸ் பிடித்து ஜனாதிபதி அப்துல் கலாம்

புதுச் சேரியைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர் ஒருவர் தனது நாவினால் தூரிகை பிடித்து 127 மணிநேரத்தில் ஜனாதிபதி அப்துல் கலாமின் உருவப்படத்தை வரைந்து லிம்கா சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளனர்.



புதுச்சேரி கிருஷ்ணா நகரைச் சேர்ந்தவர் ஆர். ராஜேந்திரன். பி.எஸ்.சி. பட்டதாரியான இவருககு சின்ன வயதிலிருந்து ஓவியம் வரையும் ஆர்வம் ஏற்பட்டுள்வது. தூரிகையை கையினால் பிடித்து ஓவியம் வரைந்தவர்கள் நிறையச் சாதனைகளை செய்திருப்பதால், வித்தியாசமான முறையில் ஓவியம் வரைந்து சாதனை படைக்க ராஜேந்திரன் விரும்பினார். தனது நாவினால் தூரிகையை பிடித்து ஆயில் பெயின்டிங் ஓவியம் வரையும் முயற்சியில் இறங்கினார்.

கடந்த ஏழு ஆண்டுகளாக அந்த முயற்சியல் ஈடுபட்டு வெற்றியும் கண்டார். தொடர்ந்து, தனது நாவினால் தூரிகையைப் பிடித்து 127 மணி நேரத்தில், 10 அடி உயரம் ஏழு அகலத்தில் ஜனாதிபதி அப்துல் கலாமின் உருவப்படத்தை, சென்னை கோல்டன் பீச்சில் பொதுமக்கள் முன்பு வரைந்து சாதனை படைத்தார். இச் சாதனை இந்த ஆண்டின் லிம்கா புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

## மௌனம்

*"நீ என்னைக் காதலிக்கிறாயா?"*
*-என்று கேட்டேன்!*
*அவள் மவுனமாக இருந்தாள்...*
*"உன் உறவுகளைத் துறந்துவர*
*உள்ளமில்லையா" என்றேன்!*
*இப்போதும் மவுனம்...*
*"நீயில்லாவிட்டால் நிஜமாகவே*
*நான் செத்து விடுவேன்"*
*என்றேன்!*
*இப்போதும் சலனமின்றி*
*இருந்தாள்...*
*"இனியும் இம்சிக்காதே!...*
*உன் முடிவைஉடனே சொல்...*
*நம் காதல் வாழுமா!*
*வீழுமா?..."*
*இதற்கும் கூட அவளிடம்*
*பதிலில்லை!*
*- எத்தனை பேசியும் அவள்*
*பதிலே பேசவில்லை...*
*எப்படிப் பேசும் புகைப்படம்!*

யாழ்ப்பாணம்.




## நன்றியுள்ள நாய்..!



"என்ன இந்த நாயின் விலை 5 ஆயிரம் ரூபாவா? அநியாயமாக இருக்கே..!"

" சார்! இது மிகவும் நன்றியுள்ள நாய். இருந்த இடத்தை எப்போதும் மறக்காது. அதனால்தான் இந்த விலை"

"எதனால் இந்த நாயை மிகவும் நன்றியுள்ளது என்று சொல்கின்றீர்கள்?"

இதுவரை இந்த நாயை பத்துப் பேருக்கு விற்றிருக்கின்றேன். இருந்த இடத்தை மறக்காமல் இங்கேயே திரும்பி வந்திடுச்சு. அதனால்தான் சொல்கின்றேன்"

"அப்படியா .....! .....! .....! .....! ......! ......!"

## த.த்.து.வ.ம்

**சோகம் :** வாழ்க்கையில் இது ஏற்படுவது வழமை. இதுவே வாழ்க்கையானால் போகும் உன் இளமை.

**சூரியன் :** இவன் உதிப்பதால் உலகில் கிடைக்கும் ஒளி. இதனை உணர திறக்க வேண்டும் உன் விழி.

**மிதி:** உன்னை நீ மிதிப்பது வேடிக்கை , ஆயினும் அடுத்தவனை நீ மிதிப்பது வாடிக்கை .

**உரசல் :** தங்கத்தில் இதனைச் செய்தால் தரம். ஆனால், சிங்கத்தில் இதனைச் செய்தால் வீரம்.

**பால்:** இதன் வெள்ளை நிறம் உணர்த்தும் தூய்மை. ஆன்ால், இதுவே பிள்ளைக்கு பாசம் உணர்த்தும் தாய்மை.

## குறும்பு!




## 2008 ஒலிம்பிக் பதக்கம்!



அடுத்த ஆண்டில் பீஜிங் நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கென வெளியிடப்பட்ட பதக்கங்களை சிறுவன் ஒருவன் காண்பிக்கின்றான் .

## வித்தியாசமான ஆஸ்ரே!




சிங்கப்பூரின் புற்றுநோய் தடுப்புச் சங்கத்தினால் வித்தியாசமான முறையில் வடிவமைக்கப்பட்ட சிகரட் ஆஸ்ரே இது. சிகரட் பிடிப்பவர்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவே இந்த ஏற்பாடு.



ஜப்பானின் சன்யோ நிறுவனம் ஓசோன் வாயுவைப் பயன்படுத்தி தோல் பொருட்களை சுத்தம்செய்யும் இயந்திரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.




## தண்ணீரில் ஓடும் சைக்கிள்!



சீனாவில் ஒருவர் வடிவமைத்த விசித்திரமான சைக்கிளே இது . இந்தச் சைக்கிளைத் தண்ணீரிலும் செலுத்திச் செல்ல முடியும். நமது நாட்டிற்கு இது பாவனைக்கு வராதா என்று நினைப்பது புரிகிறது.

## டூ இன் வன்



நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி ...



# அம்மாவுக்கும் டீன் ஏஜ் பெண்ணுக்கும் அவசியம்...



மகள் பருவம் அடையும் பொழுது ஒவ்வொரு அம்மாவுக்கும் பலவிதமான உணர்ச்சிக் கொந்தளிப்புகள் ஏற்படுகின்றன.

பிரதானமாக தனது மகள் தன்னை விட்டு சற்று விலகிப் போவது போல் நினைத்து டென்சன் ஆகின்றார் அம்மா. உடலில் ஏற்படும் மாறுதல்கள் மனதளவில் மகளையும் பாதிக்கின்றன என்பதே உண்மை. ஒருவிதத்தில் அவளது சுதந்திரம் சற்றுக் குறைந்துவிடுகின்றது. அவளது மாதவிலக்கின் மாதம் திகதியினைக் கவனத்தில்கொள்ள வேண்டும் என்பது அவளுக்குப் பாரமே. மேலும் தூக்கத்தில் ஆடையில் படும் கறைகளைப் பற்றி அண்ணன், தம்பி எனப் பலர் வாழும் குடும்பத்தில், அதுவும் 10-11 வயதிற்குள் பருவத்தினை அடையும் குழந்தைகளுக்கு, இது ஒரு தண்டனை போல் தோன்றும். இது அவளை கோபம் கொள்ளவும் செய்யும். அம்மாவின் சொல்லை அசட்டைசெய்யும் போக்கு ஏற்படும்.

இதனால், தன் பெண் தன்பேச்சைக் கேட்பதில்லையே, இது எங்குபோய் முடியுமோ என அம்மாக்கள் வேண்டாத கற்பனையில் கவலைப்படுகின்றனர்.

சிறுபெண்ணின் உடலில் அடுத்து வெளித்தெரியும் மாறுதல்கள் அவளது மார்பகங்களும், இடுப்பும். இடுப்பு சற்று அகலமாக வளரும். இக்காலங்களில் சிலருக்கு மார்பக வலி இருக்கலாம். ஒரு மார்பகம் முதலில் வளரலாம். ஒன்றினை விட மற்றது பெரிதாகவோ, சிறியதாகவோ இருக்கலாம். இது சாதாரணமானதே. ஆனால், இந்த வளர்ச்சி ஒரு பெண்ணுக்கு பிறர் தன் வளர்ச்சியினை மட்டுமே உற்றுநோக்குவதனைப் போன்ற தர்மசங்கடத்தினை உருவாக்கும். இக்காலங்களில் தளர்வான ஆடைகள் பெண்ணுக்கு எளிதாக இருக்கும். உடலின் மறைவான இடங்களில் திடீரெனத் தோன்றும் முடியும் பெண்ணை சங்கடப்படச்செய்யும்.

அநேக சிறுமிகளுக்கு முகப் பருத் தொல்லை ஏற்படும். ஹோர்மோன்களின் மாறுதல்கள் இதற்குக் காரணமாகின்றன. அது போன்று இவர்களுக்கு அதிக வியர்வையும் வியர்வையின் நாற்றமும் இருக்கும். ஆகவே, சுகாதாரமான சோப், பவுடர் முதலியவற்றினை இவர்கள் முறையாகப் பயன்படுத்தவேண்டும். அன்றாட குளியல் சுத்தமான ஆடை இவை மிகவும் அவசியம். எனவே, ஒவ்வொரு அம்மாவும் செய்யவேண்டியது என்னவெனில், முதலில், அவளது வயதிற்குத் தேவையான தகவல்களை அவளுக்கு எடுத்துச் சொல்வது. இரண்டாவது அவளது சந்தேகங்களுக்கு முறையான பதில் சொல்ல நீங்கள் இருக்கின்றீர்கள் என்பதனை உணர்த்துவது. உங்கள் பெண் தனது அந்தரங்க விடயங்கள் தொடர்பாக ஏதாவது கேட்டால் பிறகு சொல்கிறேன் என்று ஒதுக்கிவிடாதீர்கள். அவள் அக்கேள்வியினை, நான்குநாட்களாக குழம்பியோசித்து கேட்டிருக்கலாம். ஆக நீங்கள் சற்று அலட்சியப்படுத்தினாலும் அது அவளை வெகுவாகக் காயப்படுத்தலாம். இயற்கையான நிகழ்வுகளை ஏதோ பூச்சாண்டி போன்று பயமுறுத்தாதீர்கள். பருவகாலத்தினை தொடும் மொட்டுகளை கையாள புன்னகையும், நகைச்சுவை உணர்வும், பொறுமையும் தேவை என்பதனை முதலில் நீங்கள் உணருங்கள்.

### மாறுதல்களின் ஆரம்பம்

6-7 படிக்கும் பெண்கள் உடன் படிக்கும் மாணவர்களை விடச் சட்டென உயர்ந்துவிடுவர். ஆனால், ஆண்பிள்ளைகள் 13, 14 வயதிற்கு மேல்தான் நன்கு வளர ஆரம்பிப்பர். பெண் வளரும் பொழுது அவளின் பாதங்கள் தான் வேகமாக வளரும். பெண் உயரத்தில் நன்கு வளர்ந்து முடிந்த நிலையில் அந்தப் பாதங்கள் உடலுக்கேற்ற சரியான அளவில் இருக்கும். அநேக பெண்கள் பருவமடைந்த 1-4வருடத்திற்குப் பிறகு உயரமடைவதில்லை. உடல் உறுப்புகளின் மாற்றங்கள், வளர்ச்சி இவை ஒரு பூ, காய், கனி, விதை என்பது போன்ற இனவிருத்திதான் என்பதனை உணரும்போது எண்ணச் சிதறல்கள் கட்டுப்படும்.

### மாதவிலக்கு

மாதவிலக்கு என்பது வெளியில் தெரியும் உள்ளுக்குள் நடக்கும் தெரியாத செயலின் வெளிப்பாடு. ஹோர்மோன்களின் பொறுப்பில் உள்ள செயல். இது ஒரு பெண்ணுக்கு 8-9 வயதிலிருந்து 11-14 வரையில் ஏற்படக்கூடிய ஒரு நிகழ்வு. இதன் முன்னோடியாக மார்பக வளர்ச்சியும் பிறப்புறுப்பினைச் சுற்றி முடிவளர்தலும் ஏற்படும். இந்த மாதவிலக்கு பெண்ணில் 40-50 வயதுகாலம் வரை தொடரக்கூடிய ஒன்று. சில இளம்பெண்களுக்கு, முதல் மாதவிலக்கு நிகழ்விற்குப் பிறகு அடுத்து சில மாதங்கள் இல்லாமல் இருக்கலாம். அல்லது ஒரு மாதம்விட்டு அடுத்த மாதம் சற்று அதிக உதிரப்போக்கு இருக்கலாம். இதற்கெல்லாம் காரணம் அப்பெண்ணின் உடல், மாறுதல்களுக்கு ஏற்றவாறு தன்னை சரிசெய்துகொள்ள சிறிதுகாலம் பிடிக்கின்றது. இந்த மாதவிலக்கு, பெண்ணுக்கு 26 நாட்கள் முதல் 32 நாட்கள் வரையிலான இடைவெளியில் தொடரும். அநேகருக்கு 28 நாட்களில் ஏற்படலாம். மாதவிலக்கு தொடங்கிய ஓரிரு வருடங்கள்

(27 ஆம் பக்கம் பார்க்க...)

### சிவப்பான சருமம் பெற..

பெரும்பாலான பெண்களுக்கு தங்களுடைய சருமம் சிவப்பாக இருக்கவேண்டுமென்று ஆசை இருக்கும். வெள்ளரிக்காய் ஜூஸில் ஒரு தே.கரண்டி தயிர் கலந்து தினமும் இரவு நேரங்களில் முகத்தில் தடவி, பத்து நிமிடத்தில் முகத்தைக் கழுவுங்கள். காலையில் எழுந்து முகத்தைக் கண்ணாடியில் பார்த்தால் உங்களுக்கே வித்தியாசம் தெரியும். சருமத்தின் நிறமும் நன்கு கூடியிருக்கும்.

### பருக்களால் ஏற்பட்ட தழும்புகள் மறையணுமா?

முகத்தில் பருக்களால் வந்த தழும்புகள் அதிகமாக இருக்கிறதா? கவலையை விடுங்கள். வெள்ளைப் பூண்டின் ஜூஸை தழும்புகள் உள்ள இடத்தில் மட்டும் தடவி, ஐந்து நிமிடத்துக்குப் பிறகு ஈரத்துணியால் துடைத்து எடுங்கள். வாரம் ஒருமுறை இப்படிச் செய்து வந்தால் தழும்புகள் மறைந்து சருமம் சரியாகிவிடும்.

### சருமநோய்கள் அண்டவே அண்டாது

கிரேப் ஜூஸ் ஒரு தே.கரண்டியுடன் ஒரு தே.கரண்டி யோகர்ட் கலந்து முகத்திலும் கை, கால்களிலும் தடவுங்கள். இப்படிச் செய்வதால் சருமம் புத்துணர்ச்சியுடன் இருக்கும். அதேசமயம் எளிதில் எந்தச் சருமநோயும் நம் சருமத்தை அண்டாது.

## சமைப்போம் சுவைப்போம்

### நெய் பிஸ்கட்



**தேவையான பொருட்கள்:-**

- கோதுமை மாவு -ஒரு கப்
- சீனி -அரை கப்
- நெய் -அரை கப்
- பேக்கிங் பவுடர் -அரை தே.க.
- வெனிலா எசன்ஸ்-கால் தே.க.
- முந்திரிப்பருப்பு -சிறிதளவு

**செய்முறை:**

ஒரு வாயகன்ற பாத்திரத்தில் நெய்யையும் சீனியையும் எடுத்துக்கொண்டு நன்றாகக் குழைக்கவும். நுரைத்து வரும்படி கரண்டியால் நன்கு அடித்துக் கொள்ளவும். பத்துநிமிடங்களாவது அடிக்கவேண்டும். (எவ்வளவுக்கு எவ்வளவு அதிக நேரம் அடிக்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு பிஸ்கட் அதிக ருசியுடன் இருக்கும்) கோதுமைமாவுடன் பேக்கிங் பவுடரைச் சேர்த்து 2, 3 தடவை நன்கு சலித்துக்கொள்ளவும். பிறகு இந்த மாவைக் குழைத்துவைத்திருக்கும் சீனிக் கலவையில் சிறிது சிறிதாகச் சேர்க்கவும். (தண்ணீர் சேர்க்கத் தேவையில்லை) இறுதியில் வெனிலா எசன்ஸ் சேர்த்து 5 நிமிடம் பிசையவும்.

பிசைந்த மாவை சப்பாத்திக் கல்லில் கால் அங்குலம் கனத்துக்கு, மிகவும் அழுத்தாமல் கையினால் பரத்தவும். பிஸ்கட் கட்டர் (பாத்திரக் கடைகளில் கிடைக்கும்) அல்லது சிறிய எவர்சில்வர் டப்பா மூடியினால் கோதுமை மாவுக் கலவையில் வட்ட வடிவ பிஸ்கட்டுகளாக வெட்டி எடுத்து ஒரு ரேயில் வைக்கவும். ஒவ்வொரு பிஸ்கட்டின் மேலும் ஒரு முந்திரியைப் பதிக்கவும்.

# ஆண்கள் கட்டம் பெண்கள் வட்டம்

## ஓர் ஆய்வு



ஆண், பெண் இருவருக்கும் ஒரே ஒரு ஒற்றுமை மட்டுமே இருக்கிறது.

அது இருவரும் மனித குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுதான். மற்றபடி உடலில் இருந்து உள்ளம்வரை முழுக்க முழுக்க வேறுபாடுகள் தான் நிரம்பி இருக்கின்றன.

இது தெரியாமல் பல காதலர்கள் புலம்புவதுண்டு. 'என்னுடைய ரசனையும் என் சிந்தனையும் அப்படியே ஒத்துப்போகின்றன. அதனால்தான் காதலித்தோம்' என்பார்கள். இப்படிக் கூறுபவர்கள் விரைவில் பெரும் அதிர்ச்சிகரமான உண்மையைச் சந்திப்பார்கள். இருவருக்கும் ஒற்றுமைகளை விட வேற்றுமைகளே அதிகம் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டிய சூழலுக்கு ஆளாவார்கள். அப்படியென்றால் ஆண்கள் வேறு, பெண்கள் என்பது தான் அர்த்தமா?

இதுவும் பொய். ஒவ்வொரு மனிதனும் தனித்தனி உலகம் என்பது தான் மெய். யாராவது ஒருவர் 'அவரை நான் நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறேன்' எனக் கூறினால் அது அப்பட்டமான அறியாமையாகும்.

எந்த ஒருவரையும் வேறு ஒருவரால் புரிந்துகொள்ளவே முடியாது. இதை இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டும் என்றால், ஒவ்வொரு நேரத்திலும் ஒருவன் எப்படி நடந்துகொள்வான் என்பதை அவனே அறியமாட்டான். அதனால் காதலிக்கும் முன் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும் என்பது ஓர் அபத்தமான பொய் ஆகும்.

அப்படியென்றால் என்ன செய்வது?

பெண்களின் இயல்புகள் பற்றி ஆண்களும், ஆண்களின் இயல்புகள் பற்றி பெண்களும் ஓரளவாவது 'தெரிந்துகொள்வது மிகவும் பயன்தரக்கூடிய செயலாக இருக்கும். பெண்களில் பெரும்பாலோர் இயல்பாகவே அழகான வீட்டுப்பறவைபோல கூட்டுக்குள் இருப்பதை விரும்புகிறார்கள் என்பது சில ஆய்வுகள் சொல்லும் உண்மை. ஆண்கள் காட்டுப் பறவை போல பல்வேறு இடங்களுக்குத் திரிந்து செல்ல விரும்புபவர்கள்.

பெண்கள் உடல் அழகைப் பேணுவதில் அதிக அக்கறை செலுத்துவார்கள். ஆண்கள் உடலை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. குழந்தைகள் மீது அதிகளவில் அன்பும், பாதுகாப்பும் தர பெண்கள் விரும்புவதுண்டு.

இப்படி மனரீதியான வேறுபாடுகள் நிறைய உண்டு.

தவிர பெண்களுக்கு மாதவிடாய் தொந்தரவுகள், குழந்தை பிறப்பு சங்கடங்கள், மெனொபாஸ் காலகட்டம், மார்பகத் தொந்தரவுகள், பூப்பெய்துதல், பாலூட்டுதல் என ஆண்களுக்குஇல்லாத பல்வேறு உடற்கூறுபாடு மாற்றங்கள் உண்டு.

ஆண்களுக்குத் தேவையில்லாத 'கற்பு' பெண்களுக்கு புனிதமாக சொல்லப்படுகிறது.

பெண்கள் பார்வையில் ஆண்களைப் பார்த்தால் 'பலமுள்ளவர்கள், உழைக்கப் பிறந்தவர்கள், காதலிப்பதற்காக ஆயிரம்பொய் சொல்பவர்கள், திருமணத்திற்குப் பின் அடக்கியாள விரும்புபவர்கள், சுயநலம் மிகுந்தவர்கள் இப்படி... பல்வேறு பிம்பங்கள் உண்டு.


பெரும்பாலான ஆண்கள், பெண்களுக்கு உயிரும், உணர்வும், உள்ளமும் இருக்கிறது என்பதையே ஒப்புக் கொள்வதில்லை. அவர்களது எண்ணப்படி, பெண்கள் என்பவர்கள் ஆண்களின் விளையாட்டுக்காகப் படைக்கப்பட்ட உயிரில்லாத பொம்மைகள் என்பதுதான்.

காதலி அழகாக இருக்கவேண்டும் என எதிர்பார்க்கும் ஆண் அவளே மனைவியாக வந்தவுடன் அழகாக இருக்கக்கூடாது என நினைப்பான்.

பெண் ஒரு ஜடப்பொருளாக அதுவும் சொன்னபடி மட்டும் கேட்கும் ஜடப்பொருளாக இருக்கவேண்டும் என்பதுதான் பெரும்பாலான ஆண்களின் ஆசை. சின்னஞ்சிறு வயதில் தாய்க்கு அடிமையாக இருக்கவேண்டும். வளர்ந்தபின் திருமணம் முடியும் வரை, ஒவ்வொரு பெண்ணும் தந்தைக்கு அடிமையாக இருக்கவேண்டும். திருமணத்திற்குப் பின் கணவனுக்கு அடிமையாகவும் பின் கடைசிகாலம் வரை பெற்ற பிள்ளைகளுக்கு அடிமையாகஇருக்கவேண்டும் என ஆண்கள் ஆசைப்படுவதுண்டு. இதே விஷயத்தை பெண்களும் விரும்பத்தான் செய்கிறார்கள். ஆனால், அவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் ஒருவரால் அன்புடன் பாதுகாக்கப்பட விரும்புகிறார்கள். அடிமைகளாக அல்ல.

இப்படி ஆரம்பம் முதல் முடிவுவரை ஆணுக்கும் பெண்ணுக்கும் வேற்றுமைகள் மட்டுமே நிரம்பி வழிகின்றன. இதனை எளிமையாக விஞ்ஞானமொழியில் சொல்லப்போனால் ஆண்கள் என்பது ஒருகட்டம், பெண்கள் ஒரு வட்டம்...

# சத்திர சிகிச்சையின் பின்னரான பிரச்சினைகள்...



கே: நான் உங்களின் அபிமான ரசிகன். எனது நோய் பற்றி பலமுறைகேள்வி கேட்டுள்ளேன். நீங்கள் பொதுவாக எனது நோய் பற்றியும் அதற்குரிய சிகிச்சைமுறைகள் பற்றியும் விளக்கமாகக் கூறியிருந்தீர்கள். நன்றி. ஆனால், இந்த நோய்க்கு எடுக்கவேண்டிய மருந்து மாத்திரைகளின் பெயர்களைக் குறிப்பிடவில்லை. எனக்கு மாத்திரமல்ல, உங்களிடம் கேள்விகள் கேட்கும் எந்த நோயாளிக்கும் உபயோகிக்கும் மருந்து மாத்திரைகளின் பெயர்களைக் கொடுப்பதில்லை. நாங்கள் இருக்கும் இடத்தில் நல்ல டாக்டர்கள் இல்லை. எனவே, மருந்து மாத்திரைகளின் பெயர்களைக் குறிப்பிட்டால் நாங்களே வாங்கி எங்கள் நோய்களைக் குணப்படுத்திக்கொள்ள வசதி ஏற்படும் அல்லவா?எனவே, இனியாவது நோய்களுக்குரிய மருந்து மாத்திரைகளின் பெயர்களை அறியத் தருவீர்களா? உங்களை நேரில் சந்திக்க சந்தர்ப்பம் கேட்டும் - நீங்கள் பதில் தரவில்லை!

ப: உங்கள் கடிதம், நீங்கள் எனக்குத் தனிப்பட்ட முறையில் எழுதிய கடிதம் என்றாலும் நீங்கள் கேட்ட கேள்வி இந்த வைத்தியபகுதியை வாசிக்கின்ற, கேள்விகள் கேட்கின்ற மற்றைய வாசகர்களுக்கும் மனதில் ஏற்படும் என்ற காரணத்தால் -இந்தப் பகுதியில் இதற்குப் பதிலளிப்பது என் கடமை.

மேற்கத்தைய மருத்துவமுறை அல்லது ஆங்கில மருத்து முறை என்று சொல்லப்படும் Allopathy அல்லது Western Medicine துறையில் வைத்தியர்களுக்கு என்று Disciplinary Code - ஒழுக்கக்கோவை ஒன்றிருக்கின்றது. இந்த ஒழுக்கக்கோவை ஆங்கில வைத்தியர்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும், என்ன செய்யக்கூடாது, என்று பல கட்டளைகளைக் கொண்டுள்ளது. அதில் ஒன்று ஆங்கில வைத்தியர்கள் தமது செயல்களின் மூலம் தங்களை பிரபலப்படுத்திக் கொள்வது விளம்பரப்படுத்தி புகழ்தேடுவது தவிர்க்கப்படவேண்டியது. அதாவது மருத்துவர்கள் பத்திரிகையிலோ, வானொலியிலோ, தொலைக்காட்சியிலோ தம்மை விளம்பரம் செய்யும் விதத்தில் கருத்துகளை பகிரக்கூடாது. மருத்துவம் சம்பந்தப்பட்ட விசயங்களைப் பற்றிப் பேசலாம், எழுதலாம், கருத்தரங்குகள் நடத்தலாம். ஆனால், தமது விலாசத்தைக் கூறி-வைத்தியத்திற்கு வாருங்கள் என்ற வகையில் இந்த நிகழ்ச்சிகள் ஆக்கங்கள் இருக்கக்கூடாது.

அந்த அடிப்படையில் தான் ஒழுக்கக்கோவையை பின்பற்றி இங்கு பதிலளிக்கப்படுகின்றன. மேலும் நோய்களுக்குப் பரிகாரம் கேட்கப்படும்போது நீங்கள் தரும் தரவுகளின் அடிப்படையில் நோய் நிதானிக்கப்படுகிறது. ஆனால், உண்மையிலேயே -நோயாளியை நேரில் பார்த்து, உடலைப் பரிசோதித்து, பரிசோதனைகள் செய்யப்பட்டு - Differential Diagnosis எனப்படும் வேறுநோய்களுக்குரிய குணம் குறிகளோடு தரப்பட்ட தரவுகளை ஒப்பிடுசெய்து தான் சரியான நோயை நிதானிக்கமுடியும். எனவேதான் - உங்கள் தரவுகளிலிருந்து -உங்களுக்கு ஏற்பட்டுள்ளநோய் -எதுவாக இருக்கமுடியும் என்று அறிந்துகொள்ள சம்பந்தப்பட்ட நோய்களின் பட்டியல் தரப்பட்டு -அவை சம்பந்தப்பட்ட விசேட வைத்திய நிபுணர்களைக் கலந்தாலோசிக்க அறிவுறுத்தப்படுகின்றது. இறுதியாக -மருந்துகளின் பெயரைக் குறிப்பிட்டு நேரடியாக மருந்தகங்களில் கொள்வனவுசெய்ய அறிவுறுத்துவது அபாயகரமானது. முதலில் நமது நாட்டில் மருந்தகங்களில் -வைத்தியரின் கையெழுத்தில்லாத மருந்துச் சீட்டுகளுக்கு -மருந்துகளைக் கொடுப்பது குற்றமாகக் கருதப்படுகிறது. அப்படித் தரப்பட்ட மருந்துகளை உபயோகிக்கும் போது ஏற்படும் பக்க விளைவுகளுக்கு - உடனடியாகச் சிகிச்சை தர அருகிலுள்ள வைத்தியர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். எனவேதான் இந்த அடிப்படைகளை பின்பற்றி வைத்திய ஆலோசனை இங்கு தரப்படுகின்றது.


இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14


கே: பெண். திருமணமாகி - ஒரு குழந்தை உண்டு. பிரசவத்தின் பின்னர் கடந்த ஒரு வருடமாக மலவாசலுக்கும் யோனி வாசலுக்கும் இடைப்பட்ட பகுதியில் வலி ஏற்படுகின்றது. முக்கியமாக உடலுறவு கொள்ளும் போது இந்த வலி அதிகமாக இருக்கின்றது. அத்துடன், சிறுநீரை அதிகமாக அடக்கி வைக்கமுடியாது. நினைத்தவுடன் -என்னையறியாமலே சிறுநீர் கழிகின்றது. சிலவேளைகளில் இருமினால், பாரம் தூக்கினால் கூட சிறுநீர் கழிந்துவிடும் பிரசவமாகி ஒருவருடமாகின்றது. பரிகாரம் கூறவும்.

ப: உங்களது பிரசவம் எத்தகையது என்பது பற்றி நீங்கள் அறியத் தரவில்லை. சாதாரண பிரசவமா, Forceps Deliver என்கின்ற ஆயுத உதவியுடன் நடந்த பிரசவமா அல்லது சிசேரியன் (Caesarian ) என்கின்ற சத்திரசிகிச்சையுடன் நடைபெற்ற பிரசவமோ என்பது முக்கியமானது. Forceps Delivery என்ற முறையில் நடந்த பிரசவத்தின் பின்னர் அநேகமான பெண்களுக்கு - நீங்கள் குறிப்பிட்ட Perieneum -மலவாசலுக்கும் யோனிப்பாதைக்கும் இடைப்பட்ட அடிவயிற்றில் வலி ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. உடலுறவின் போதும் இந்த வலி அதிகரித்துக் காணப்படுகின்றது. அதேபோல், இப்படியான பிரசவவேளையில் வயிற்றின் அடிப்பகுதி தசைகள் சிலநேரங்களில் பாதிக்கப்படுவதால் Urinary Incontinence என்கின்ற சிறுநீரை அடக்கமுடியாத நிலை ஏற்படுகின்றது. அநேகமாக இந்தப் பிரச்சினை ஓரிரு வருடங்களில் சிலருக்குத் தானாகவே சரியாகி விடுவதுண்டு என்றாலும் - ஒரு மகப்பேறு வைத்தியரின் ஆலோசனை பெறுவது நல்லது.

கே: பெண், வயது 28. 2 மாத கர்ப்பமாக உள்ளேன். அடிக்கடி வயிற்றுவலி ஏற்படுகின்றது. மருந்து எடுத்தால் சரியாகிவிடுகின்றது. இது ஏன்? விளக்கமும் பரிகாரமும் தரவும்.

ப: நேரடியாக பரிசோதனை செய்யாமல் உங்கள் பிரச்சினைக்கு ஆலோசனை கூறுவது கடினம். சிலவேளைகளில் கர்ப்பகால ஆரம்ப கட்டங்களில் Gastritis என்கின்ற இரைப்பையில் அதிகளவில் அமிலத்தன்மை சுரப்பதால் ஏற்படும் வயிற்றுவலி காரணமாக இருக்கலாம். இந்தக் காலங்களில் சாதாரணமாகவே வாந்தி ஏற்படுவதுண்டு. இதனை கர்ப்பகால வாந்தி Hyperemesis Gravidarum என்று கூறுவார்கள். கர்ப்பகாலத்தில் சுரக்கும் ஹோர்மோன்களின் தாக்கத்தின் விளைவு இது. மூன்று நான்கு மாதங்களில் இந்த வாந்தி நின்றுவிடும். இந்த வாந்தி நிலையின்போது வயிற்றுவலி ஏற்படலாம். இந்தவேளைகளில் காரமான Spicy எனப்படும் வாசனைத் திரவியங்கள் சேர்க்கப்பட்ட, எளிதில் சமிபாடு அடையாத எண்ணெய் வகை உணவுகளை தவிர்த்தல் நல்லது. Antacids எனப்படும் அமிலத்தை சீர்ப்படுத்தும் மருந்துவகைகளை சில வைத்தியர்கள் உபயோகப்படுத்துவதுண்டு. மேலும் நீங்கள் இரண்டு மாத கர்ப்பமாக இருப்பதால் கருவில் ஏற்படும் பிரச்சினைகள், சிறுநீர் தொற்றுகள் கூட வலிக்கு காரணமாக இருக்கலாம். எனவே, Scan பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை என்பன எடுக்கப்படவேண்டும். அத்துடன், மகப்பேறு வைத்தியரின் ஆலோசனையும் பெறப்படுவது விரும்பத்தக்கது.

கே: பெண். 17 மாதங்களுக்கு முன்னர் 'சிசேரியன்' சத்திர சிகிச்சை முறையில் எனக்குப் பிரசவம் நடந்தது. இப்பொழுது கடந்த 5 மாதங்களாக -சத்திரசிகிச்சை செய்யப்பட்ட இடத்தில் எதுவித உணர்வுகளும் இல்லை. விறைத்த உணர்வு போல் இருக்கின்றது. டாக்டரிடம் காட்டியபோது காலம் செல்லச் செல்ல இது சரியாகிவிடும் என்கின்றார். உங்கள் ஆலோசனையை எதிர்பார்க்கின்றேன்.

ப: சத்திரசிகிச்சையின்போது வெட்டப்பட்ட இடத்தில் உள்ள காயம்-Fibrous Tissue என்கின்ற தழும்பால் மூடப்படுகின்றது. இந்த 'திசுவிலுள் உணர்வு நரம்புகள் கிடையாது. எனவேதான் தழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் -உணர்வுகள் Sensations குறைவாக உள்ளன. காலம் செல்லச் செல்ல நரம்புகள் மெல்ல இந்தப் பகுதியினுள் வளர்ந்து ஓரளவு உணர்வுகள் தெரியும். முழுக்க முழுக்க பழைய உணர்வுநிலை ஏற்படாது. உணர்வுகள் தோன்ற ஆரம்பிக்கும்போது தழும்புப் பகுதியில் அரிப்பு (Itching) ஏற்படும்.

சிசேரியன் சத்திர சிகிச்சையின் போது நரம்புகள் குறுக்காக வெட்டப்படுவதே இதற்குக் காரணம். இந்த நரம்புகள் வெட்டப்பட்ட மறுபகுதி நரம்புகளோடு ஏதோ ஒரு விதத்தில் காலம்செல்ல தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும். எனவே, முழுதாக உணர்வுகள் ஏற்படாவிடினும் ஓரளவு உணர்வுகள் விரைவில் ஏற்படும். கவலை வேண்டாம்.



மல்லிகா

# திரிஷாவின் இன்னுமொரு திருவிளையாடல்?

மீண்டும் ஆபாச சர்ச்சையில் சிக்கியிருக்கிறார் த்ரிஷா. மீண்டும் ஆபாச, அலங்கோல வீடியோ படங்கள் இணையத்தளத்தைக் கலக்கி வருகின்றன. த்ரிஷாவும், சர்ச்சைகளும் கூடப் பிறந்தவை, வெட்டிப் பிரிக்க முடியாதவை என்பதை அவ்வப்போது திரிஷா குறித்து வெளியாகும் செய்திகள் நிரூபிக்கின்றன. ஆரம்பத்தில் குளியலறையில் மறைத்து வைக்கப்பட்ட கேமராவில் எடுக்கப்பட்ட குளியல் காட்சிகள் வெளியாகின. ஆனால், அது தான் இல்லை என த்ரிஷா திட்டவட்டமாக மறுத்துவிட்டார். அது கிராபிக்ஸ் வேலை என கூறப்பட்டது. பின்னர் கிழக்குக் கடற்கரைச் சாலையில் சத்தமாக பாட்டுப் போட்டுவிட்டு படு ஆட்டம் போட்டார் த்ரிஷா என பரபரப்பு செய்தி வெளியானது. இதையடுத்து சமீபத்தில் தாஜ் கோரமண்டல் ஹோட்டலில் சுற்றுச்சூழலைப் பற்றிக் கவலைப்படாமல் தனது தோழியரோடும், தோழர்களோடும் உற்சாக பானத்தை ஊற்றிக் குடித்து பரபரப்பை ஏற்படுத்தினார் த்ரிஷா. இந்த சர்ச்சை அடங்குவதற்குள் மறுபடியும் ஒரு சர்ச்சை கிளம்பியுள்ளது. த்ரிஷாவைப் போன்ற ஒரு பெண் ஆபாச, அலங்கோல நிலையில் இருப்பது போன்ற வீடியோ படங்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. கடந்த 3 நாட்களாக இந்த படங்கள் இணையத்தில் விடப்பட்டு சூறாவளியைக் கிளப்பியுள்ளன. 'த்ரிஷா லிங்க்' என்று பெயரிடப்பட்டுள்ள அந்த பகுதியில், திரிஷாவின் உருவத்தில் இருக்கும் பெண்ணின் கோலத்தைப் பார்த்தால் திகிலடைந்து போய் விடுவீர்கள். ஒரு படத்தில் எண்ணைக் குளியல் எடுக்கிறார் அந்தப் பெண். உடல் பாகங்கள் அப்பட்டமாக தெரியும் வகையிலான உள்ளாடையில் உள்ளார். அந்த அறைக்குள் யாரோ இன்னொரு பெண் நுழைகிறார். பிறகு அந்தப் பெண் த்ரிஷா உருவத்தில் இருக்கும் பெண்ணுக்கு இதமாக மசாஜ் செய்யத் தொடங்குகிறார். தொடை, கழுத்து என ஆரம்பித்து ஆடை அணியாத பின்புறம் வரை மசாஜ் நீள்கிறது. இந்தக் காட்சியில் 'எழில்' எந்த ஒளிவு மறைவும் இன்றி அப்பட்டமாக தெரிகிறது. அடுத்த படத்தில், மிகவும் ஆபாசமான உடையில் இருக்கிறார் த்ரிஷா உருவப் பெண். முகம் தெரியாத ஒருவரை மிகவும் நெருக்கமாக கட்டிப்பிடித்தபடி இருக்கிறார். சில நிமிஷங்கள் இந்த சில்மிஷங்கள் தொடருகின்றன. 23 நிமிஷங்கள் இந்த சில்மிஷக் காட்சிகள் நீடிக்கின்றன. அடுத்த கிளிப்பிங்தான் அரள வைக்கிறது. இதில் த்ரிஷாவைப் போன்றே காணப்படும் ஒரு பெண், யாரோ ஒருவருடன் படு உல்லாசமாக இருக்கிறார்.

# மல்லிகாவின் லட்சியம்

கன்னட சினிமாவில் அறிமுகம் ஆகிறார் நடிகை மல்லிகா கபூர். தமிழில் 'அற்புதத் தீவு', 'வாத்தியார்' படங்களில் நடித்தவர் மல்லிகா கபூர். தெலுங்கு, மலையாளப் படங்களிலும் நடித்துள்ளார். இவர் முதன் முறையாக கன்னடத்தில் அறிமுகம் ஆகிறார். இது குறித்து அவர் கூறியதாவது:

"கன்னடத்தை தவிர அனைத்து தென்னிந்திய மொழிகளிலும் நடித்திருந்தேன். இப்போது முதன்முறையாக 'சவி சவி நெனப்பு' கன்னட படத்தில் நடிக்கிறேன். இப்படத்தை சந்தோஷ் இயக்குகிறார். தெலுங்கில் வெளியான 'மஹா' படத்தை பார்த்துவிட்டு இதில் என்னை நடிக்க கேட்டார். கேரக்டர் பிடித்துவிட்டால் எந்த மொழியாக இருந்தாலும் ஒப்புக்கொள்வேன். தென்னிந்திய சினிமாவில் நேரம் தவறாமைதான் எனக்கு பிடித்த விஷயம். வேகமாக படத்தை எடுத்து முடித்துவிடுவார்கள். அதனால்தான் என்னால் அனைத்து மொழிகளிலும் கவனம் செலுத்த முடிகிறது. தென்னிந்திய சினிமாவில் நம்பர் வன் நடிகை என பெயர் எடுப்பதுதான் எனது ஆசை. ஆனால், அதையே லட்சியம் என்று கூற முடியாது. நல்ல நடிகையாக பல நல்ல படங்களை செய்ய விரும்புகிறேன்.

# வெட்கத்தில் பாவனா

பாவனாவுக்கு நடிக்க ரொம்ப கஷ்டத்தைக் கொடுக்கும் விஷயம் எது தெரியுமா? வெட்கம்தானாம்! கேரளத்து பப்பாளி பாவனாவைக் கொஞ்ச நாளாக தமிழில் காணோம். அவர் நடித்து வெளியான படம் 'வெயில்'. இப்போது தமிழகத்திலும் வெயில் காலம் வந்து விட்டது. அடுத்து 'கூடல் நகர்'. இந்தப் படமும் வெளிவந்துவிட்டது. தற்போது மலையாளத்துக்குப் போய் விட்டார் பாவனா. அங்கு மோகன்லாலுடன் இணைந்து நடித்துக் கொண்டிருக்கிறார். இந்தப் படத்தில் ஆட்டோ எல்லாம் ஓட்டி அசத்துகிறாராம். இதற்காக ஆட்டோ ஓட்டப் பழகிக் கொண்டாராம். கூடல் நகரில் சூப்பராக நடித்துள்ளேன் என்று சந்தோஷமாக கூறுகிறார் பாவனா. அவருக்கும், சந்தியாவுக்கும் நடிப்பில் கடும் போட்டியாம். இயக்குநர் எழிலும், பாவனாவை வெட்கப் பட வைத்து கஷ்டப்பட்டு அந்த சீன்களை எடுத்து முடித்தாராம். இதற்காக ரொமான்டிக்கான காட்சிகளை அவரிடம் விளக்கியும், அதுபோன்ற படக் காட்சிகளைப் பார்க்க வைத்தும் வெட்கத்தை வெளியில் எடுத்தார்களாம். சரிதான், பாவனாவிடம் மாட்டப் போகும் 'சேட்டன்' நிலைமை ரொம்பக் கஷ்டம்தான்!



'பொல்லாதவன்' தனு









மாநகராட்சி



தனுஷ்

# பளிங்கு மாளிகை

'உன்னாலே உன்னாலே' படத்தை ஒரு நாளைக்கு நான்கு முறை பளிங்கு மாளிகையை, துடைத்து வைத்தால் எப்படி இருக்குமோ அப்படி உருவாக்கி இருக்கேன். "ஒரு சண்டைக் காட்சி, ஒரு சொட்டு ரத்தம், எதுவுமில்லாம அழகான காதல் கதையை சொல்லியிருக்கேன். இன்றைய உலகம் பூரா உள்ள இளைஞர்கள் சந்திக்கின்ற பிரச்சினையை முன் வைத்திருக்கிறேன்". பெருமையாகச் சொல்கிறார் இயக்குனர் ஜீவா. கொமெடி, கலக்கலான பாட்டு எல்லாம் இருக்கிறது. ஹரீஸ் ஜெயராஜ் 5 பாட்டுகளுக்கு இசையமைத்திருக்கிறார். அதில் ஒரு பாட்டுக்கு 40 லட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. படம் தமிழ் புத்தாண்டுக்கு ரிலீஸ் ஆகும்.



தனிஷா

# மதம் பிடிச்ச அழகுக் குதிரை

ரகசியாவை வைத்து எப்படியெல்லாம் கவர்ச்சி 'ரசம்' பிழிய முடியுமோ அந்த அளவுக்கு பிழிந்தெடுத்து விட்டார்கள் கோலிவுட் இயக்குநர்கள். சிரிச்சு சிரிச்சு வந்தா சீனா தானா டோய் என்ற ஒரே பாட்டின் மூலம் ஒரு பாட்டுக்கு குத்தாட்டம் போடும் கும்மாள சுந்தரியாக முன்னணிக்கு வந்து விட்டார் ரகசியா. பெயரில்தான் ரகசியம். ஆனால், அவரது கிளாமரிலோ 'ஒளிவு மறைவே' கிடையாது. அந்த அளவுக்கு படு வெளிப்படையாக பளக்க பளக்க ஆட்டம் போட்டு அசத்துகிறார் ரகசியா. 'நீ நான் நிலா' படத்தில் ரகசியாவின் 'ரசாபாசமான' ஒரு ஆட்டத்தை வைத்துள்ளார்கள். தினாவின் இசையில் உருவாகியுள்ள 'மதம் பிடிச்ச அரபிக் குதிரை' என்று ஆரம்பிக்கும் அந்தப் பாடல் காமனின் திருவிழாவை நேரில் பார்த்த திருப்தியைக் கொடுக்குமாம். அந்த அளவுக்கு பாடலில் காம ரசம் பொங்கி வழிகிறதாம்.




ரகசியா

# விக்ரமின் பிறந்தநாள்

'பீமா' படத்தின் இரு பாடல் காட்சிகளுக்காக விக்ரம், த்ரிஷா ஆஸ்திரேலியா செல்லவிருந்தனர். திடீரென்று அப்பயணத்தில் மாற்றம். நாடும் மாறிவிட்டது. அவுஸ்திரேலியாவுக்குப் பதிலாக நியூஸிலாந்துக்குப் பறக்கின்றனர். ஒரு பாடலை நியூஸிலாந்தில் முடித்துவிட்டு 16ஆம் திகதி சென்னை திரும்புகின்றனர். இங்கு வந்தவுடன் 17ஆம் திகதி விக்ரம் தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

# மீசைக்கு காத்திருப்பு

சேலம் சந்திரசேகர் தயாரிப்பில் வெங்கடேஷ் இயக்கி வரும் படம் 'கில்லாடி'. இந்தப் படத்தில் பரத் ஜோடியாக நிலா நடிக்கிறார். இந்த படத்தின் ஷூட்டிங் நடைபெற்று வரும் போதே பரத் நடிக்கும் 'நேபாளி' படத்திற்கான போட்டோ செஷன் நடைபெற்றது. இந்த போட்டோ செஷனில் பரத்தின் மீசையை வழித்து மேக்கப்போட்டு ஆளையே மாற்றியிருந்தார்கள். 'கில்லாடி' படத்தில் பரத் மீசையுடன் நடித்திருந்தார். 'நேபாளி' பட போட்டோசெஷனுக்காக மீசை எடுக்கப்பட்டதால் 'கில்லாடி' பட சூட்டிங் தொடங்குவது தாமதப்படுகிறது.



# சிம்புவின் வம்பு

சிம்புவின் வம்புக்கு முடிவே இல்லை போலும். அவர் நடிக்கவுள்ள 'காளை' படத்தின் நாயகி குறித்து தொடர்ந்து குழப்பமான செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. 'திமிரு' பட இயக்குநர் தருண் கோபியின் இயக்கத்தில், சிம்பு நாயகனாக நடிக்க இருக்கும் படம் 'காளை'. இப்படத்தில் நடிக்க பல முன்னணி நடிகைகளை நாடியுள்ளார் சிம்பு. முதலில் அஸினிடம் போனார். அவர் மறுத்து விடவே, மீரா ஜாஸ்மின், பாவனா என பலரையும் அணுகினார். எல்லோரும் மறுத்துவிட்டனர். கடைசியில் தனது பள்ளித்தோழி த்ரிஷாவிடம் போய் நின்றார். த்ரிஷா தன்னுடன் நடிக்க ஒப்புக் கொண்டு விட்டதாக சிம்பு தரப்பிலிருந்து செய்தி பரப்பப்பட்டது. ஆனால் த்ரிஷாவோ, 'காளை' படம் குறித்து கேட்டாலே கண்டுக்காமல் போய் விடுகிறார். இதிலிருந்தே அவர் அந்தப் படத்தில் நடிக்கவில்லை என்பது உறுதியாகிப்போனது. லேட்டஸ்டாக தெலுங்குத் திரையுலகின் இளம் புயல் பூனம் சிம்புவுடன் ஜோடி போடப் போவதாகக் கூறப்பட்டது. ஆனால் சிம்பு படம் பற்றி கவலையே படவில்லையாம், காதிலேயே போட்டுக் கொள்ளவில்லையாம் அவர். எனவே இதுவும் புஸ்ஸாகிப் போனது. அவருக்குப் பதில் 'முனி' பட நாயகி வேதிகாவை பார்த்துப் பேசியுள்ளனராம். அவர் ஒப்புக் கொள்வார் போலத் தெரிவதாக கூறப்படுகிறது. திட்டமிட்டபடி 'உயிர்' சங்கீதாவும் படத்தில் உள்ளாராம். முன்னாள் கனவுக் கன்னி ரேகா, சிம்புவின் அம்மாவாக நடிக்கவுள்ளார். 'காளை' படத்தின் நாயகி யார் என்ற குழப்பத்தில் இதுதான் லேட்டஸ்ட். [illegible] பூஜை போடப் போகிறார்கள். அதில் ரேகாவும் கலந்துகொள்வதாகக் கூறியுள்ளாராம். பூஜைக்குள் ஹீரோயின் மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

# வாழ்க்கையைத் தொலைத்து விட்டேன்!

வாழவேண்டிய வயதில் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டவன், நான்!

இனிய இளமையைத் தொலைத்தேன்! வர இருந்த வாழ்க்கைத் துணைவியையும் தொலைத்தேன்!!

இன்று, நடந்ததை எண்ணி எண்ணி நொந்து கொண்டிருக்கிறேன்! வேதனைத் தீயில் வெந்து கொண்டிருக்கிறேன்!

என்னைப் போல சில இளைஞர்கள், சில மாணவர்கள் தங்களின் எதிர்காலத்தை - வாழ்க்கையை தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிகிறேன். அவர்களுக்கு ஒரு பாடமாக இருக்கட்டும் என்பதற்காக எனது கதையைச் சொல்ல விரும்புகிறேன்.

நான் பிறந்தது ஒரு நடுத்தரக் குடும்பத்தில். எனக்கு ஓர் அண்ணன், ஓர் அக்கா, இரண்டு தங்கைகள். நாங்கள் ஐவரும் பஞ்சபாண்டவர்கள். பாசத்துடன் வளர்ந்தோம்.

நான் நன்றாகப் படிக்கக் கூடியவன். எனவே, என்னை நன்கு படிக்க வைத்தார்கள். பட்டதாரி ஆனேன்.

வேலை தேடினேன். வெளியூரில் வேலை கிடைத்தது. அளவான சம்பளம், ஆனால், அதிகமான கிம்பளம்! அப்படிப் பட்ட வேலை.

தங்கிக்கொள்ள இடம் பார்த்தேன்.

ஒரு மாடி கிடைத்தது.

வாடகை கொஞ்சம் கூடுதலாகச் சொன்னார்கள்.

வீடு ஒரு கைம்பெண்ணுக்குச் சொந்தம். அவளுக்கு இரண்டு குழந்தைகள். குழந்தைகளுடன் அவள் கீழ்வீட்டில் வசித்தாள்.

மாடியில் கிடைக்கும் வாடகையைக் கொண்டுதான் அவர்கள் வாழவேண்டும். எனவே, வாடகை சற்றுக் கூடுதல் என்றாலும், அவர்கள் மீது பரிதாபப்பட்டு, அங்கே குடியேறினேன்.

எனக்கு 'கிம்பளம்' நிறையக் கிடைத்ததால், தாராளமாகச் செலவு செய்தேன். விலை உயர்ந்த ஆடைகள் அணிவேன். கையில் சங்கிலி, கழுத்தில் என்று கிம்பளம் மாறியது.

இதை கீழ் வீட்டுப் பெண் பார்த்துக் கொண்டே இருந்திருப்பாள் போலிருக்கிறது.

ஒரு ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை நாள். மெல்ல விழித்து, குளித்து, வெளியில் சாப்பிடக்கிளம்பிக்கொண்டிருந்தேன்.

அப்போது அந்தப் பெண் மாடிக்கு வந்தாள்.

''வெளியே கிளம்பிக்கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறதே?'' என்று கேட்டாள்.

நான் ''ஆமாம்'' என்றேன். ''சாப்பிடப்போகிறேன்.''

''வெளியிலா சாப்பிடுகிறீர்கள்?'' கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்துவிட்டாள்.

''ஆமாம்'' என்றேன், நான்.

''அதுதான் இப்படி ஆகிவிட்டீர்கள்.''

''எப்படி?''

''வரும்போது எவ்வளவு இளமையாக இருந்தீர்கள். நாலைந்து மாதத்தில் மெலிந்து துரும்பாகப் போய்விட்டீர்களே!''

''மெய்யாவா?'' நான் என்னையே ஒருமுறை பார்த்துக்கொண்டேன்.

''இனி நீங்கள் ஹோட்டலில் சாப்பிடவேண்டாம்'' அவள் உரிமையுடன் சொன்னாள்.

''பின்னே?'' அவளை ஏறிட்டுப் பார்த்தேன்.

நான் முதல் முதல் பார்த்ததை விட இப்போது அவள் அழகாகத் தெரிந்தாள்.

கைம்பெண் என்றோ, இரண்டு பிள்ளைகள் பெற்றவள் என்றோ சொல்ல முடியாது. அவ்வளவு இளமையாகத் தோன்றினாள்.

அவளுக்குக் கட்டான உடம்பு.

அவளது பொன் மேனியில் ஒரு மினுமினுப்பு.

நெற்றியில் குங்குமம் இல்லை. கூந்தலில் பூ இல்லை. இது அவளது அழகைக் குறைக்கவும் இல்லை! சிதைந்து போனாலும் அஜந்தா ஓவியம் அழகாகத்தானே இருக்கிறது!

''இனி எங்கள் வீட்டில் சாப்பிடுங்கள்'' அவள் சர்வசாதாரணமாகச் சொன்னாள்.

நான் அதிர்ந்து போனேன்!

''வாங்க!'' எனது கையைப்பிடித்து அழைத்தாள்.

''எங்கே?'' நான் திகைத்தேன்.

''எங்கள் வீட்டில்! மல்லிகைப் பூ போன்ற இட்லியும், மணக்கும் கொத்தமல்லி சட்னியும் தயாராக இருக்கின்றன!''

பிடித்தபிடியாக என்னை இழுத்துப்போனாள்!

அவள் கைபட்டதும் என் உடம்பில் ஒரு மின்சாரம் பாய்ந்தது!

எனது இளமைக்கு ஓர் எழுச்சி ஏற்பட்டது. நான் கையை விடுவித்துக் கொள்ளவில்லை!

அவளது பிடியில் எனக்கு ஓர் இன்பம் தெரிந்தது!

அவளுடன் போனேன்!

சாப்பிட்டேன்.

மதிய உணவும் அங்கேதான். கோழிக் குழம்பு வைத்திருந்தாள்.



மாலை சிற்றுண்டி எடுத்துக் கொண்டே அவளே மாடிக்கு வந்துவிட்டாள்.

இரவு சாப்பாடும் கீழேதான்!

இந்த விருந்து தொடர்ந்தது!

மூன்று வேளைச் சாப்பாடும் அவள் வீட்டில்தான். காலையில் சாப்பிட்டு அலுவலகத்துக்குப் புறப்படும் போது, மறக்காமல் மதியச் சாப்பாடு கட்டிக் கொடுத்துவிடுவாள்.

சாப்பாடு அருமையாக இருந்தது! நன்கு சுவையாகச் சமைத்தாள்! ''என்ன வேண்டும்?'' என்று கேட்டுக் கேட்டு சமைத்துக் கொடுத்தாள்.

சமையலைவிட அவளது மையல் என்னை மயக்கியது. கனிவான உபசாரம். புன்னகை மாறாத முகம். என் மீது அன்பைப் பொழிந்தாள்.

அவள் பிள்ளைகளும் என்னுடன் ஒட்டிக்கொண்டன!

அந்த வீட்டின் நிரந்தர விருந்தாளி ஆனேன்.

ஓசி சாப்பாடு சாப்படுவது அழகா? அதிலும் அவள் வருமானம் இல்லாத கைம்பெண். எனவே, மாதம் பிறந்ததும், ''இதை வைத்துக்கொள்ளுங்கள்'' என்று சில நூறுகளை அவளிடம் நீட்டினேன்.

''எதுக்குங்க?'' என்று சொல்லி அவள் வாங்கிக்கொள்ள மறுத்தாள்.

''வாங்கிக்கொள்ளாவிட்டால், இங்கே நான் சாப்பிடமாட்டேன்'' என்று நான் சொன்னேன்.

சொன்னது மட்டுமல்ல; அவளது கையைப்பிடித்து, நோட்டுக்களை அவள்கையில் திணித்தேன்.

அப்போது அவள் என்னைப் பார்த்த பார்வை, அவளது 'மோனாலிசா' புன்னகை என்னைக் கிறங்க வைத்துவிட்டன!

அவளது அழகுக்கு அடிமையானேன்!

எனது இளமைப்பசியையும் தீர்த்தாள்.

அவளுக்கு என்னுடைய அக்கா வயது இருக்கும். ஆனால், அவள் தந்த சுகத்தில் எந்த வேறுபாடும் இல்லை! நிறைவாக இருந்தது!

நான் ''அன்பே'' என்று அவளைக் கூப்பிட்டேன்!

அவள் என்னை ''அத்தான்'' என்று அழைத்தாள்.

அவளுடைய பிள்ளைகளுக்கு நான் 'அப்பா' ஆனேன்!

அவள் மிகுந்த கைக்காரியாக இருந்தாள்.

என்னை ஒரு கைக்குழந்தையாக ஆக்கிவிட்டாள்!

என்னிடம் இளமை பொங்கிக் கொண்டிருந்தது.

கைம்பெண்ணான அவள் எத்தனை காலமாக ஏங்கிக் கிடந்தாளோ?

இரண்டும் சங்கமம் ஆக இன்பம் கொள்ளையோ கொள்ளை!

இன்பம் மட்டுமா?

நான் ஒரு புளியங்கொம்பு என்பதை அவள் நன்கு தெரிந்து கொண்டாள்!

எனது சம்பளம், கிம்பளம் எல்லாவற்றையும் அவள் உறிஞ்சிக்கொண்டாள்!

எனது இளமையையும் உறிஞ்சினாள்!

இன்ப சுகத்துக்கு என்னை அடிமையாக்கிவிட்டாள்!

இதற்கு இடையே என் வீட்டில் எனக்குத் திருமண ஏற்பாடு செய்தார்கள்.

பல பெண்களைப் பார்த்தும் நான் 'பிடிக்கவில்லை' என்று சொல்லிவிட்டேன்!

கடைசியில் அவர்களே ஒரு பெண்ணைப் பார்த்து, நிச்சயித்து, முகூர்த்தம் குறித்து, அழைப்பிதழும் அச்சிட்டார்கள்!

எனக்கும் ஓர் அழைப்பிதழ் அனுப்பி வைத்தார்கள்!

''என்ன செய்வது, மேனகா?'' என்று கேட்டேன்.

''கட்டிக்கொள்ளுங்கள்'' என்று அவள் சிரித்தாள்!

''உன்னைத் தவிர மற்றப் பெண்கள் எல்லாம் எனக்கு எட்டிக்காய்'' என்று நான் சொன்னேன்.

அவள் என் நாக்கில் தேன் தடவினாள்!

மறுநாள் அவசர, அவசரமாக ஒரு கடிதம் எழுதினாள்.

எனக்கு ஏற்கனவே திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள் என்று அதில் குறிப்பிட்டாள்!

இதற்கு ஆதாரமாக, அவளோடும் பிள்ளைகளோடும் சேர்ந்து நான் எடுத்துக்கொண்ட ஒரு படத்தையும் வைத்தாள்!

பெண் வீட்டுக்கு அதை அனுப்பினாள்!

பெண் வீட்டு முகவரி திருமண அழைப்பிதழில் இருந்தது!

கடிதம் போய்ச் சேர்ந்ததும், திருமணம் நின்றது!

என் வீட்டுக்குப் போய், என் அப்பாவின் முகத்தில் கடிதத்தைத் தூக்கி எறிந்தார்கள்!

எனது வீட்டிலும் ''காலிப்பயல்'' என்று ஏசினார்கள்!

அதன்பின் எனது திருமணத்துக்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

என்னைக் கை கழுவி விட்டார்கள்!

நான் முழுக்க முழுக்க அவளது பிடியில் இல்லை, மடியில்!

இதன் இடையே மாடிக்கு இன்னோர் இளைஞன் வாடகைக்கு வந்தான்!

அவனுடன் இவள் உறவு வைத்துக்கொண்டாள்!

கீழ்வீட்டில் அவளுக்கு நான்! மேல் வீட்டில் அவன்!!

நான் செய்தி தெரிந்தபோது, எரிமலையாக வெடித்தேன்!

இருவரும் சேர்ந்து ''போடா'' வெளியில் என்று தள்ளினார்கள்!

தெருவில் வந்து விழுந்தேன்!

மோகம் என்னை ஆட்டிப் படைத்தது!

சிவப்புத் தண்ணீர் வாங்கிக்குடித்துத் தாகம் தீர்த்தேன்!

சிவப்புத் தண்ணீர் உள்ளே போனதும், மோகம் தலைவிரித்து ஆடியது.

பெண்களைத் தேடினேன்!

மதுவும் மங்கையுமாக வாழ்ந்தேன்!

இது தெரிந்து என்னை வேலை நீக்கம் செய்தார்கள்!

வருமானம் இல்லை!

வறுமை! வறுமை! வறுமை!!

மோகம் - தாகத்துக்கு மட்டும் வறுமையில்லை!

திருடினேன்!

சிறைக்குப் போனேன்!

எனது வாழ்க்கையே சிதைந்து போயிற்று!

இப்போது பித்தன் போல தெருவில் அலைந்து கொண்டிருக்கிறேன்!

என்போன்ற எத்தன்களின் முடிவு பித்தன்தானே?

உண்மைக் கதை

# 10 தவறான நம்பிக்கைகள்



திருமணம் என்பது ஒரு ருசியான பழம் போன்றது. இதில் விநோதம் என்ன என்றால், அதைச் சாப்பிட்டவர்களும் வருந்துகிறார்கள்; சாப்பிடாதவர்களும் வருந்துகிறார்கள்!

கொஞ்சம் உள்ளே இறங்கிப் பார்த்தால், இதில் இருக்கும் உண்மைபுரியும். திருமணமான சில மாதங்களிலேயே தம்பதிகளுக்கு, 'வாழ்க்கையில் தாம் எடுத்த மிகத் தவறான முடிவு திருமணம்தான்' என்று தோன்றுமளவுக்கு அப்படி என்னதான் நடந்துவிடுகிறது?

திருமணத்துக்கு முன்பாக ஆணும் பெண்ணும் எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி சுதந்திர வானில் சிறகடித்துப் பறக்கின்றனர். தங்களின் எதிர்கால வாழ்க்கைத்துணை குறித்து எக்கச்சக்கமான எதிர்பார்ப்புகளை வளர்த்துக் கொள்கின்றனர். இந்தக் கனவுகள் நிறைவேறாதபோது அவர்கள் சோகத்தில் மூழ்கிப்போகிறார்கள். திருமணத்தக்கு முன்பாக திருமண வாழ்க்கையில் அடங்கியுள்ள பொறுப்புகள் குறித்து அவர்கள் அறிந்து வைத்திருப்பதில்லை. திருமணம் என்றால் ஒன்றாக ஊர் சுற்றுவது, சாப்பிடுவது, ஜாலியாக இருப்பது என்ற இதுபோன்ற கற்பனைகளில்தான் இளைஞர்கள் மிதந்துகொண்டிருக்கின்றனர்.

ஆனால், திருமணமான சிலநாட்களிலேயே பொறுப்புகளைச் சுமக்கநேரும் போதுதான் பாசாங்குத்தனம், வாதங்கள் மற்றும் பிரச்சினைகள் அவர்களுக்கு முகம் காட்டத் தொடங்குகின்றன. ஆகவே, பிரச்சினைகளுக்குக் காரணமாக உள்ள சில தவறான நம்பிக்கைகளை முதலில் புரிந்துகொள்ளவேண்டும். அவை என்ன தவறான நம்பிக்கைகள்?

### தவறான நம்பிக்கை-1

**உங்கள் வாழ்க்கைத் துணைவர் உங்களை மனப்பூர்வமாக நேசிக்கிறார் என்றால் உங்கள் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப அவர் தன்னை மாற்றிக் கொண்டு விடுவார்.**

ஆரம்பத்தில் இந்த உணர்வு ஆண்களிடமே அதிகம் இருந்து வந்தது. வேறொரு வீட்டிலிருந்து வந்தவள் என்பதால் அவள்தான் தனது வீட்டு நடைமுறைக்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று ஆண்கள் நினைத்தனர். ஆனால், நிலைமை தற்போது அப்படியில்லை. இன்று பெண்கள் கூட வாழ்க்கைத்துணைவர் சமரசம் செய்து கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இருதரப்பினரும் இதே அலைவரிசையில் சிந்திக்கும்போது மோதல் சூழ்நிலை ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடுகிறது. இரண்டு பேரின் விருப்பு -வெறுப்புகள் எப்போதுமே ஒத்திருப்பது சாத்தியமில்லாத ஒன்று. ஆகவே, கணவனும் மனைவியும் ஒரு சில விஷயங்களில் சமரசம் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது.

எமது சுபாவத்துக்கு மாறான எந்தவொரு விஷயத்தையும் அரவணைப்பது அல்லது சாதாரணமாக எடுத்துக்கொள்வது அத்தனை எளிமையானது அல்ல. உதாரணமாக குடிப்பழக்கம் மற்றும் சிகரெட் பழக்கம் ஆகியவை சாதாரணமாக எடுத்துக்கொள்ளமுடியாத பழக்கங்கள். இதுபோன்ற பழக்கங்களை விட்டொழிப்பதற்கோ அல்லது குறைத்துக்கொள்வதற்கோ கால அவகாசம் தேவைப்படும். இந்த முயற்சி இரு தரப்பிலிருந்தும் மேற்கொள்ளப்பட்டால் மன இறுக்கமான சூழ்நிலை ஏற்படாது.

### தவறான நம்பிக்கை-2

காதல் என்றால் அதில் ரொமான்ஸ் இருக்கவேண்டியது அவசியம். உங்களுடைய காதலர் அல்லது காதலி **உண்மையாக காதலிக்கிறார் என்றால் உங்களிடம் அவரது நடவடிக்கைகள் ரொமான்டிக் ஆகஇருக்கும்.**

ரொமான்ஸ் என்பது உணர்வுகளுடன் தொடர்புடையது. எம்முடைய மனதில் ஒரே நேரத்தில் பலவித உணர்வுகள் எழுவது மிகவும் குறைவு.

''காதலும் ரொமான்ஸும் ஒன்றுதான் என்றாலும் அவை தனித்தனியான உணர்வுகள்தான். ரொமான்ஸில் கற்பனை அதிகம் இருக்கும். காதலில் எதார்த்தம் நிறைந்திருக்கும். ரொமான்ஸ் முடிவடையும் போதுதான் காதல் பிறக்கிறது'' என்கிறார் உளவியல் நிபுணர் ஒருவர்.

உண்மையில், சினிமாவில் ரொமான்ஸை பார்க்கும் இன்றைய இளசுகள் தங்கள் துணைவரிடம் அதையே எதிர்பார்க்கிறார்கள். ஆனால், ரொமான்டிக் ஆக இருப்பதும் இல்லாததும் அவரவர் சுபாவத்தைப் பொறுத்த விஷயம்.

### தவறான நம்பிக்கை-3

**சந்தோஷமான திருமண வாழ்க்கைக்கு தவிர்க்கமுடியாத அம்சம் திருப்தி. நீங்கள் திருப்தியாக இல்லாவிட்டால் உங்கள் திருமண வாழ்க்கை ஆபத்தில் சிக்கநேரிடலாம்.**

திருப்தி என்ற உணர்வை நாமாகவே தான் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ஒருசிலருக்கு மிகக் குறைந்த அளவு கிடைத்தாலும் நிறைந்த மனதோடு, சந்தோஷமாக தென்படுவார்கள். இயல்பிலேயே திருப்தி அடையாதவர்களால் திருமண வாழ்க்கையில் எப்படி திருப்தி உணர்வோடு சந்தோஷமாக இருக்கமுடியும்? உறலுறவைப் பொறுத்தவரை அதிருப்தி நிலவினால் திருமண ஆலோசகரிடம் ஆலோசனை பெற்று பிரச்சினையிலிருந்து விடுபடலாம்.

### தவறான நம்பிக்கை-4

**திருமணம் முழுமையடைந்த உணர்வை ஏற்படுத்துகிறது.**

> திருமணத்துக்கு முன்பு தனக்காக மட்டும் வாழ்பவர்கள், அதன் பிறகு மற்றவருக்காக அதிகம் வாழ்கிறார்கள்.

இது நீங்கள் சிந்திக்கும் விதத்தைப் பொறுத்தவிஷயம். திருமணத்துக்குப் பிறகு கர்ப்பமுற்று தாய்மை அடையும்போது ஒருபெண் முழுமையடைகிறாள் என்பது காலங்காலமாக இருந்துவரும் நம்பிக்கை. தாய்மை மட்டுமே பெண்களுக்கு திருமண வாழ்க்கையில் முழுமையடைந்து விட்ட உணர்வைத் தருவதில்லை என்பதுதான் உண்மை. பல சந்தர்ப்பங்களில் திருமணம் காரணமாக பல லட்சியங்கள் அரைகுறையாக நின்று விடுகின்றன. இந்த நிலையில் திருமணமே மனநிறைவு ஏற்படாததற்கு காரணமாகவும் அமைந்துவிடுகிறது. வெற்றிகரமான திருமணமே வாழ்க்கையில் முழுமையடைந்த உணர்வை ஏற்படுத்தும். எனவே, திருமணத்தை வெற்றிகரமாக்க முயற்சி செய்யுங்கள்.

### தவறான நம்பிக்கை-5

**கணவன்-மனைவி உறவு வலிமையாக இருக்கவேண்டுமானால் அவர்களுக்குள் ஒளிவு-மறைவு எதுவும் இருக்கக்கூடாது.**

உங்கள் கணவனோ அல்லது மனைவியோ சந்தேகப் பேர்வழியாக இருந்தால் மிகவும் வெளிப்படையாக நடந்துகொள்வது ஆபத்தில் முடியக்கூடும். எனவே, கணவன்-மனைவி இருவரும் கொஞ்சம் ராஜதந்திரத்துடன் நடந்துகொள்வதுதான் நல்லது.

### தவறான நம்பிக்கை-6

**அமைதியான சுபாவம் உள்ளவர்கள் எதையும் உள்ளுக்குள்ளேயே வைத்துக் கொள்வார்கள். ரொமான்டிக் சுபாவம் உள்ள வாழ்க்கைத் துணைவரிடம் இவர்களால் அன்புசெலுத்த முடியாது.**

இந்தக் கருத்து முற்றிலும் தவறானது. அவர்களின் அன்பு அமைதியானது. ஆழமானதும் கூட. அந்த அன்பில் நடிப்புத்தனமோ செயற்கைத்தனமோ இருக்காது. ரொமான்டிக் சுபாவம் உள்ளவர்களிடம் துரோகம் செய்யும் வாய்ப்புகள் அதிகம். 'அமைதிளான சுபாவம் உள்ளவர்கள், நம்பிக்கைக்கு உரியவர்களாக ஆபத்தில் உதவுபவர்களாக இருப்பார்கள்' என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள்.

### தவறான நம்பிக்கை-7

**குழந்தைகள் இல்லாத திருமண வாழ்க்கை வேதனையானது.**

தாம்பத்திய முடிச்சை வலிமையுடன் வைத்திருப்பது குழந்தைகள் என்பது சரிதான்.

ஆனால், குழந்தை இல்லாத குறையை பெரிதுபடுத்தாமல் வாழ்க்கைத் துணைவர் மீது பரஸ்பரம் அன்பு காட்டினால் திருமணம் மகிழ்ச்சிகரமானதாகவே இருக்கும். பரஸ்பர புரிதலோடு தம்பதிகள் குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்கலாம். எமது கலாசாரத்தில் குழந்தை இல்லாத குறையைப் பொறுத்தவரை கணவன்-மனைவியை விட அவர்களுடைய உறவினர்களே அதிகம் கவலைப்படுகிறார்கள். பெண்ணுக்கு மலடி பட்டம் கட்டுவதும் இவர்கள் தான். குழந்தை எப்போது வேண்டும்? எத்தனை வேண்டும்? என்பது கணவன்-மனைவி சம்பந்தப்பட்ட விஷயம். இந்த விஷயத்தில் மற்ற எவரும் தலையிடாமல் இருப்பது நல்லது.

### தவறான நம்பிக்கை-8

**முன்கோபம் மற்றும் மனநோய் பாதிப்புள்ளவர்கள் திருமணத்துக்குப் பிறகு சரியாகிவிடுகிறார்கள்.**

காதலில் தோல்வியுற்றவர்கள், மனநலம் சமச்சீராக இல்லாதவர்கள் மற்றும் நடத்தை சரியில்லாதவர்கள் ஆகியோருக்கு திருமணம் என்பது சரியான சமாதானம் இல்லை. திருமணம் வெற்றிகரமாக அமைய, இருவரின் நடத்தையும் சாதாரணமாக இருப்பது அவசியம். அவர்களின் மனநலனும் ஆரோக்கியமாக இருப்பது முக்கியம். இந்தக் குறைபாடுகள் குறித்து திருமணத்துக்கு முன்பே தீர ஆலோசித்து முடிவெடுக்கவேண்டும். இல்லையென்றால் திருமண வாழ்க்கையில் வெறுப்புத்தான் மிஞ்சும். மணமுறிவுக்கும் வழிவகுக்கும்.

### தவறான நம்பிக்கை-9

**திருமண வாழ்க்கை மணமாகாத வாழ்க்கையைவிட அதிகம் சுகமானது.**

திருமணத்துக்குப் பிறகு நீங்கள் பலவிதமான சுகங்களை அனுபவிப்பீர்கள். இவை எல்லாம் கன்னியாக, பிரமச்சாரியாக இருக்கும்போது கிடைக்காதவை. ஆனால், திருமண வாழ்க்கையில் பொறுப்புகள் பின்னிப் பிணைந்திருப்பதால் கட்டுப்பாடில்லாமல் வாழநினைப்பவர்களுக்கும் பொறுப்புகளை ஏற்கத் தயாராக இல்லாதவர்களுக்கும் அதுசுமையாக மாறிவிடும். திருமணத்துக்கு முன்பு தனக்காக மட்டும் வாழ்பவர்கள் அதன்பிறகு மற்றவருக்காக அதிகம் வாழ்கிறார்கள்.

### தவறான நம்பிக்கை-10

**காதல் திருமணங்களே அதிகம் வெற்றிபெறுகின்றன.**

திருமணம் என்பது பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்டதாக இருந்தாலும், காதலித்துசெய்து கொண்டதாக இருந்தாலும் அது வெறிகரமாக அமைய இருவரின் ஒத்துழைப்பும் அவசியம்.

கணவன்-மனைவி எப்போது சண்டையில் ஈடுபட்டாலும் அதற்கான காரணத்தை எதிராளி மீது குறை சொல்லுவதும் குற்றம் கண்டுபிடிப்பதும் மிக எளிது. ஆனால், தன்னுடைய தவறை ஒத்துக்கொள்வதுதான் சிரமம். அடுத்தவரை திருத்தும் முயற்சியில் தீவிரம் காட்டுவது மனஇறுக்கத்தையும் தாக்கத்தையும் தான் அதிகரிக்கச் செய்யும். திருமண உறவுகள் சீர்குலைய முக்கிய காரணம் எதார்த்தத்துக்கு ஒத்துவராத கற்பனைகளும் எதிர்பார்ப்புகளும் தான்.

# தலையை வைத்துவிட்டு பயணமா?



முல்லா எப்போதுமே உஷார் பேர்வழி. என்றாலும் அவரையும் மீறி ஒருவரிடம் ஏமாந்துவிட்டார். 'ரொம்ப நெருக்கடி' என்று நம்பும்படியான காரணம் சொல்லி பணம் கேட்ட பக்கத்து ஊர் நண்பருக்கு ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்துவிட்டார்.

அதற்குப் பிறகுதான் பிரச்சினையே. முல்லாவைப் பார்த்த நேரத்தில் எல்லாம் அந்த நண்பர் ஓடி ஒளிய ஆரம்பித்தார்.

முல்லாவுக்குத் தனது பணம் திரும்பக்கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. ஆனால், ஒரு நாள் அதிகாலையிலே பக்கத்து ஊருக்குக் கிளம்பிவிட்டார்.

இதில் ஒரு சௌகரியம் என்னவென்றால், எந்தவொரு மனிதரையும் அவரது வீட்டில் காலையிலேயே பார்த்துவிட முடியும். அவர்கள் விழித்து, குளித்து, டிபன் சாப்பிடுவதற்குள் பிடித்தால் உண்டு.

முல்லாவும் இந்த டெக்னிக்கை உபயோகித்தே நண்பரின் ஊருக்கு அந்தக் காலை வேளையே புறப்பட்டார்.

ஆனால், முல்லா வருவதற்கு முன்னதாக அந்த நண்பர் ஓர் அவசர வேலையாக காலையிலேயே புறப்பட ஆரம்பித்துவிட்டார். டிபன் முடித்து வீட்டிலிருந்து புறப்படப்போன சமயம் தூரத்தில் வந்துகொண்டிருந்த முல்லாவைப் பார்த்துவிட்டார். உடனே வசையாக மாட்டிக்கொண்டு விட்ட உணர்வில் உடம்பு வெடவெடக்க வீட்டுக்குள் ஓடி ஒளியப்போனார்.

முல்லாவுக்குக் கூர்மையான கண்கள். தன்னைப் பார்த்ததும் உள்ளே ஓடிப்போன நண்பரைப் பார்த்துவிட்டார்.

நேராக நண்பனின் வீடு வந்தார். நண்பரின் மனைவி வாசலிலேயே நிறுத்தி பேசக்கொடுத்தாள்.

"அவர் ஊரில் இல்லையே...' என்றாள்.

"எப்ப வருவார்?" - கேட்டார் முல்லா.

"ஒரு வாரம் ஆகும்" என்றாள்.

"அப்படியானால் ஒருவாரம் கழித்து வந்து பார்க்கிறேன்."

"நல்லது..."

விடை பெற்ற முல்லா, ரோட்டுக்கு வரும்போது திடீரென ஜன்னலோரம் திரும்பிப் பார்த்தார். அப்போது பார்த்து முல்லா போய்விட்டாரா என்பதை உறுதிசெய்ய ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தார் நண்பர்.

முல்லா தன்னைக் கவனித்துவிட்டதை அறிந்ததும், அந்த நண்பர் மறுபடியும் உள்ளே ஓடிவிட்டார்.

மறுபடி வந்து கதவைத் தட்டினார் முல்லா.

"அவர்தான் ஊரில் இல்லையென்று சொன்னேனே...?" என்றாள்.

"தெரியும். இருந்தாலும் ஒரு தகவல் சொல்லிவிட்டுப் போக வந்தேன்."

"சொல்லுங்க..."

"இந்தத் தடவை ஊருக்குப் போகும்போது தலையை மட்டும் ஜன்னலோரம் விட்டுவிட்டுப் போய்விட்டார் போலிருக்கிறது. அடுத்த முறை ஊருக்குப் போகும்போதாவது மறக்காமல் தலையையும் ஊருக்கு எடுத்துச் செல்லச் சொல்லுங்கள்."

முல்லா இப்படிச் சொல்லிவிட்டுப் புறப்பட, வீட்டுக்குள் 'தடால்' என்ற சத்தம். கடன் வாங்கிய நண்பர் மயங்கிவிழுந்த சத்தம்தான் அது..

# சிறுவர் பக்கம்

## சிறுவர் கைவண்ணம்



பி. ஜெனிபா நிரோசனி, தரம் - 2,
ரோமன் கத்தோலிக்க பாலிக்கா வித்தியாலயம்
கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.



என்.நுஸ்லா,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு - 15.



பிரியதர்சன், தரம் - 7,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு - 15.



கு. ஆதித்தன், தரம் - 5,
கொச்சிக்கடை
சென். அன்ரனிஸ் மகாவித்தியாலயம்.

## வித்தியாசம் கண்டுபிடியுங்கள்!



மேலே உள்ள இரண்டு படங்களுக்கும் இடையில் மறைந்தது 6 வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.



நூலகம் மாநகராட்சி மன்ற ... ஒளி

# காகிதக் குண்டு

சிறுகதை

பொத்துவில்
அஸ்மின் உதுமாலெவ்வை

"பாரை நம்பி நான் பொறந்தேன்
போங்கடா போங்க... என் காலம் வெல்லும்
வென்ற பின்னே வாங்கடா வாங்க...
குளத்திலே தண்ணியில்லை....
கொக்குமில்லை மீனுமில்லை...
பெட்டியிலே பணமில்ல பெத்த புள்ள
சொந்தமில்ல... தென்னையை வெச்சா
இளநீரு... பிள்ளையைப் பெத்தா கண்ணீரு
பெத்தவன் மனசு பித்தம்மா... பிள்ளையின்
மனசு கல்லம்மா... பானையிலே
சோறிருந்தால் பூனைகளும் சொந்தமடா...!
சோதனையைப் பங்கு வெச்சா
சொந்தமில்ல... பந்தமில்ல...!"

"ஆ... போதும்... போதும்... பெரிய சௌந்தரராஜன் நெனப்பு... முதல்ல ஒப்பாரிய நிறுத்திட்டு... சாப்பிட போக்லாம் வா...!"

"டைமாயிட்டா...?"

என்றவாறே நான் கடிகாரத்தைப் பார்த்தேன். வங்கி நேரம் ஒரு மணி என்பது தெட்டத் தெளிவாகத் தெரிந்தது.

"மச்சான்... இன்டைக்கு நேரம் போனதே விளங்கல்ல... என்ட சாப்பாடு 'லேட்டா' வந்தாலும் 'லேட்டஸ்ட்டா' வரும்போலதான் தெரியுது... நீ... போ... நான் சொணங்கிச் சாப்பிடுரன்..."

"இஞ்சார்... ஒன்ட இஸிலக் காட்டாம... வா சாப்பிட...! உம்மா எனக்கு சாப்பாட்ட கனக்கத்தான் கட்டிரிக்கா..."

"இல்ல... பரவாயில்லை நீ போ..." என்றேன் நான். அலுவலகத்தில் பணிபுரியும் எல்லோரும் என்னோடு சரியான அன்பு. எனக்கு வங்கியில் வேலை கிடைத்ததிலிருந்து இன்று வரை வாப்பாதான் சாப்பாடு கொண்டு வந்து தருவார். உம்மா இல்லாத எனக்கு இன்று உலகமே அவர்தான். 'நான் கடையில சாப்பிடு கிறேன்... நீங்கள் கஷ்டப்படத் தேவை யில்லை' என்று சொன்னாலும் வாப்பா கேட்கமாட்டார். நான் என்ன செய்வது?

பக்கத்து ஆசனத்து சுமதியின் மேசையின் மேலிருந்த பத்திரிகை என்னை வா.. வாவென்று அழைப்பது போல் இருந்தது. அதில் 'சிவாஜி' ரஜினி 'கீட்டாரோடு' சிரித்துக் கொண்டிருந்தார். அதை எட்டி எடுத்த நான் சில கணங்களில் என்னையே மறந்து போனேன்...

* * *

"வள்... வள்... வள்.... வள்..."

நாய் இடைவிடாது குரைத்துக் கொண்டிருந்தது. வழமையாக புதிய மனிதர்கள் எவரும் வீட்டிற்கு வந்தால் மாத்திரமே வாழ்த்துப் பாடும் அது 'சுனாமிக்கானின்', "பபி.. பபி.. பபி.." என்ற வெண்கலக் குரலைக் கேட்டதுமே 'இள்... இள்..." என்று உறுமியவாறு அடங்கிவிடும்.

சுனாமிக்கான், ஒரு நாள் வரும் வழியில் 'பபி' யாருமே அற்ற அனாதைபோல மழையில் நனைந்த படி கிடந்ததாகவும். குட்டியிலிருந்து அதற்கு 'இறைச்சி' கொடுத்து வளர்த்து வருவதாகவும் நல்ல நன்றி உள்ளதென்றும் கூறுவார். தமக்கு கள்வர் பயமில்லை. ஆனால், தான் போகும் வழி எங்கிலும் தன்னை பின்தொடர்ந்து வருவதாகவும். அதுதான் பெரிய தொல்லை என்றும் வீட்டிற்கு வருவோர் போவோரிடம் அவர் 'நாய்'ப் புராணம் பாடுவார்.

'சல்மான்கான்' என்ற அழகிய பெயர் கடந்த 'சுனாமியின்' பிற்பாடு சுனாமிக்கான் ஆகச் சுருங்கிவிட்டது. இன்று ஊரில் அவரைத் தெரியாதவர்கள் யாருமில்லை.

'சுனாமிக்கான்' என்பது இந்தச் சமூகம் அவருக்கு கொடுத்த பட்டப் பெயர். ஆனால், அவர் ரொம்ப நல்லவர். 'போற்றுவோர் போற்றட்டும் புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றட்டும்' என்று வாழ்ந்து வருபவர். சிலர் அவரை சண்டைக்காரன், வம்புக்காரன், 'அறப்படிச்ச சுனாமிக்கான்' என்றே விளங்கி வைத்திருக்கிறார்கள். ஏழை மக்களுக்குத்தான் அவரின் நல்ல உள்ளம் நன்கு புரியும். சுனாமியின் போது அவர் தனியாளாய் நின்று செய்த சமூக சேவைக்கு ஊர் மக்கள் அனைவருமே நன்றிக் கடன் பட்டிருக்கிறார்கள். சுனாமி இடிபாடுகளுக்கிடையில் அழுகி நாற்றமடிக்கும் உடல்களைத் தேடி எடுப்பது முதல் அதை அடக்கம் செய்யும் வரை அவர் முன் நின்றார். பாதிப்படைந்த மக்களுக்கு நிவாரணம் வாங்கிக் கொடுப்பதிலிருந்து சுனாமிப் பணத்தை, சுருட்டுவதற்காய் அப்பாவி ஏழைகளிடம் 'லஞ்சம்' கேட்கும் ஆத்தாத அதிகாரிகளை அடிக்கவும் துணிந்தார்.

படித்தது பத்தாம் வகுப்புத்தான் என்றாலும் அறிவு பூர்வமாகப் பேசுவதிலும், விவாதங்கள் புரிவதிலும் 'ஊழல்' அதிகாரிகளுக்கு எதிராய் 'பெட்டிஷன்' அடிப்பதிலும் அவருக்கு நிகர் அவரேதான். ஊர்ப் பிரச்சினை முதல் உலக பிரச்சினைவரை தெரிந்து வைத்திருப்பார். அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம் போலிருக்கும். அடிக்கடி உதாரணங்களாக பழமொழிகளையும் நாட்டார் கவிகளையும் அள்ளிவிடுவார். எப்போதும் அவரைச் சுற்றி ஒரு பட்டாளமே இருக்கும்.

'சிகரட், தண்ணி, கன்னி' என்று தீய வழிகளைத் திரும்பியும் பார்க்காதவர். அதனால், இளைஞர்களும் மரியாதை செய்தார்கள். ஊரில் அதிகமதிகமாக 'பொலிஸுக்கும், கோர்ட்டுக்கும்' ஏறி இறங்குபவர் அவர் ஒருவரே. அவர் எம். ஜி. ஆரின் ரசிகன். அடிக்கடி 'நான் ஆணையிட்டால்...' எனத் தொடங்கும் பாடலை முணுமுணுப்பார். பார்ப்பதற்கு பயில்வானாக தெரிந்தாலும், மனதில் அவர் ஒரு குழந்தை.



சில அரச அதிகாரிகளுக்கு அவர் பெயரில் 'கோபமும் பயமும் இருக்கிறது. அவர்கள் அவருக்கு 'இருட்டடி' அடிக்கவும் துணிந்திருக்கிறார்கள். அதிலும் பல தடவை தப்பித்திருக்கிறார்.

சுனாமிக்கானுக்கு ஆண் பிள்ளைகள் பிறக்காததால் அவர் வேற்று மதத்தில் இருந்து அனாதைக் குழந்தை ஒன்றை தத்தெடுத்து வளர்த்ததோடு நில்லாமல் தனது சொந்தப் பெண் குழந்தையையும் விடப் பாசம் காட்டி, படிக்கவைத்து, தனக்கு கடற்கரை ஓரமாக இருந்த காணித்துண்டையும் எழுதிவைத்தார். ஆனால், அந்த நிலத்தையும் சேர்த்து 'பெரும்பான்மையினர்' அரச அதிகாரிகளின் துணையோடு உறுதி முடித்து தமது பூர்வீக நிலம் என்று கூறி போதி மரம் நட்டு, புத்தர் சிலையும் வைத்து காது கிழிய 'வணை' ஓதிக் கத்திக்கொண்டிருக்கிறார்கள்.

பரம்பரை பரம்பரையாக அவரை வந்தடைந்து, அவர் ஆண்டு வந்த பூமியை இன்று எவனோ ஆள்கிறான். ஈயடிக்கக் கூட இடுப்பில்லா முஸ்லிம் தலைவர்கள் முட்டைக்குள் ஒதுங்கி, அரசாங்கத்தின் முந்தானைக்குள் பதுங்கி, எடுப்பார் கைப்பிள்ளைகளாக வாய் பார்த்து நிற்கும் போது தனிமனிதன் சுனாமிக்கானால் என்ன செய்யமுடியும்..?

* * *

" வள்... வள்.. வள்... நாய் இடைவிடாது குரைத்துக் கொண்டே இருந்தது. அந்த இடைவிடாத பேய் ஓலத்தில் ஏதோ மர்மம் இருக்கின்றது என்பது மட்டும் தெளிவாகப் புரிந்தது.

"புள்ள...! புள்ள...! இன்னும் நீ குளிச்சி முடியலியா...? நீ குளிக்கப் போனா.. கெணத்து நீரெல்லாத்தையும் எறச்சிப்புட்டுத்தானே வெருவாய்... சுறுக்கா வா...! நான் குசினிக்குள்ள மீனும் கையுமா இரிக்கென் 'பபி' கெண்ணேரமா கொலச்சுக் கொண்டிரிக்கி... இவளவு நேரமும் பேப்பர் பாத்துக் கொண்டிருந்த ஒங்கு வாப்பா வெல்லடிக்கிற சத்தம் கேட்டு வெளியால போனார்... அவரையும் காணல்ல... கொஞ்சம் பாரேன்...!

இப்ப நாடு கெடக்கிற கெடக்கி... நாமதான் பாத்திரிக்கனும்... நடந்தாலும் குண்டு... இருந்தாலும் குண்டு... படுத்தாலும் குண்டு... பறந்தாலும் குண்டு... வெடில் எதுக்குள்ளால வெருகுது என்றே வெளங்குதில்லை... தேவெல்லாத பெரச்சினைக்குள்ள வாய ஓட்டி ரோட்டால போற குப்ப எல்லாத்தையும் தன்ட தலையில கொட்டத்தான் இவருக்கு தெரியும் 'யான வாண்டா என்ன...? பூனை கென் பொண்டாட்டி ஆனா நமக்கென்ன...?' பக்கத்தூட்டு பாத்துமாக்கு சுனாமிக் காசி போட, சுருட்டு சுலைமான்ட மகன் மூக்கோடி மூசீன் லஞ்சம் கேட்டானாம் எண்டு நேத்து சண்ட புடிச்சார்... அவன் 'ஒனக்கு செய்றன் வேல பார்... என்டுப்புட்டு போனான்... அந்த வாருவக் கட்டு பொலிசக் கிலிசக் கூட்டிட்டு வந்திட்டான் என்னெறியா...! கொமர் புள்ளக்கி இன்னமும் வீடு கூட கட்டல்ல... சுனாமி வீட்டையும் தேவெலெண்டுட்டார். அண்டக்கி ஒரு நாள் நக்கையும் தவிடில்லாமல்.. ஓடையும் வசிக்களுமில்லாமால் தெரிஞ்சவனுகள் 'சுனாமி லொத்தர்' அடிச்சதுக்குப் பொறகு உருப்பட்டானுகள்.. தெரிஞ்ச இங்கிலீச டஸ்சு... புஸ்சென்னு வெள்ளக்காரன் கிட்ட பேசி அவன்டய உறிஞ்சி குடிச்சிட்டானுகள். ஏழைகள படம் புடிச்சி கொம்பியுட்டரில போட்டு கோடி கோடி ஒலச்சிட்டானுகள். ஒதவி செய்யிறமாதிரி நடிச்சி ஊர வித்திட்டானுகள்.. இன்டெக்கி காரென்ன.. வேனென்ன, மிசினென்ன கலக்கி திரியிரானுகள். அதுக்குள்ள பெரதேச சபை எலக்சன்ல வோட்டு கேட்டு, கொள்ளையடிச்ச காசெல்லாத்தையும் செலவழிச்சி மீண்டும் கொள்ளையடிக்க வாரானுகள். நாசமத்த இவனுகள வெல்ல வைக்க சொணகெட்டவனுகள் இரிக்கும்போது வெல்லாமலிரிப்பானுகளா...?

இந்த மனிசன் என்ன்டான்னா.. சுனாமியில பாதிப்படைஞ்சவங்களுக்காக சண்ட புடிச்சி அரிசி, மா எல்லாத்தையும் எடுத்துக் குடுத்துப்புட்டு, தனக்கு கெடச்ச பங்கையும் யாருக்கோ குடுத்துப்புட்டு, வீசின கையும் வெறுங்கையுமா வீட்டிற்கு வாரார். நான் அன்றிரவு சோறாக்க அரிசில்லாம ஆசியத்திக்கிட்டத்தான் அரக்கொத்து அரிசி வாங்கி சோறாக்கின... இதக் கதச்சா பெரச்சின.. அல்லாக்கிட்டத்தான் சொல்லணும்."

என்று தனக்குள்ளே முணுமுணுத்துக்கொண்ட ஆயிஷா கறிச்சட்டியை தூக்கி அடுப்பில் வைத்தவளாய்.

'அடியே சுருக்கா வாடி..."

"உம்மா.. நான் உடுப்பு புழிஞ்சிட்டு இப்பான் குளிக்கிறத்திக்கு உடுப்பு மாத்துறன்.. நீ போய் என்னெண்டு பார்...!"

"எருவ மாடு.. அடுத்த மாசம் கெலியாணம் முடிக்கிற கொமர் போல நடக்கிறாளா...? இடி உலுந்த 'லவ்' மட்டும் பண்ணத் தெரியும். சோத்தக் கறிய ஒழுங்கா ஆக்கத் தெரியா...நேரத்தோட ஒழும்பி வீடு வாசல் கூட்டி செப்பமா வெக்கத் தெரியா.. வெளியால போகக் கொல பூசி மினுக்கி அழகு ராணியா போக மட்டும் தெரியும். வீட்டப் பாக்கேலா...!"

சத்தம் வெளிவராமல் தன் மகளை திட்டிய ஆயிஷா முன் வாசலுக்கு நுழைந்தாள்.

அவள் கண்ட காட்சிகள் நெஞ்சமெங்கும் நெருப்பைக் கொட்டியது. தலையில் வானம் இடிந்து வீழ்வதை உணர்ந்தாள். பேசுவதற்கு நாக்கு தடுமாறியது. அவள் கண்களை அவளாலேயே நம்ப முடியவில்லை. தான் காண்பது கனவா? இல்லை நிஜமா? என்பதை எண்ணுவதற்கு முன்பே அவளை அறியாமலே..

"என்ட அல்லாஹ்வே...! என்ட உம்மா...' என்று ஊர்கேட்க அழுதவாறு குண்டடிபட்டு சுருண்டு கிடக்கும் சவத்தைப் போல நிலத்தில் சுருண்டு வீழ்ந்து கிடக்கும் சுனாமிக்கானை நோக்கி ஓடினாள். அவள் அழுகை ஒலி அண்ட சராசரங்களையும் அதிரச் செய்து எட்டுத் திக்கும் எட்டிப்பாய எதிர் வீட்டு தென்னை மரக் காகங்கள் சிலதான் கரைந்து பறந்தன. வேறெதுவும் நிகழவில்லை.

சுருண்டு கிடந்திருந்த சுனாமிக்கானின் வாயினூடாக குபீரென பாய்ந்திருந்த குருதி அவரது வெண்ணிற சால்வையையும் இரத்தக் களரியாக்கி நிலத்தில் தெறித்து வடித்திருந்தது. மூக்குத் துவாரங்களினூடாக இரத்தம் கோடிட்ட நிலையில் கண்களும் கண்ணீரை இழந்திருந்தன.

அவரருகே கிடந்த ஒழுங்காக கிழிக்கப்படாத கடித உறை காற்றில் பறப்பதற்குத் தயாராக இருந்தது.

குரைத்துக் குரைத்துக் களைத்துப் போன 'பபி' வாலாட்டியவாறு அருகில் படுத்துக் கிடந்தது. அதன் கண்களிலும் கண்ணீர் குளம் கட்டியிருந்தது. அது தன்னை வளர்த்த எஜமானை ஏக்கத்தோடு வெறிச்சுப் பார்த்துக் கொண்டிருந்தது.

இதய நோயாளியான சுனாமிக்கானின் கைக்குள் சுருங்கிக்கிடந்த கடிதத்தை காலம் தன் பாட்டில் வாசிக்கத் தொடங்கியது...

* * *

எஸ்.கே. எம். அன்வர் B.Com,
மனிங் பிளேஸ்,
கொழும்பு - 06.
2007 - 01 - 01.

ஏ.கே. சல்மான் கான்,
அருகம்பை வீதி,
பொத்துவில்.

அன்புள்ள வாப்பாவிற்கு உங்கள் மகன் வரையும் மடல். நான் இங்கு நலம் தாங்களும் உம்மா, தங்கச்சி குடும்பம் எல்லோரும் நலமாய் வாழ ஆண்டவனை வேண்டுகின்றேன்.

நீங்கள் அனுப்பிய கடிதம் எனது கைகளுக்கு கிடைத்தது. அதைக் கடிதம் எனபதைவிட 'காகிதக் குண்டாகவே' நான் கருதுகிறேன். அதில், நீங்கள் என்னை பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி படிக்க வைக்க பட்ட பாடு பற்றியும், அதன் பிறகு 'குப்பை மஜீதுக்கு' லஞ்சம் கொடுத்து எனக்கு தொழில் எடுத்துத் தருவதற்காய் வாங்கிய கடன் பற்றியும், 'தங்கச்சிப் புள்ளையின்' திருமணத்தை முடித்து வைப்பதற்கு ஒரு இலட்சம் பணம் தேவைப்படுவதாகவும், அது இல்லாவிட்டால் திருமணம் நடக்காது என்றும் கட்டாயம் பணம் அனுப்பி வைக்கும்படியும் எழுதியிருந்தீர்.

அத்தோடு, 'ஏழெட்டு மாதமாக எந்தவித தொடர்பும் அற்று இருக்கின்றாய் அனாதையான உன்னை வளர்த்து, படிக்கவைத்து, ஆளாக்கியதற்கு நீ செய்வது தகுமா?' என்றும் எழுதி இருந்தீர்.

தற்போதைய நிலையில் என்னிடம் கடனாய்த் தருவதற்கும் பணமில்லை. என்னிடம் இருந்த பணத்தோடு வங்கியில் கடன் எடுத்து, கொழும்பிலே வீடு ஒன்றை வாங்கியுள்ளேன். அத்தோடு பௌத்த மதத்தைச் சேர்ந்த பெண்ணை இஸ்லாமிய முறையிலே விரைவில் திருமணம் முடிக்கவும் இருக்கின்றேன். அப்பெண் என்னோடு வங்கியில் பணி புரிகின்றாள். நான் ஊருக்கு வரப்போவதுமில்லை. வருவதற்கு எனக்கு நேரமுமில்லை.

எனவே, உங்கள் செலவிற்கு வேண்டுமென்றால் மாதாமாதம் ஆயிரமோ இரண்டாயிரமோ அனுப்பி வைக்கின்றேன்.

அல்லாவுக்காக மீண்டும் மீண்டும் கடிதம் போட்டு 'கோலெடுத்து' என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்.

இத்தோடு மடலை முடிக்கின்றேன்.

குறிப்பு:

முதல் மாத பணம் இரண்டாயிரம் ரூபாய் இதில் உள்ளது.

இப்படிக்கு
எஸ். கே. எம். அன்வர் B.Com

* * *

" மகன், மகன்.. மகன்...." சாப்பாட்டுப் பார்சலோடு நின்றிருந்த வாப்பாவின் குரலைக் கேட்டு தன்னிலைக்கு வந்த நான், அது வரைக்கும் பத்திரிகையில் பார்த்துக்கொண்டிருந்த 'காகிதக் குண்டு' சிறுகதையை மூடி வைத்துவிட்டு...

"வாங்க வாப்பா..., இரியுங்கோ...." என்றவாறு எழுந்தேன். எனக்குள் இனம் புரியாத சோக மேகம் மெல்ல மெல்ல கருக்கொள்ளத் தொடங்கியது.

(யாவும் கற்பனையில்லை)

# ரஜினியின் 'சிவாஜி' சாதனை படைக்குமா?

தென்னிந்திய தமிழ்த் திரைப்படத் துறையென்பது மிகவும் பழைமை வாய்ந்ததும் உலகப் புகழ் பெற்றதுமாகத் திகழ்கின்றது. அங்கே தயாரிக்கப்படும் எந்தவிதமான படங்களாக இருந்தாலும் அப்படத்தில் நடித்த நடிகர்கள், இயக்குனர்கள், தொழில்நுட்பக்கலைஞர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அனைவருமே புகழ்பெறுகிறார்கள். தயாரிப்பாளர்களும் பெரும்பாலும் நட்டமடைவதில்லை. காரணம் உலகளாவிய ரீதியில் செறிந்துவாழும் தமிழர்கள் இந்தப் படங்களை பார்க்கிறார்கள். எனவே தமிழ்த் திரைப்படங்கள் பெருமளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. ஒரு தமிழ்த் திரைப் படம் என்று சொல்லும் போது அந்தப் படத்தில் நடிக்கும் நட்சத்திர நடிகரின் பெறுமதி மற்றும் மக்களிடையே அவருக்கிருக்கும் செல்வாக்கினை



வைத்தே ஒரு படத்தின் வெற்றி மற்றும் வர்த்தகம் தங்கியிருக்கின்றது. நட்சத்திர நடிகர் என்பதற்கப்பால் வர்த்தக ரீதியில் வெற்றிகரமாகப் படங்களை இயக்கும் இயக்குநர் என்ற ரீதியிலும் குறிப்பிட்ட இயக்குநருக்கு நடிகருக்கு மேல் செல்வாக்கு அதிகமாக இருப்பதுடன் அவரின் படங்களுக்கும் நல்ல மவுசு ஏற்படுகின்றது. அந்த வகையில் தற்போதைய தமிழ்த்திரையுலகில் 'ஷங்கர்', 'ஹரி', 'கே.எஸ்.ரவிக்குமார்', 'கௌதம்', 'முருகதாஸ்' போன்றவர்கள் நட்சத்திர இயக்குநர்களாக விளங்குகிறார்கள். இவர்களின் திரைப் படங்களுக்கு ரசிகர்களிடையே அதிக எதிர்பார்ப்புகளும் படவிநியோகஸ்தர்களிடையே வரவேற்பும் இருக்கின்றது.

அன்று வர்த்தக ரீதியில் அதிக வரவேற்பும் மக்களிடையே அமோக ஆதரவுமுள்ள நடிகராகத் திகழ்ந்தவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். மக்களின் செல்வாக்கு மூலமாக தன்னுடைய திரைப்பட நிலையை உறுதிப்படுத்திக் கொண்டதுடன் அதன்மூலம் அரசியலிலும் சாதனை படைத்தார். ஆனால், இன்று அவருக்கும் மேலாக வெளிநாடுகளில் கூட ரசிகர் மன்றங்களை அமைக்கும் வண்ணம் சுப்பர் ஸ்டாராக விளங்கும் ரஜினிகாந்தின் 'சிவாஜி' திரைப்படம் பற்றித்தான் அனைவரும் பரபரப்பாக பேசிக்கொண்டிருக்கிறார்கள். சூப்பர் இயக்குனர் ஷங்கரின் கைவண்ணத்தில் கடந்த ஒரு வருடமாக படப்பிடிப்புகள் நடத்தப்பட்டுவந்த 'சிவாஜி' எதிர்வரும் 'மே' மாதம் வெளியாக வுள்ள நிலையில் அப்படத்தைப்பற்றிய பல்வேறு வியக்கத்தக்க தகவல்களும் 'ரஜினிகாந்' பற்றிய சர்ச்சைகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. 'சிவாஜி' படத்துக்குப் போட்டியாக அஜித்தின் 'கிரீடம்' களத்தில் இறக்கிவிடப்படக்கூடிய சூழ்நிலையில் 'ரஜினி' பற்றிய காரசாரமான விடயங்களை முன்வைத்து பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருப்பவர் வேறு யாருமல்ல, விஜய.ராஜேந்தர்தான்.

அண்மையில் விஜய.டி.ராஜேந்தர் கதை, வசனம், பாடல்கள் எழுதி தயாரித்து இயக்கி நடித்த 'வீராசாமி' வெளிவந்தது. படம் பெரியளவில் பேசப்படாவிட்டாலும் பரவாயில்லையென்று ஓடியது. இந்த நிலையில் 'ரஜினி'யைப்பற்றி இவர் பேசிவருவது பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. 'ரஜினி' கன்னட நடிகர். இவர் கன்னட உணர்வுள்ளவர். 'காவிரி' சம்பந்தமான பிரச்சினை தமிழகத்தில் ஏற்பட்டபோது இவர் தமிழ்மக்களுக்கு ஆதரவாக வாய்திறக்கவில்லை. நடுவர் மன்றம் சம்பந்த மாகவோ, தமிழ் நாட்டுக்கு ஆதரவாகவோ, சாதகமாகவோ எதுவுமே பேசவில்லை. அத்துடன் இவர் தமிழ கத்தில் கோடிக் கணக்கில் சம்பாதித்து கர்நாடகத்தில் சொத்துக்கள் வாங்கிப் போடுகிறார்.

விஜய டி.ராஜேந்தர் 'ரஜினி' பற்றி இவ்வாறு பேசுவது இது முதல் முறையல்ல. இவரின் இந்த பேச்சினால் ரஜினி ரசிகர்கள் கொதித்துப் போயுள் ளதுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக, ரஜினியின் உத்தரவுக்காக காத்திருப்பதாகத் தமிழகத் தகவல்கள் கூறுகின்றன.

அதுசரி, இந்த விடயம் சம்பந்தமாக ரஜினி என்ன சொல்கிறார். அவர் வழமைபோல எதுவுமேபேசாமல் 'சிவாஜி' படத்தை முடித்துவிட்டு அடுத்த படத்துக்கான டிஸ்கஷனில் ஏ.எஸ். முருகதாஸுடன் உட்கார்ந்து விட்டார். ரஜினி நடித்த 'சந்திரமுகி' தற்போது தொடர்ந்து 760 நாட்களைத் தாண்டி சென்னை சாந்தி தியேட்டரில் ஓடி அனைவரையும் வியப்பிலாழ்த்தி வருகிறது.

தியாகராஜ பாகவதர் நடித்த 'ஹரிதாஸ்' அன்று இரண்டு தீபாவளிகளைத் தாண்டி ஓடி சாதனை படைத்தது. ஆனால், 'சந்திரமுகி' அதனையும் மிஞ்சி ஓடுமென திரைப்படத்து றையினர் அதிசயத்துடன் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே 'ரஜினி' அதிகமாகப் பேசி 'பாபா'வில் பாடம் கற்றுக்கொண்டதால் இப்போதெல்லாம் மௌனமாக இருந்தே காய்களை நகர்த்தி வருகின்றார். வருடத்திற்கு ஒருபடம். அதுவும் மெகா கிட்டாகவேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டு வருகின்றார். 'சந்திரமுகி'யைவிட 'சிவாஜி' வசூலில் மிகப்பெரிய சாதனையை நிகழ்த்தும் என திரையுலகம் ஆவலுடன் காத்திருக்கின்றது. இதுவரை தமிழ்த் திரையுலகில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களை விடவும் அதிக செலவில் தயாரிக்கப்பட்டுள்ள 'சிவாஜி' நிச்சயமாக ஒரு புதிய சாதனையை நிகழ்த்தப் போவது உண்மை. அப்போது விஜய.டி.ராஜேந்தர் போன்றவர்கள் ரஜினி பற்றி கூறிய கருத்துக்கள் அடிபட்டுப் போவதுடன் 'ரஜினி'யின் புகழ் இன்னமும் உயருமே தவிர இறங்காது என அவரின் ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். இந்நிலையில் தமிழ்த் திரையுலகத்தில் மிக பரபரப்பாக பேசிக்கொள்ளப்படும் விஷயம் என்ன தெரியுமா? ரஜினியும் கமலும் இணைந்து ஒன்றாக நடிக்கப் போகிறார்களாம். கேட்க நன்றாகத்தான் இருக்கின்றது. ஆனால் நடக்குமா என்பதற்கு காலம்தான் பதில்சொல்ல வேண்டும்.

-பாலா சங்குபிள்ளை-

# ராசி பலன்

16-04-2007 முதல் 22-04-2007

பொ.சந்திரலிங்கம்

## மேஷம்

அச்சுவினி, பரணி,கார்த்திகை 1

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். தாய் நலம், தந்தை நலமில்லை. வீட்டில் ஓர் அளவு அமைதி இருக்கும். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் நுட்பத்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## ரிஷபம்

கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம்1, 2

காரிய சித்தியுண்டு. பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர் அயலவர் உதவுவர். தாய் நலமில்லை. தந்தை நலம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். வீட்டில் அமைதி நிலவாது. உடல்நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். பிரயாண வாய்ப்பு உண்டு. நண்பர்கள் உதவி செய்வர்.

## மிதுனம்

மிருகசீரிடம்3,4 திருவாதிரை, புனர்பூசம்1, 2, 3

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர்கள் உதவுவர். பெற்றோர் நலம். நல்ல வசிப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## கடகம்

புனர் பூசம் 4 , பூசம், ஆயிலியம்

காரிய சித்தி உண்டு. பிரயாணவாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் உண்டு. பகை விலகும் நல்ல வசிப்பிடம் அமையலாம். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்படும். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். நண்பர்கள் உதவிசெய்வர்.

## சிங்கம்

மகம், பூரம், உத்தராடம் 1

காரிய சித்தி உண்டு. பிரயாண வாய்ப்புக்கள் உண்டு. பணம் இருக்கம். உறவினர், அயலவர் உதவிசெய்வர். பெற்றோர் நலம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். நல்ல வசிப்பிடம் அமையலாம். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழிற்றுறை முன்றேறும். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

## கன்னி

உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2

காரிய சித்தி உண்டு. பிரயாண வாய்ப்பு இருக்கும். பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவுவர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் இருக்கும். தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## துலாம்

சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3

காரிய சித்தி உண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவிசெய்வர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். பகை விலகும். உடல் நலமுண்டு. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாது. நண்பர்கள் இருப்பர்.

## விருச்சிகம்

விசாகம், அனுசம், கேட்டை

காரியத் தடை இருக்கும். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர்கள் அயலவர்கள் உதவிசெய்வர். பெற்றோர் நலம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை உண்டு. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்கும். தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழிற்றுறையில் முன்னேற்றம் காணப்படும். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். நண்பர்கள் உதவிசெய்வர்.

## தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1

காரியத் தடை இருக்கும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவிசெய்வர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை உண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வ உணர்வு குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புக்கள் நிறை வேறாது.

## மகரம்

உத்தராடம்2,3,4 திருவோணம், அவிட்டம்

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் உதவி செய்வர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி நிலவாது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாது.

## கும்பம்

அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

காரிய சித்தி உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவி செய்வார். பெற்றோர் நலம். நல்ல வசிப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாது.

## மீனம்

பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தி உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவிசெய்வர். தாய் நலம். தந்தை நலமில்லை. வீட்டில் அமைதி நிலவும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும்.



# அறிவியல்

## தகவல் தொழில்நுட்ப புரட்சி!



தகவல் தொழில் நுட்பத் துறையில் ஏற்பட்டு வரும் அளப்பரிய முன்னேற்றங்கள் பிரமிக்கத்தக்க மாறுதல்களைச் சாமானியர்களின் வாழ்வில் கொண்டு வந்து சேர்க்கும் என்று எதிர்பார்க்க இடம் உள்ளது. வீடு தோறும் கம்ப்யூட்டர்களும் 'இன்டர்நெட்' இணைப்பும் வந்துவிட்டால், அவை தகவல் பரிமாற்றத்தின் போக்கையே மாற்றிவிடும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 'பெப்பன்' என்று அழைக்கப்படும் தொழில் நுட்பம் கல்வித்துறையில் 'வீடியோ கோன்பரன்சிங்' வசதிகளை எளிமைப்படுத்த முயன்று வருகிறது. இ-மெயில், மொபைல் டெலிபோன் போன்ற தொழில் நுட்பம் ஒரு வித அன்னியத் தன்மையுடன் தகவல்களைக் கொண்டு வந்து சேர்க்க நவீன வகை 'வீடியோ கொன்பரன்சிங்' வசதிகள் நேரடியாக ஒருவர் நம்முடம் உரையாடுவது போன்ற உணர்வை ஏற்படுத்திவிடும். இவ்வகைத் தொழில் நுட்பங்கள் விரிவாகவும் முழு வீச்சிலும் செயற்படவேண்டுமென்றால் போதுமான 'பேண்ட்வித்' வசதிகள் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். அந்த நிலையை எட்டத்தான் இந்தியத் தகவல் தொழில் நுட்ப அமைச்சகம் சீரிய முயற்சிகளைச் செய்து கொண்டிருக் கிறது என்று சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. பெங்களூரில் உள்ள இந்திய தகவல் தொழில் நுட்ப நிறுவனத்தின் இயக்குனரான சவுமியா நாராயணன் சடகோபன், ''தொண்ணூறு களில் சி யு சீ மி என்றொரு தொழில் நுட்பம் இதே போல மிகுந்த ஆர்ப் பாட்டத்துடன் அறிமுகப் படுத்தப்பட்டது ஆனால், அதன்பின் என்ன ஆனது என்றே தெரியவில்லை. இந்தியா போன்ற பெரிய நாட்டில் எல்லோரையும் சென்றடையுமாறு தொழில் நுட்பங்கள் உருவாக்கப்பட வேண்டும்'' என்ற எச்சரிக்கையையும் முன் வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


## சாப்பிட்டவுடன் ஓய்வு!



சாப்பிட்டவுடன் அசதியும் தூக்கமும் ஏற்படுவதற்குக் காரணம் ரத்த ஓட்டத்தில் உண்டாகும் சில மாறுதல் களேயாகும். உடலிலுள்ள பல்வேறு பகுதிகளுக்கும் தேவைப்படும் ஊட்டப் பொருட் களையும், ஓட்சி சனையும் எடுத்துச் செல்வது இரத்தமே. உறுப்புக்களின் தன்மைக்கும், வேலைக்கும் ஏற்ப இரத்தத்தின் அளவு சற்றுக் கூடவோ குறையவோ ஆகும். சாப்பிட்டவுடன் உணவு செரிமான வேலை தொடங்கி விடுகிறது. செரிமான உறுப்புக்களில் இரைப்பை திறம்படச் செயலாற்று வதற்கு அதிக அளவு ஊட்டம் தேவைப்படுகிறது. இதனால், இரைப்பைப் பகுதிக்கு அதிக இரத்தம் அனுப்பப் படுகிறது. மூளைப்பகுதிக்கும், மற்ற புலனுறுப்புகளுக்கும் செல்லும் ரத்தத்தின் அளவு குறைக்கப்படுகிறது. இதனால், போதுமான அளவு ரத்தம் கிடைக்காததால், மூளை சிறிது சோர்வடைகிறது. இதனால் அசதியும் தூக்கமும் வருகிறது. இந்த நிலையில் சிறிது நேரம் தூங்கி ஓய்வெடுப்பது நல்லதே.


## அணு உலைகள் விற்பனைக்கு!

மெகாவாட் மின்சக்தியை அணு ஆற்றல் மூலம் உற்பத்தி செய்யும் ஆற்றல் கொண்ட கன நீர் அணு உலைகளை வடிவமைத்து 2 தெற்காசிய நாடுகளுக்கு விற்க இந்தியா ஆயத்தமாகி வருகிறது. அணு ஆற்றல் துறையில் இந்தியா உயரிய நிலையை எட்டியிருப் பதையே இது காட்டுவதாக நிபுணர்கள் கருது கின்றனர். இந்திய அணு மின் கழகத் தலைவரான காட்டர் சிரேயான்ஸ் குமார் ஜெயின், ''இது தொடர்பாகச் சர்வதேச டெண்டர்கள் கோரப்பட இருப்பதால், எந்தெந்த நாடுகளுக்கு இந்தியா அணு உலைகளை விற்கப் போகிறது என்று இப்போது தெரிவிக்க இயலாது'' என்று குறிப்பிட்டிருக்கிறார். மெகாவாட் மின் உற்பத்தி செய்யக் கூடிய கன நீர் அணு உலைகள் அற்புதத் திறன் கொண்டவை, பாதுகாப்புப் பூரணமாக உறுதி செய்யப்பட்டிருக்கிறது என்பதால் இவை சர்வதேசப் போட்டிகளில் முன்னணியில் நிற்கின்றன'' என்றும் அவர் கூறுகிறார். சர்வதேச அளவில் அணு மின் உற்பத்தி உலைகளைத் தயாரித்து அளிக்கும் ஜப்பானின் ஹிட்டாச்சி, வெஸ்டிங் ஹவுஸ், அமெரிக்காவின் ஜி.இ., பரான்சின் அரேவா, ஜெர்மனியின் சீமென்ஸ், கனடாவின் ஏ.ஈ.சி.எல்., ரஷ்யாவின் கித்ரோபரஸ் ஆகியவற்றுடன் போட்டி போட்டு ஜெயிக்கும் நிலையில் இந்தியத் தயாரிப்புகள் உள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.



வளர்ந்த தொழில்மய நாடுகள் ஆயிரம் முதல் ஆயிரத்து 500 மெகா வாட் மின் உற்பத்தி செய்யும் அணு உலை களையே தயாரிப்பதில் ஆர்வம் காட்டுகின்றன. ஆனால், இந்தியா 220 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் 13 அணு உலைகளைக் கொண்டிருக்கிறது. மேலும் 3 அணு உலைகள் நிறுவப்பட்டும் வருகின்றன. எனினும் கூடங்குளத்தில் நிறுவப்பட்டு வரும் இரு ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் கிட்ரோபரஸ் நிறுவனத்தின் அணு உலைகள் ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுபவை ஆகும். கூடுதல் மின் உற்பத்திசெய்ய வேண்டிய தேவைகள் இருப்பதால் அரசு ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் அணு உலைகளை இறக்குமதி செய்வதில் ஆர்வம் காட்டி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## தடுப்பூசி அவசியமா..?



பொதுவாக நோய்க் கிருமிகளோ, உடல் நலத்துக்கு ஒவ்வாத அயல் பொருள்களோ உடலுக்குள் நுழைந்தால் அவற்றை எதிர்த்து செயலிழக்கச் செய்யும் ஆற்றல் பெரும்பாலானோருக்கு இயற்கையாகவே உள்ளது. ஒரு சிலருக்கு இந்த நோய் எதிர்ப்பு ஆற்றல் சற்றுக் குறைவாக இருக்கக்கூடும். இதனை ஊக்குவிக்கவே தடுப்பூசிகள் போடப்படுகின்றன. தடுப்பூசி மருந்துகள் பொதுவாக இறந்த நோய்க் கிருமி களிலிருந்து தயாரிக் கப்படுகின்றன. இவ்வகை மருந்துகள் உடலினுள் செலுத்தப்படும்போது இயற்கையாகவுள்ள நோய் எதிர்ப்பு ஆற்றல் தூண்டப்பட்டு, நோய்க் கிருமிகளை எதிர்த்து அழிக்கத் தயாராகிவிடுகின்றன.

## சுற்றுலா வெப்சைட்



கோடைகாலச் சுற்றுலாக்கள் தொடங்கி விட்டன. இந்தியாவில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை சுற்றுலா களை கட்டியுள்ளது. சுற்றுலாவை மகிழ்ச்சி கரமாகவும், எளிமை ஆனதாகவும் ஆக்க நிறைய வெப்சைட்டுகள் உதவுகின்றன. www.tsiindia.com என்ற வெப்சைட் இந்தியாவின் அனைத்துச் சுற்றுலாத் தகவல்களையும் ஒரே இடத்தில் தரும் அரிய தகவல் தொகுப்பாக உள்ளது. இந்த வெப்சைட்டில் சுற்றுலா நகரங்களுக்கு இடையேயான தூரத்தைக் கணக்கிடும் வகையில் 'டிஸ்டன்ஸ் கல்குலேட்டர்' என்ற தகவல் தொகுப்பு உள்ளது. மேலும் ரயில், விமானம், பேருந்து தனியார் டிராவல்ஸ், வட இந்தியா, தென்இந்தியா, மேற்குஇந்தியா என பல்வேறு தலைப்புகளில் வெப்சைட் குழுக்கள் உள்ளன.

## மீன்களின் தூக்கம்!



மீன்களின் கண்கள், பலவிதங்களில் நம் கண்களை ஒத்திருந்தாலும் சில வேறுபாடுகள் உள்ளன. மீன்களால் நீரில் நன்றாகப் பார்க்க முடியும். ஆனால், நம்மால் முடியாது. நம்மால் கண்களைத் திறந்து வைத்துக் கொண்டே தூங்க முடியுமா? முடியாது. நாம் தூங்கும்போது கண்கள் இமைகளால் நன்றாக மூடப்பட்டு விடுகின்றன. மீன்களால் நம்மைப்போல் தூங்க முடியாது. ஏனெனில் நம் கண்இமைகளைப் போல மீன்களுக்கு இமைகள் இல்லை. எனினும் மீன்கள் தேவைப்படும்போது ஓய் வெடுத்துக் கொள்கின்றன. பெரும்பாலான மீன்களுக் குத் தலையில் கண்கள் இருபக்கங்களிலும் அமைந்துள்ளன. ஒவ் வொரு கண் மூலமும் வெவ்வேறு உருவத்தைக் காண முடியும். நம்மைவிட மீன்களின் பார்வைப்புலம் மிகுதியாக அமைந்துள்ளது. அவற்றால், முன்னாலும், பின்னாலும், மேலும், கீழும் நன்றாகப் பார்க்கமுடியும்.

# 'நெஞ்சாங்கூட்டு நினைவுகள்' வெளியீடும் கருத்தரங்கும்

புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் எழுதிய சிறுகதை தொகுப்பான 'நெஞ்சாங்கூட்டு நினைவுகள்' வெளியீட்டு விழாவும் கருத்தரங்கும் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன மண்டபத்தில் ஏப்ரல் 8, ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

டாக்டர் எம்.கே. முருகானந்தன் தலைமை வகிக்க சிவா சுப்பிரமணியம், எம்.தேவகௌரி, த.சிவசுப்பிரமணியம் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். புரவலர் ஹாசீம் உமர் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

இரத்தினவேலோனின் கதைகளில் கிராமத்தின் மணம் கமழ்வதுடன், பாத்திரங்களின் தன்மை குறித்து வாசகன் பிசகான முறையில் வினா தொடுக்காத வண்ணம் அவர் கதைகளை நகர்த்திச் செல்வதாக சிவா சுப்பிரமணியம் தனது உரையின் போது குறிப்பிட்டார்.




"பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ள இரத்தின வேலோனின் கதை சொல்லும் நடை சிறப்பானது. பாத்திரங்களின் அக மன உணர்வுக்குள் யாத்திரை செய்து பாத்திரங்களை வெளிக்கொண்டு வருவாரானால் அவை மேலும் சிறப்படையும்" என்று குறிப்பிட்ட தேவகௌரி, "அவர் பயன்படுத்தியுள்ள சில பிரதேச சொல்வழக்குகள் புரிந்து கொள்ள முடியாதவையாக இருக்கின்றன" என்றார்.

சில பாத்திரங்களின் போது ஆசிரியர் முன்னுக்குப் பின் முரணான விதத்தில் கருத்துக்களை முன்வைக்கும் அதேவேளை, அவருடைய சில கதைகளில் அளவுக்கு அதிகமான ஆங்கிலச் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும், ஒரு கதையில் 30இற்கும் அதிகமான ஆங்கிலச் சொற்கள் இருப்பதாகவும் இக்கதைகள் மத்தியதர வர்க்கத்தினரின் வாசிப்புக் கென்றே எழுதப்பட்ட கதைகளாகவே தோன்றுகின்றன எனவும் குறிப்பிட்டார்.

இக்கருத்துக்கள் குறித்து சபையில் இருந்தோரில் சிலரும் தமது முரண்பாட்டு நிலையை முன்வைத்தனர். குறிப்பாக பிரதேச சொற்பிரயோகங்கள் குறித்தும், ஆங்கில சொற்பிரயோகங்களை பயன்படுத்தியுள்ளமை குறித்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

மக்களால் பேசப்படுகின்ற பிரதேச மொழிச் சொற்கள் கதைகளில் பயன்படுத்தப்படவேண்டும். அவ்வாறு பயன்படுத்தப்படுகின்றபோதுதான் அவை நிலைத்து நிற்கின்றன. இல்லையெனில் அவை காலப்போக்கில் அழிந்துவிட தமிழ்மொழி பல நல்ல பதங்களை இழந்துவிடும் என்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.

ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துவது என்பது பொருத்தமான இடங்களில் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை பயன்படுத்துவதில் பிழையில்லை, ஏனெனில் பஸ், தியேட்டர் போன்ற சொற்கள் மக்கள் சாதாரணமாகவே தமது அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் சொற்களாகிவிட்டன. இவற்றுக்கு நேரான தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்துவது வலிந்து திணிக்கப்படுகின்ற ஒன்றாகவும், அதேவேளை வாசகனுக்கு விளங்காத ஒன்றாகவே இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

**-கே.வி-**

'நெஞ்சாங்கூட்டு நினைவுகள்' மீரா பதிப்பகத்தின் 65ஆவது வெளியீட்டாகும். ஆசிரியர் புலோலியூர் இரத்தினவேலான் சிறுகதை, பத்தி எழுத்துகள் என தமிழின் நவீன இலக்கியத் துறைக்கு கணிசமான அளவு பங்களிப்புச் செய்துள்ளார். புதிய பயணம் விடியட்டும் பார்ப்போம், நிலாக்காலம், விடியலுக்கு முன் ஆகிய தொகுப்புகள் மீரா பதிப்பகத்தின் மூலம் வெளிவந்துள்ளன. திக்கற்றவர்கள் என்ற சிறுகதை தொகுதி சென்னை மணிமேகலை பிரசுர வெளியீடாக வந்துள்ளது. பத்தி எழுத்துக்களின் தொகுப்பாக புதிய சகத்திரப் புலர்வின் முன் ஈழச் சிறுகதைகள், அண்மைக்கால அறுவடைகள், ஈழத்துச் சிறுகதைகள் என்பனவும் வெளிவந்துள்ளன.

நெஞ்சாங்கூட்டு நினைவுகளில் நெஞ்சாங்கூட்டு நினைவுகள், சரவணை பிறந்தநாள், புத்துணர்ச்சி, தந்தையுமாகி, அறிமுக விழா,ஒற்றைப் பனை, புதிய தரிசனங்கள், அம்மா ஆகிய ஒன்பது கதைகள் உள்ளன.

"பிற பாத்திரங்களை சிருஷ்டித்துக் கதை சொல்வதைவிட நான் நானாகவே நின்று கதை கூறுவதையே பெரிதும் விரும்புகிறேன். அப்போதுதான் மன எழுச்சிகளை இயல்பானதாக வெளிக்கொணரமுடியும்" என தான் நம்புவதாக குறிப்பிடும் வேலோன் அந்தவகையில் பத்துப் பதினொரு வயது முதல் (1970கள்) நாற்பத்து எட்டு வயது வரையிலான மூன்று தசாப்த காலகட்டத்தில் தனிப்பட்ட தனது வாழ்க்கைக் கோலத்தினூடே எம் தேசியத்தின் சமூகமாறுதல்களை முதல் 5சிறுகதைகளும் சித்திரித்து நிற்க, கடைசி நான்கு கதைகளும் புற அனுபவச் சித்திரிப்புகளாக அமைந்து இந்த நூலினை முழுமைப் படுத்த முனைவதாக விவரிக்கின்றார்.




வேலோனின் கதை சொல்லும் பாங்கு எளிமையானது, வாசகனால் எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடியது. எழுத்து நடை, சொல்லாட்சி என்பன கதாமாந்தர்களின் பிரதேச தன்மையையும், மண் மணத்தை வெளிக்கொணர்வதில் முனைப்புடன் செயல்படுபவை. இந்நூலில் அத்தன்மைகளை காணமுடியும்.

ஆசிரியரின் இந்த நூலையும், அவருடைய ஏனைய படைப்புகளையும் பெறவிரும்புபவர்கள் 'மீரா பதிப்பகம்'

197/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை கொழும்பு - 06 (தொ.பே.- 2513336) என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.




## புதிய விருந்தாளிக வருவாகலா?

"ஆத்தா! காக்கா கத்துனா, வீட்டுக்கு விருந்தாளிக வருவாக'ன்னு சொல்லுதாங்களே நெசமா?"

"அட, ஏம்லே இப்படி சந்தேகப்படுதே!"

"ஆத்தா! விருந்துக்குப் பொறவு காக்கா வீட்டு வாசலுக்கு வரும் என்று சொன்னா அது நெசம்தான். காக்கா கத்துனா விருந்தாளிக வருவாங்கங்கிறது தலைகீழ் விசயமா இல்லே கெடக்குது"

"அப்புடி சொல்ல முடியாது. இந்த மாதுரி விசயங்களை வேற மாதுரியும் பார்க்கணும். தமிழ்நாட்டுலே நடக்கப்போகிற இஸ்லாமிய இலக்கிய மாநாடு சம்பந்தமா நாமதான் ரெண்டு மூணு கெழமையா பேசிண்டிருக்கோ மில்லியா?"

"எதைச் சொல்லுறிதியோ?"

"தமிழ் நாட்டுலே விழா, இங்கே பதவிக்காக சிலம்புச் சண்டையா'ன்னு மண்டையை பிச்சிண்டிருந்தே மில்லே. அந்தச் சமாச்சாரம்தான். நான் தான் பெயரியவன்னு ஆளுக்கு ஆள் பத்திரிகைக்கு அறிக்கை விட்டிண்டிருக்கிற இந்த சிலம்படி காரங்களுடைய சண்டை, சந்திக்கு வந்துட்டுட்டுதோ இல்லியோ சமூகம் முழிச்சிட்டுது ரகுமானே! இதை இப்புடியே விடப்படாது. சரியான ஒரு வழி மூலம் நம் ஏழைக் கலைஞர்களுக்கு தொண்டு பண்ணுகிற மாதுரி ஒரு திட்டம் ஆரம்பிக்கணுமின்னு காத்தான் குடியிலிருந்து ஒரு குரல் கேட்குது."

"சுபான் அல்லாஹ்"

"இலங்கையின் இலக்கியப் பேராளர்கள், கலைஞர்கள் குழுவுக்கு தலைமை தாங்கி மகா நாட்டை சிறப்படையச் செய்ய கலைஞர்களின் காவலர் எனப் புகழப்படுகிற, நாடாளுமன்ற விவகார அமைச்சர் அல்ஹாஜ ஏ.எச்.எம். அஸ்வர் அவுகளை தேர்ந்தெடுக்கனும்னு காத்தான் குடி குரல் ஒலிக்குது".

"அடிசக்கை! அப்புடின்னா புதிய விருந்தாளி வருவாங்கன்னு ஆத்தா சொல்லுதியலா."

"ஆமாம்' லே! ஒரு நேர்மையான குரலுக்கு சமூகம் செவிசாய்ச்சாகனுமே!"

"அது சரி ஆத்தா! நீங்க சிலம்படி காரங்கன்னு சொல்லுதியலே அவுக நல்லாத்தானே செயல்படுகிறதா மார்தட்டிக்கிறாங்க"

"அட, நீ ஒன்னு யாருதான் நாம சோட போனோம்னு சொல்லு தாங்க. இப்ப ஒரு சமாச்சாரத்தை சொல்லுதேன் கேளு ஒரு புரவலருக்கு இந்த ஆள் கூட்டி[illegible]றவங்களுலே ஒருத்தரு ஒ[illegible] படிவத்தை குடுத்திருக்கிறா[illegible]. இவுங்களுக்குள்ளே பெரிய பிச்சல் பிடுங்கல் குடுமிச்சண்டை இருக்குன்னு தெரியாத நம்ம புரவலரு, படிவத்தை நெறைச்சி மத்தவரிட்ட குடுத்திட்டாரு. அடேயங்கப்பா, இதை கேள்விப் பட்டுட்ட படிவத்தை குடுத்தவரு, எறும்பு கூட்டம் மேலே கா[illegible]ல வைச்சவரு மாதுரி குய்யே[illegible] முய்யோன்னு குமுறி 'ஏலே' அதை எப்பிடி அவன்ட்ட குடுப்[illegible]ன்னு சீண்டி போட்டாராம். புரவலரு ஆடிப்பொய்ட்டார்"

"என்ட ரகுமானே!"

## இந்திய பதிப்புகளுக்கு கோவிந்தா? கோவிந்தா?

கலாசார அமைச்சு கட்டடத்தின் படிக்கட்டுகளில் ஒருவர் ரொம்பவும் ஆவேஷமுடன் படபடவென இறங்கிக் கொண்டிருக்கிறார்.

" என்ன எழுத்தாளர்வாள் திருவிளையாடல் படத்துல எம்.பெருமான் கோலத்துல வார செவாலியர் சிவாஜி மாதுரி படவேகத்திலே வந்துண்டிருக்கீர். புதுசா ஏதும் புத்தகம் போட்டேளா. இதென்ன கையிலே பெரிய புத்தகக்கட்டு...?"

நம் கேள்வி காதுல விழுந்ததோ என்னவோ நின்றார். தலையை நிமிர்த்தினார்.

"சிவசிவா! என்ன கண்ணுல அக்கினி இப்படி தகதகக்குது? ரொம்பவும் கோபமா இருக்கேல்?"

"ஏ! வழியை விடுய்யா. இங்கே கலாசார அமைச்சுல என்னென்னவோ பண்ணிண்டிருக்கா. நீங்கெல்லாம் ஒன்னும் தெரியாத பாப்பாக்களாட்டம் குண்டுச் சட்டிக்குள்ளே குதிரை ஒட்டிண்டிருக்கேல்..!"

"அடிசக்கை! ரொம்பவும் கோபத்தோடுதான் இருக்கேல் அப்படி என்ன தலைபோகிற சமாச்சாரம் சொல்லுங்கோவன்."

"எதைச் செல்றது? என்னென்னவோ நடக்கிறது. தமிழ் எழுத்தாளன் இனி இந்தியாவிலே புத்தகம் போடுறதைப் பத்தி யோசிக்கப்படாது. தலையிலே கைவைச்சுண்டு எங்காவது தெருமுனையிலே அம்போல்ன்னு குந்திக்க வேண்டியதுதான்."

"அடப்பாவமே! சமாச்சாரத்தை சொல்லுங்கோ"

"இதோ இந்த புத்தகக்கட்டைப் பாருங்கோ. இந்தியாவிலே அச்சுப்போட்டது. இரண்டாம் பதிப்பு. கொஞ்சம் புத்தகம் கொண்டாங்கனுன்னு கடிதம் வர மினிஷ்ரிக்கு வந்தா, 'என்ன எப்பவோ வரச்சொன்னோம். இப்ப வாரேள் 'டு லேட், அதுமட்டு மில்லே நீங்க இந்தியாவிலே போட்டா புத்தகங்களுக்கெல்லாம் மத்திய வங்கி ரேட் போட்டுத்தான் பணம் தருவோம்...என்றாங்கள்."

"எம் பெருமானே! அப்படிச் சொல்றாளா? ஆமா, இந்த இந்திய சஞ்சிகைகளை யெல்லாம் கடைகளிலே ஆறு மடங்கு ஏழுமடங்குன்னுல்லே போட்டு விக்கிறாங்க, இதெல்லாம் எந்த வங்கி ரேட்டு ன்னு கேட்கப்படாதோ!"

"கேட்டேனே! அதெல்லாம் அவுட் ஒப் சப்ஜெக்ட்டாம்."

"கிழிஞ்சுதுபோ"

அதுமட்டும் இல்லவே. அடுத்த வருஷம் முதல் இனிமேல் இந்தியாவிலே போடுகிற புத்தகங்கள் ஒன்றையும் வாங்க மாட்டாங்களாம்."

"அடப்பாவிகளா 50 கிலோ குண்டைத்தானே தூக்கிப்போடுறேள்."

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்

# சர்வசித்து வருடப்பிறப்பு

**பொ.சந்திரலிங்கம்**

**14-04-2007** சனிக்கிழமை சித்திரை முதலாம் திகதி காலை 10.42இற்கு அபர பக்ஷ துவாதசித்திதியில் சதய நட்சத்திரத்தின் 3 ஆம் பாதத்தில் சுப்பிர நாம யோகத்தில் கவுலவக் கரணத்தில் மிதுன லக்கினத்தில் மகர நவாம்சத்தில் சுக்கிரன் காலவோரையில் சந்திரன் சூக்கும வோரையில் தாமதகுணவேளையில் நட்சத்திர பக்ஷியாகிய மயில் சாவுத் தொழிலும் சூக்கும பக்ஷி உண்டித் தொழிலும் செய்யும் காலத்தில் இப்புதிய சர்வசித்து வருஷம் பிறக்கின்றது.

அன்று காலை 6.42 முதல் 02.42 வரை விஷு புண்ணியகாலமாகும்.

அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், உத்தரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் 10.42 முதல் 01.17வரையுள்ள நேரத்தில் கைவிசேஷம் பரிமாறலாம்.

திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம் திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் காலை 06.05 முதல் 09.00 மணிவரையுள்ள நேரத்தில் கொடுக்கல் வாங்கல் செய்யலாம்.

அனுசம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம்ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் *(15-04-2007)* சித்திரை 2 ஆம் திகதி ஞாயிறு காலை 06.05 முதல் 08.29 வரை கொடுக்கல் வாங்கல் செய்யலாம். *(07.50-08.29)* மிகவும் சிறப்பான நேரம் (இடபலக்கின சுபவேளை).

**புதுவருடப்பலன்**

*(05-08-2007)* வரை சனிபகவான் கற்கடக ராசியில் சஞ்சாரம் செய்கிறார். நீர்நிலைகளால் பெருந் தீங்கு ஏற்பட இடமுண்டு. மீன்பிடிப்பதிலும் சிக்கல் கஷ்டம் இருக்கும். கப்பல் போக்குவரத்தும் பாதிக்கப்படும். கீழ்நோக்காக கன்னி ராசியைப் பார்ப்பதால் புயல், மழை போன்றவற்றால் துன்பம் ஏற்பட இடமுண்டு. நேர்நோக்காக மகர ராசியைப் பார்ப்பதால் மக்கள் இடப்பெயர்வு, பஞ்சம், பட்டினி, தொற்றுநோய், உயிர்இழப்பு என்பன நிகழும். மேலும் சனி மேல்நோக்காக நீசவீட்டைப் பார்ப்பதால் வாகன விபத்து, மக்களுக்கு அங்கஅவயவம் இழப்பு, அரச விரோதம் என்பன இடம்பெறலாம். 05-08-2007 இன்மேல் சிங்கவீட்டுக்குச் சனி மாறுவதால் கீழ்நோக்காக உச்சவீட்டைப் பார்ப்பதால் வாகனம், எண்ணெய், புடைவை வகை விலை உயரலாம். மதுபானங்கள் விலை கூடலாம். நேர்நோக்காக கும்பராசியைப் பார்ப்பதால் சுபமங்கள யோகம், கும்பவீடு சனியின் ஆட்சிவீடாக இருப்பதால் நாட்டில் அபிவிருத்தி உண்டாகும். பாதைகள் அபிவிருத்தி காணும். நீதி நிலைநாட்டப்படும். சனியின் மேல் நோக்காக யோகவீடான இடபவீட்டைப் பார்ப்பதால் கல்வி உயர்வு, வேற்றுமொழி, மதங்களுக்கு அந்தஸ்து, சமாதான வழிமுறைகள் ஆரம்பமாகி ஒக்ரோபர் மாதத்துக்கு மேல் அமுல்படுத்தப்படும். வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும். புதிய அரசமைப்பு அமுல்படுத்தப்படும். இந்தியா, இங்கிலாந்து உதவிசெய்யும். சிறுபான்மை மக்களுக்கு உரிய அரசியல் பாதுகாக்கப்படும்.

# அரசியல் தளம்பலில்....

(? ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரும் தத்தமது கூட்டாளிகளுடன் குத்துக்கரணம் அடித்து அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர் களாகவும் மகுடம் சூட்டிக்கொண்டனர்.

இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 25க்கு மேல் இருக்கக்கூடாது என்பதில் தீவிரமாக இருந்த ஜே.வி.பியினர்அரசுக்கு வழங்கிய ஆதரவை விலக்கிக்கொண்டு எதிரணியில் அமர்ந்துகொண்டனர். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் இனவாதப் பேச்சில் ஜே.வி.பியினரின் கூட்டாளிகளாக இருந்த ஜாதிக ஹெல உறுமயவின் பிக்குமார்கள் அரசின் பக்கம் ஒட்டிக்கொண்டு அமைச்சர் பதவி ஒன்றையும் பெற்றுக் கொண்டனர்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் முற்றும் துறந்து காவிஉடை அணிந்த நாங்கள் அமைச்சராக மாட்டோம் என்று கூறிக்கொண்டே ஜாதிக ஹெல உறுமயவ பிக்குமாரிடம் விலைபேசி விற்ற சம்பிக்க ரணவக்கவை அமைச்சராக்கி விட்டது. இது ஒருவேளை நன்றிக்கடனாகக் கூட இருக்கலாம். பிக்குமார்களும் நன்றி உள்ளவர்கள் போல் காட்டிக்கொண்டுள்ளனர்.

இப்படிக் குத்துக்கரணம் போட்டு பல்டி மன்னர்களாகி பின் அமைச்சர்களாகவும் பிரதியமைச்சர் களாகவும் ஆனவர்களுள் எத்தனைபேர் திருப்தியாக இருக்கின்றனர் என்றால் அது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இன்று நாடாளுமன்றம் முழுவதும் அமைச்சர்களாலேயே பொங்கி வழிகின்றது. யார்மீது முட்டிக்கொண்டா லும் அவர் ஓர் அமைச்சராகவோ அல்லது பிரதியமைச்சராகவோதான் இருக்கின்றனர்.

விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைத் தவிர ஏனைய அத்தனை பேரும் ரப்பர் ஸ்டாம்புகளாக மட்டுமே இருக்கின்றனர். அநேகமானோருக்குத் தாம் எந்த அமைச்சராக இருக்கின்றோம் என்பது தெரியாமல் இருக்கின்றது.

நெல்லுக்கு ஒருவர், வயலுக்கு ஒருவர், அரிசிக்கு ஒருவர், அதேபோன்று தேயிலைக்கு ஒருவர், தேயிலைத் தொழிற்சாலைக்கு ஒருவர், தேயிலைக் காணிக்கு ஒருவர் என அமைச்சர்கள் இருக்கின்றனர். ஆனால், இவர்களுக்கு என்ன பொறுப்பு என்பது இவர்களுக்கே தெரியாது. எல்லா பொறுப்புகளும் ஜனாதிபதியிடமே குவிந்துகிடக்கின்றன.

நாடாளுமன்றத்தில் 152 பேருக்கு மேல் அமைச்சர்கள் இருந்தும் 150 திணைக்களங்கள் ஜனாதிபதியிடமே இருக்கின்றன.

இன்று அமைச்சர்களாக இருப்பவர்கள் தமக்கு வேண்டிய சாரதிகளையும், சிற்றூழியர்களையும் கூட தமது விருப்பத்திற்கு நியமிக்கமுடியவில்லையாம். அத்தனைக்கும் அலரிமாளிகையின் உத்தரவைப் பெற வேண்டுமாம்.

பல அமைச்சர்களுக்கு இன்றும் கூட அமைச்சுக்கான அலுவலகங்கள் இல்லை. அமைச்சின் பெயர்ப் பலகைகளைத் தமது முதுகில் கட்டித் தொங்கவிட்டுக்கொண்டு நடமாடுகின்றனர்.

இவர்களுள் ஒருவர் சிரேஷ்ட அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க. இரண்டு பிரதமர்களின் புதல்வர். ஒரு ஜனாதிபதியின் சகோதரன் என்ற பெருமைகளைக் கொண்டவர்.

ஆனால், இவருக்கே ஓர் அமைச்சுக் கட்டடம் இல்லை. அமர்ந்து சேவை செய்ய ஒரு நாற்காலி இல்லை என்று நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகக் கூறுகின்றார்.

உயர் கல்வி அமைச்சின் பிரதி அமைச்சராக மயோன் முஸ்தபா நியமிக்கப்பட்டபோது தமிழ் பேசும் நம்மவர் என நாம் மகிழ்ச்சியடைந்தோம். ஆனால், அமைச்சின் பியூன் கூட அங்கு நடப்பதைக் கூறுவதில்லை. என்ன நடக்கின்றது என்பதே தெரியவில்லை. வடக்கு, கிழக்கில் பல்கலைக்கழக மாணவர் தெரிவு விகிதாசாரம் தொடர்பாக பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா விவரம் கேட்டபோது, அது அப்படித்தான் எதையும் கேட்கக்கூடாது என்பது போல் பதில் வந்ததாம்.

இது சில முன் உதாரணங்கள். 90 வீதமான அமைச்சர்களினதும், பிரதி அமைச்சர்களினதும் நிலை இதுதான். ஆனால், வெளியில் சொன்னால் வெட்கக்கேடாகிவிடும் என மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் வெதும்பிக்கொண்டிருக்கின்றனர். அதாவது விரக்தியின் விழிம்பில் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை என்பது போல் அரசின் பக்கம் பல்டி அடித்துச்சென்ற பிரதி அமைச்சர் எட்வட் குணவர்த்தன இப்பொழுது ரிவேஸ் கியரைப் போட்டு எதிர்க்கட்சியின் பக்கமே வந்துவிட்டார்.

இன்றும் சிலர் ரிவேர்ஸ் கியரில் கைவைத்துக்கொண்டிருக்கின்றனராம். எப்பொழுதும் பின்னடிக்க வாய்ப்புண்டு.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்தில் கபினட் அமைச்சர்களாக இருந்த மூவர் உட்பட மேலும் ஒரு கூட்டாளி கூடிய விரைவில் எதிர்க்கட்சியின் பக்கம் வரவுள்ளனர் என்று ஐ.தே.க. பிரதம பேச்சாளர்களுள் ஒருவர் தம்பட்டம் அடிக்கின்றார்.

இவர்களைப் பார்த்து ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச கூறியது ஒருவேளை பொருத்தமாக இருக்குமோ!

அதாவது அணி மாறி அமைச்சர்களானவர்களுக்கு முன்பு மலர் சூப்பி எச்சிப்படுத்திய எலும்புத்துண்டுகளையே கழுத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டுள்ளது. சூப்பிய எலும்பில் சதையும் இல்லை. ருசியும் இல்லை என்பதனாலேயே திரும்பி வருகின்றனர் என்று வெளிப்படையாகவே விமர்ச்சிக்கின்றார்.

அதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முதுகெலும்பு இல்லாதவர், தைரியம் இல்லாதவர் என்றெல்லாம் விமர்சனத்திற்கு உள்ளானவர்.

ஆனால், இப்பொழுது அப்படிக் காணப்படவில்லை. முன்பு நாடாளுமன்றத்தில் ஒரு சில நிமிடங்கள் மட்டுமே அவரது ஆசனத்தில் காணமுடியும். இப்பொழுதோ முழு நாளும் சபையில் இருந்து ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குப் பதிலடி கொடுத்துக் கொண்டே இருக்கின்றார்.

இந்த நேரத்தில் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே இப்படிக்கூறுகின்றார். ''எதிர்க்கட்சித் தலைவர் வயகரா மாத்திரை சாப்பிட்டவர்போல் சுறுசுறுப்பாகக் காணப்படுகின்றார்'' என்று கூறுகின்றார்.

ஒருவேளை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தனது அனுபவத்தைக் கூறுகின்றாரோ என்னவோ தெரியவில்லை.

இந்த சுறுசுறுப்பில்தான் அவர் ஒருமுறை நாடாளுமன்றின் சபாபீடத்தில் இருந்த செங்கோலையே தூக்கிக்கொண்டு ஓடிச் சாதனை படைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத்தில் நிலைமை இப்படிச் சீரழிந்து சின்னா பின்னப்பட்டுக் கொண்டிருந்தபோது ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அக்கட்சியின ரும் இன்னும் மூன்று மாதங்களில் ஆட்சியைக் கைப்பற்றுவோம், அரசு கவிழ்ந்துவிடும் என்று தீவிர பிரசாரத்தில் இறங்கியுள்ளனர்.

என்ன தைரியத்தில் எதை மையமாகக்கொண்டு இவர்கள் இப்படிக் கூறுகின்றனர்? எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல்டி அடித்ததுபோல் ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிரணிப் பக்கம் வந்துவிடுவார்கள் என்று நம்புகின்றனரா? அல்லது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கின்றனரா?

எது எப்படியோ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆறு வருடங்களுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருப்பார். இதை மாற்றியமைக்க முடியாது.

இந்தத் தைரியத்தில்தான் அவர் தனது மூத்த அமைச்சர்களைக் கூட உதாசீனம் செய்துவிட்டு தன்னிச்சையாக முடிவுகளை எடுக்கின்றார். இன்று நடைமுறைப்படுத்தப்படுவது ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனை அல்ல ராஜபக்ஷ சகோதரர்களின் 'மெதமுல்ல சிந்தனை' என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் அரசு கவிழ்க்கப்படவேண்டும். அல்லது நாடாளுமன்றம் கலைக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் ஐ.தே.கவின் வாய் சவடால் நிறைவேற வாய்ப்புகள் இல்லை.

எது எப்படியோ ஐ.தே.க. தேர்தல் ஒன்றுக்குத் தயாராகிவருவதை அவதானிக்கமுடிகின்றது.

''நாட்டில் அரச பயங்கரவாதம் தலை தூக்கிவிட்டது. வடக்கு - கிழக்கில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர். நாடெங்கும் தமிழர்கள் கடத்தப்படுகின்றனர். கப்பம் கேட்டு கொலைசெய்யப்படுகின்றனர். அப்பட்டமாகவே மனித உரிமைகள் மீறப்படுகின்றன. நாளாந்தம் கொலை மிரட்டல்களும், கற்பழிப்புகளும் அதிகரித்து வருகின்றன. பத்திரிகை மற்றும், ஊடகங்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. பத்திரிகையாளர்கள் மிரட்டப்படுகின்றனர். விலை வாசிகள் வீசம்போல் அதிகரித்துவிட்டன. அரச கஜானா வங்கு ரோத்து அடைந்துவிட்டது'' என்றெல்லாம் கூறிக்கொண்டு ரணில் விக்கிரமசிங்கவும் அவரது சீடர்களும் இன்று மக்கள் முன் செல்கின்றனர்.

இவர்களுடைய இப்பிரசாரங்கள் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளன. பிரதேசவாரியாக எதிர்க்கட்சியினர் நடத்தும் கூட்டங்களுக்கு வரும் கூட்டத்தைப் பார்த்து ஓரளவு ஊகிக்க முடிகின்றது.

ரணில் விக்கிரமசிங்க இப்பொழுது தமிழ் மக்களுக்காக கண்ணீர் வடிப்பதுபோல் காணப்பட்டாலும், அவரது முன்னாள் கைங்கரியங்களைத் தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை.

ரணில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்ட அதேவேளை கருணாவைத் தனியாகப் பிரித்து ஐக்கியத்தைச் சீர்குலைத்து முதுகில் குத்தியதை எவர் மறப்பார். அதற்கு கைமாறாகவே ரணிலின் ஜனாதிபதி ஆசை தமிழர்களால் நிராசையாக்கப்பட்டது என்பதை அவர் உணரவேண்டும்.

தமிழ் மக்களின் வாக்குகள் தான் ஒரு ஜனாதிபதியை உருவாக்கும். வாக்களித்தும் தோல்வியடையச் செய்யலாம். வாக்களிக்காமலும் வெற்றிபெறச்செய்யலாம் என்பதற்கு கடந்த ஜனாதிபதித் தேர்தல் ஓர் உதாரணம்.

எனவே, ரணில் விக்கிரமசிங்க இதற்குப் பிராயச்சித்தம் பெறவேண்டும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும், ஊர்ஜிதம் அளிக்கவேண்டும். சிறுபான்மை மக்களின் சுய கௌரவம் பாதுகாக்கப்படவேண்டும். மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் இவற்றை உள்ளடக்கிய தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்கவேண்டும். ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் சதுரங்க ஆட்டத்தில் எப்படிக் காய்நகர்த்தப் போகின்றார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

கிழக்கு மாகாணத்தில் சர்ச்சைக்குரிய உள்ளூராட்சி மன்றங்களில் டம்மி ஆட்சியாளர்களை அகற்றிவிட்டு மக்கள் ஆணையைப் பெற்ற வேட்பாளர்களிடம் நிர்வாக அதிகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கான திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்திற்கு கடந்த ஒருவருட காலமாக இருந்து வந்த பாரிய தலையிடி இதன்மூலம் நிவர்த்திசெய்யப்பட்டிருக்கிறது என்று அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

**ஏற்கப்பட்ட கோரிக்கை**

நிறைய் சட்டத்தரணிகளைக் கொண்டிருக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உள்ளூராட்சித் இரவுபகலாகக் கொடுக்கப்பட்டு வந்த நெருக்குதல்கள் காரணமாகவே இத்திருத்தச் சட்டம் அரசினால் கொண்டு வரப்பட்டிருக்கிறது.
இதன்பிரகாரம் கல்முனை மாநகரசபை உட்பட சில உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சி அதிகாரம் முஸ்லிம் காங்கிரஸின்உண்மையான வேட்பாளர்களிடம் கிடைப்பதற்கு வழி பிறந்திருக்கிறது. மரச் சின்னத்தைக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் தடையுத்தரவு வழங்கப்பட்டது.
இதனைத் தொடர்ந்து மு.கா.தலைவர் ஹக்கீம், உடனடியாக அரசியல் பீடத்தைக்கூட்டி -இந்நெருக்கடி நிலைமையை ஆராய்ந்தார். இத்தேர்தலில் கட்சியின் மரச்சின்னத்தில போட்டியிட முடியாது என்பதால் சில இடங்களில் சுயேச்சைக்குழுவாகவும் வேறு சில இடங்களில் ஐ.தே.கசார்பிலும் தேர்தலை எதிர்கொள்வது என அங்கு தீர்மானிக்கப்பட்டது.
போட்டியிட்டது. எனினும், தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் பெயர்கள் முஸ்லிம் காங்கிரஸ் பட்டியலில் இருக்கவில்லை. அவர்களி பெயர்கள் சுயேச்சை அணிப் பட்டியலிலேயே இடம்பெற்றிருந்தன. கல்முனை மாநகரசபைக்குப் போட்டியிட்ட முன்னாள் சென■டர் ம மௌலானா, முன்னாள் எம்.பி■ஹரீஸ் உட்பட 25வேட்பாளர்களின் பெயர்க வண்ணாத்துப்பூச்சியை சின்ன■■க் கொண்ட சுயேச்சைக்குழுப் பட்டியலிலும் அவர்கள் ஒவ்வொருவருக்குமான டம்மிகளின் பெயர்கள் முஸ்லிம் காங்கிரஸ் பட்டியலிலும் போடப்பட்டிருந் உண்மையான வேட்பாளர்க தமது பெயர்கள் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பு ம பத்திரத்தில் இல்லாமலேயே கட்சியின் மரச்சின்னத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிவிட்ட ஆனால், கதிரைகளில் போ அமர்ந்தவர்கள் டம்மிகள் தான். மக்கள்

# முடிவுக்கு வருகிறது பொம்மை ஆட்சி!


ரவூப் ஹக்கீம் — மசூர் மௌலானா — ஹரீஸ்

தேர்தல் சட்டத்தில் போதிய தெளிவைக் கொண்டிருக்கவில்லை என்பதனாலேயே டம்மி ஆட்சிக்கு வழிவகுத்தது என்ற அபிப்பிராயம் மக்கள் மத்தியில் பிரசாரப்படுத்தப்பட்டும் தலைமைத்துவம் மீது கண்டனக் கணைகள் வீசப்பட்டும் வந்த நிலையில் குறித்த திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேறியுள்ளது.
இவ்விடயத்தை எப்படியாவது வென்றெடுக்கவேண்டும் என்பதற்காகவே முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்துகொண்டது எனவும், அது நிறைவேற்றப்படும் வரை தான் பிரதி அமைச்சுப் பொறுப்புகளை ஏற்கப்போவதில்லை எனவும் அக்கட்சியின் செயலாளர் நாயகம் ஹஸனலி சிலவாரங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.
ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 18எம்.பிக்கள் அரசுடன் இணைவதற்கான முஸ்தீபுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் சிலரும் அரசுடன் சேர்ந்து கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வந்தனர்.
இதனால், மு.கா.கட்சி முழுமையாக-நிபந்தனை எதுவுமின்றி அரசில் இணைந்துகொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதன்போது வழமைபோன்று சிலகோரிக்கைகளை மு.கா.தலைமைத்துவம் ஜனாதிபதியிடம் முன்வைத்தது. 19அம்சக் கோரிக்கைகள் அடங்கிய முஸ்லிம் காங்கிரஸின் பத்திரத்தைக் கூட கையேற்க மறுத்த ஜனாதிபதி சர்ச்சைக்குரிய உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரப் பிரச்சினைக்கு மட்டும் தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்திருந்தார்.

**மண்டியிட்டுப் பெற்ற தீர்வு!**

இவ்விடயம் கூட இரண்டரை மாதகாலம் இழுத்தடிப்புச் செய்யப்பட்ட பின்னரே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் முஸ்லிம் காங்கிரஸ் தரப்பினரால் பட்டியலில் பெயர்கள் இல்லாத-ஆனால் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்ட கட்சிப் பிரமுகர்கள் பதவியேற்பதற்கு மேற்படி சட்டத் திருத்தம் இடமளிக்கவுள்ளது.
இந்தச் சட்ட ஏற்பாடுகளின் காரணமாக முன்னாள் செனட்டர் மசூர் மௌலானா, முன்னாள் எம்.பி.ஹரீஸ் போன்றோர் கல்முனை மாநகர சபைக்குள் பிரவேசிக்க முடியும். கடந்த ஒருவருட காலமாக இவர்களுக்கான கதிரைகளில் பொம்மைகளாக அமர்ந்திருந்த டம்மிகள் இச்சட்டத் திருத்தத்தின் மூலம் அப்புறப் படுத்தப்படுவர்.
அரசிடம் மண்டியிட்டு -இவ்வுள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக பிரச்சினைக்கு தீர்வை நாடவேண்டிய அவலம் முஸ்லிம் காங்கிரஸிற்கு ஏன் ஏற்பட்டது?

**நீதிமன்ற உத்தரவு**

சென்ற வருடம் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு வெளிவந்தது முதலே முஸ்லிம் காங்கிரஸ் தாம் போட்டியிடக்கூடிய இடங்களில் எல்லாம் வேட்பாளர்களைத் தேர்வுசெய்து வேட்பு மனுப்பத்திரங் களைத் தாக்கல் செய்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்தபோது -ஒரேயொரு நாள் இருக்கையில்-பெப்ரவரி 15ஆம் திகதி மு.கா.தலைவராக ரவூப் ஹக்கீமும், செயலாளராக ஹஸனலியும் செயற்படமுடியாது எனவும் அவர்களினால் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கப்படும் வேட்பு மனுப்பத்திரங்களை தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் நிராகரிக்கவேண்டும் எனவும் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடையுத்தரவு ஒன்றை வழங்கியது.
மு.கா.யாப்பு விதிகளின் பிரகாரம் சென்ற வருடம் பேராளர் மாநாடு நடத்தப்படவில்லை எனவும் அதனால், தலைவர், செயலாளர் மற்றும் அரசியல் அதியுயர் பீடம் என்பன சட்டரீதியானவை அல்ல எனவும் தெரிவித்து ஒருவர் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பிலேயே இந்த இடைக்கால அதேவேளை, நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடையுத்தரவை ஆட்சேபித்து கட்சி தாக்கல் செய்யவுள்ள மேன்முறையீட்டுக்கு சாதகமாகத் தீர்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் -சில இடங்களில் அவசியம் கட்சியின் மரச்சின்னத்திலேயே போட்டியிடுவதற்கான வியூகமும் வகுக்கப்பட்டது.

**இருவேறு வேட்பு மனுக்கள்**

அதன் பிரகாரம் கல்முனை மாநகரசபை, அக்கரைப்பற்று, அட்டாளைச் சேனை, நிந்தவூர், பொத்துவில், நாவிதன்வெளி பிரதேச சபைகளுக்கு சுயேச்சை அணியாகவும் மு.கா.சார்பாகவும் இருவேறு வேட்பு மனுப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
கொழும்பு மாநகரசபை, புத்தளம், காத்தான்குடி, கிண்ணியா நகரசபைகள், ஏறாவூர், ஓட்டமாவடி, மூதூர், கிண்ணியா, கற்பிட்டி போன்ற பிரதேச சபைகளுக்கு சுயேச்சைக் குழுவாகவும் சம்மாந்துறை, காரைதீவு உட்பட வேறு சில உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஐ.தே.க.சார்பாகவும் வேட்பு மனுப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.
பின்னர் மு.கா.நீதிமன்றம் சென்றது. ஹக்கீமும் ஹஸனலியும் தலைவராகவும் செயலாளராகவும் செயற்படமுடியாது என எந்த நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்ததோ அதே நீதிமன்றம் அத்தடையுத்தரவு செல்லுபடியற்றது எனத் தீர்ப்பளித்தது.
அத்துடன், மு.காவின்நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களை மீள ஏற்றுக்கொள்ளவேண்டும் எனவும் ஏற்பாடுகள் பூர்த்தியடையும் வரை குறித்த உள்ளூராட்சி மாற்றங்களுக்கான தேர்தலைப் பிற்போடவேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணையாளருக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

**வாடகை இலக்கம் கொடுத்த வேட்டு!**

அதனால், இத்தேர்தலில் மேற்படி ஆறு மன்றங்களுக்கும் கட்சியின் மரச்சின்னத்திலேயே முஸ்லிம் காங்கிரஸ் ஆணையைப் பெற்றவர்கள் ■■■தன் நுழையமுடியவில்லை.
அவர்கள் இன்றும் வெளியில்தான் காத்துக்கொண்டு நிற்கின்றனர்.
சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றிருப்பதால் அவர்கள் இப்போது நிம்மதிப் பெருமூச் விடுகின்றனர். சட்டத்தை சற்று■

அஸ்லம் எஸ்.மௌலானா

நெகிழ்ந்து கொடுக்க முன்வராத தேர்தல் ஆணையாளரை, சட்டத்தில் சட்டப்படியான திருத்தங்களைச் செய்துகொண்டு முஸ்லிம் காங்கிரஸ் சந்தித்துள்ளது.

**வரலாற்றுச் சாதனையா?**

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரைப் பொறுத்தமட்டில் இத்திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தி நிறைவேற்றப்பட்டமையும் அதன் ஊடாக உரிய நபர்களிடம் நிர்வாகப் பொறுப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற் வழிகிடைத்தமையும் பெருவெற்றியாகே கருதப்படுகிறது.
ஏனெனில், இவ்விவகாரம் கட்சிக்குள் பெரும் நெருக்கடி நிலையைத் தோற்றுவித்திருந்ததோடு, மக்கள் மத்தியில் அதிருப்தியும் கண்டனமும் தெரிவிக்கிப்பட்டு வந்தது. இதனால், மு.கா.தலைவர் ஹக்கீம் கல்முனைப் பிராந்தியத்திற்கு வருகைதர முடியாத சூழ்நிலை காணப்பட்டது.
இவ்விவகாரத்தில் வெற்றிவாகை சூடியுள்ள முஸ்லிம் காங்கிரஸ் சூட்டோடு சூடாக கட்சியின் பேராளர் மாநாடு, தேசிய மாநாடு என்பவற்றை நடத்துவதற்கும் கட்சிப் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கும் தயாராகிவருகிறது.
அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்த கொண்டதை நியாயப்படுத்த முடியாமல் தடுமாறிவந்த அதன் தலைமைத்துவம் இவ்வெற்றியை ஒரு வரலாற்றுச் சாதனை யாகப் பறைசாற்றிக்கொள்ளும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒருவிடயமே.

# மதக் கலவரத்தைத் தூண்டும் பி.ஜே.பியின் சீ.டி.



இந்தியாவின் மிகப்பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசத்தின் சட்டசபைத் தேர்தல்கள் இப்போது நடைபெற்று வருகின்றன. மிகப் பாரிய மாநிலம் என்பதால் 4-5கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. மாநிலத்தில் ஆட்சியிலிருக்கும் சமாஜவாதி கட்சி- காங்கிரஸ், பாரதீய ஜனதா இரண்டுக்கும் எதிரியாகும். இதைவிட மாநிலத்தில் பிரதான எதிர்க் கட்சியாக இருப்பது செல்வி மாயாவதி தலைமையிலான பிற்படுத்தப்பட்ட தலித்களின் கட்சியே. பிரதான போட்டி இந்த தலித் கட்சிக்கும் ஆளும் சமாஜவாதி கட்சிக்குமிடையேதான் இருக்கிறது. [illegible]2 ஆம் ஆண்டு பாரதீய ஜனதாக் கட்சியின் இந்து தீவிர விசுவாசிகளால் உடைக்கப்பட்ட சர்ச்சைக்குரிய பாபர் மசூதி இம்மாநிலத்தில் தான் இருக்கிறது. பாபர் மசூதி இடிக்கப்பட்ட காலத்தில் இந்த மாநிலத்தில் ஒஹோவென்ற செல்வாக்குடன் விளங்கிய கட்சி பாரதீய ஜனதா [illegible]கும். எனினும், சமீபகாலமாக உத்தரப் பிரதேசத்தில் பி.ஜே.பியானது பலமிழந்த நிலையிலேயே இருந்து வருகிறது. இதற்குப் பிரதான காரணம் யாதவர் சாதிக்கட்சியான சமாஜவாதிகட்சியும் தலித் கட்சியான பகுஜன் சமாஜக்கட்சியும் சாதியத்தை முன்னிறுத்தி முன்வணிக்கு வந்தமையாகும். இதனால், இவ்விரு கட்சிகளுக்குப் பின்னால் மூன்றாவது இடத்துக்கு பி.ஜே.பி. தள்ளப்பட்டுவிட்டது. ஒருகாலத்தில்

பி.ஜே.பி மத்தியில் ஆட்சிபீடமேற [illegible]ளையும் சுழியிட்டுக்கொடுத்த [illegible]நிலம் [illegible]. மொத்த 552 லோக்சபா [illegible]குதி[illegible]ல் 80தொகுதிகள் [illegible] மாநி[illegible]த்தில் இருப்பதால் இங்கு [illegible]ற்றி பெறும் கட்சியே டெல்லியில் [illegible]யணையில் அமரும் என்ற நியதி [illegible]ப்போது நிலவியது. ஆனால், மாறிவரும் அரசியல் சூழ்நிலையில் கூட்டணி அரசு என்ற தாற்பரியம் [illegible]தும் அங்கீகரிக்கப்படும் காலம் இது. [illegible]வே, உத்தரப் பிரதேசத்தில் அதிக [illegible]தொகுதிகளில் [illegible]தான் மத்தியில் ஆளமுடியும் [illegible]டாயம் இப்போது கிடையாது. [illegible]ாக தற்போது ஆளும் [illegible] அரசு உத்தரப் [illegible]ன் மொத்தம் 80 இல் பத்தே [illegible]களை மட்டும் வென்ற [illegible]ரஸ் கட்சியுடையது. காங்கிரஸ் [illegible] இந்த மாநிலத்தில் நான்காவது இடத்துக்குத் தள்ளப்பட்டு வெகு[illegible]மாகிவிட்டது.

இழந்த செல்வாக்கை மீட்க பாரதீய ஜனதாக் கட்சி மீண்டும் பாபர் மசூதி விவகாரத்தை ஊதிப் பெருப்பிக்கக்கூடும் என்பது பெரிதும் எதிர்பார்க்கப்பட்டதே. பாபர் மசூதி இல்லாவிடினும் ஏதோ ஒருவிதத்தில் இந்துக்களின் மதஉணர்வைத் தூண்டி மட்டுமே வெற்றிபெறமுடியும் என்பதும் பலருக்குத் தெரிந்த விஷயம். ஆனால், எதிர்பார்த்தற்கும் ஒருபடி மேலேபோய் பி.ஜே.பி. கட்சி அப்பட்டமான முஸ்லிம் விரோத நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது பலரது புருவத்தையும் உயர்த்தவைத்துள்ளது. தேர்தல் பிரசாரத்துக்காக பி.ஜே.பி வெளியிட்ட சீ.டி. ஒன்றே இப்பிரச்சினையை கிளறிவிட்டிருக்கிறது. முஸ்லிம் சமூகத்தை நேரடியாகத் தாக்கும் விதமாக இதில் காட்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தொப்பி அணிந்த முஸ்லிம் ஒருவர் பொதுஇடத்தில் களவாகக் குண்டு ஒன்றைப் பொருத்தும் காட்சி, இந்து இளம்பெண்ணை ஏமாற்றிக் கூட்டிச்சென்று அவரை மதமாற்றி முஸ்லிம் மதத்து முதியவருக்கு திருமணம் முடித்துவைத்தல், பசுவை பாலுக்காக என ஏமாற்றி எடுத்துச் சென்று இறைச்சிக்காக கொல்லுதல் என பச்சை பச்சையாக இந்த சீடியில் முஸ்லிம் சமூகத்தைக் குறிவைத்து இந்து வாக்குகளை கவரும் விதமாக காட்சிகள் சித்திரிக்கப்பட்டுள்ளமை எவரையும் அதிர்ச்சியில் உறைய வைப்பதாகும்.

ஏற்கனவே, பி.ஜே.பியின் தேர்தல் பிரசாரங்களில் இந்த சீ.டி. சமீபநாட்களாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்திய தேர்தல் சட்டத்தின்படி தேர்தல்

**என்.சுரேந்திரஜித்**

பிரசாரத்தில் மதக்கலவரத்தைத் தூண்டும்படியான பேச்சையோ சாதனங்களையோ எந்தவொரு கட்சியாவது பயன்படுத்தினால் அக்கட்சியை தேர்தலில் போட்டியிடமுடியாமல் தடைவிதிக்கமுடியும். அவ்வாறு பி.ஜே.பியை தடைசெய்யும்படி எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணையத்தை பலமாக வற்புறுத்தி வருகின்றன.

இலங்கைபோன்று இனவாதத்தீ கொளுந்துவிட்டு எரியும் ஒரு நாட்டில் கூட ஜே.வி.பி., ஹெல உறுமய போன்ற கடும்போக்குக் கட்சிகள் சிறுபான்மை இனத்துக்கெதிராக இவ்வாறு ஒரு பிரசார யுக்தியை கையாண்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில், வாக்கு வங்கியை நிரப்ப வக்கற்ற ஒரு நிலையிலேயே பி.ஜே.பி. இவ்வாறு கீழ்த்தரமான பிரசார உபாயத்தை நாடியுள்ளது என்பது கண்கூடு. இதற்கு முன்பும் குஜராத் வன்முறை, பாபர் மசூதி இடிப்பு என வகுப்புவாதத்தைக் கிளறி வாக்குவேட்டையாடுவது தனக்குக் கைவந்த கலை என்பதை பி.ஜே.பி பலமுறை நிருபித்துள்ளது. ஒருகாலத்தில் தனது கோட்டையாக விளங்கிய உத்தரப் பிரதேசத்தை இழந்துவிட்ட பி.ஜே.பி. அங்கு மீண்டும் காலூன்ற வேறு மார்க்கமின்றி மதவாதத்தை மீண்டும் கையிலெடுத்துள்ளது. இப்போது பி.ஜே.பி. தலைவர்கள் தமக்கும் அந்த சீ.டிக்கும் எந்தத் தொடர்புமில்லை எனக் கையை விரிக்கின்றனர். சீடியை உருவாக்கியவரது தலையிலேயே முழுப்பழியையும் போட்டுத் தப்பிக்கொள்ளப் பார்க்கின்றனர் பி.ஜே.பி. தலைவர்கள்.

இந்த விவகாரத்தில் சீ.பி.ஐ. என்ற மத்திய புலனாய்வுத்துறையின் விசாரணை நடத்தப்படவேண்டுமென காங்கிரஸ்கட்சி கோரியுள்ளது.

எவ்வாறாயினும் பி.ஜே.பி. கட்சியை தேர்தலில் போட்டியிடாது தடைசெய்யுமளவுக்கு தேர்தல் ஆணையம் பிடியை இறுக்குமா? என்பது தெரியவில்லை. அவ்வாறு நடந்தால் வகுப்புவாதத்தை வேரறுக்கும் இந்திய தேசத்தின் திடசங்கற்பத்தில் இது ஒரு மைல்கல்லாக அமையும்.

---

# வழிகாட்டும் வட்மோர்



இந்[illegible] கிரிக்கெட் ரசிகர்களுக்கு மிகவும் [illegible]கமான நாளாக 2007 ஆம் ஆண்டு மார்ச் 17ஆம் திகதி அமைந்தது. 9ஆவது உலகக் கிண்ணப் போட்டியில் முதல் சுற்றிலேயே வெளியேறவேண்டிய நிலைக்கு இந்திய அணி தள்ளப்படுவதற்கு முக்கிய காரணமாகவிருந்த பங்களாதேஷிற்கு எதிரான ஆட்டம் அன்றுதான் நடைபெற்றிருந்தது.

மார்ச் 17 ஆம் திகதி என்றால் இலங்கைக் கிரிக்கெட் ரசிகர்களும் நினைவில் வைத்திருக்கவேண்டிய முக்கிய நாளாகும். 1996 ஆம் ஆண்டு இதே திகதியில் தான் இலங்கை அணி உலகக்கிண்ணத்தை வென்றிருந்தது. கிரிக்கெட் அரங்கில உருத்தெரியாமல் இருந்த இலங்கை அணிக்கு வல்லரசுப் பெருமை கிடைத்த நாளாக 1996 ஆம் ஆண்டு மார்ச் 17 ஆம் திகதி விளங்குகின்றது.

மேற்குறிப்பிட்ட பங்களாதேஷின் [illegible]றிக்கும் இலங்கை அணியின் வெற்றிக்கும் பயிற்சியாளர் டேவ் வட்மோர்தான் முக்கிய காரணகர்த்தாவாக விளங்குகின்றார். இவ்விரு அணிகளும் கிரிக்கெட் அரங்கில் பிரபல்யம் பெற்றிராதபோது பயிற்றுவிப்பாளர் பதவியை ஏற்றுக்கொண்ட டேவ் வட்மோர் அவ்வணிகளை உயர்ந்த இடத்திற்கு இட்டுச் சென்றார்.

1954 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் திகதி கொழும்பில் பிறந்தவர் டேவ் வட்மோர். பின்னர் அவுஸ்திரேலியக் குடியுரிமைபெற்ற அவர் அந்நாட்டின் சார்பிலேயே சர்வதேசக் கிரிக்கெட்டில் [illegible]த்திருந்தார். தனது 25ஆவது வயதி[illegible] முதல் டெஸ்டில் விளையாடிய வட்[illegible]8 மாதங்கள் மட்டுமே அவுஸ்[illegible]ரலிய அணியில் விளையாடினார். மொத்தம் 7 டெஸ்ட் ஆட்டங்களில் ஆடியுள்ள அவர் 293 ஓட்டங்களை மட்டுமே பெற்றுள்ளார். அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாக 77ஐப் பதிவுசெய்துள்ளார். ஒரேயொரு ஒருநாள் ஆட்டத்தில் ஆடியுள்ள வட்மோர் 2 ஓட்டங்களை மட்டுமே அவ்வாட்டத்தில் பெற்றிருந்தார்.

கிரிக்கெட் அரங்கில் ஒரு வீரராக பிரபல்யம் பெறாத வட்மோர், பயிற்றுவிப்பாளர் பதவியின் கீழ் பல சிறப்புகளைப் பெற்றுள்ளார். இலங்கைக் கிரிக்கெட் அணியை எவ்வாறு தரமுயர்த்தினாரோ அதேபோல் பங்களாதேஷ் கிரிக்கெட் அணியையும் எதிரணிகள் பயங்கொள்ளும் அளவிற்கு வளர்ச்சிபெறச் செய்துள்ளார். பந்துவீச்சு, களத்தடுப்பு, துடுப்பாட்டம் என சகல துறைகளிலும் பங்களாதேஷ் அணியை மெருகூட்டியுள்ளார் வட்மோர். நடைபெற்றுவரும் 9ஆவது உலகக் கிண்ணப் போட்டியில் பங்களாதேஷ் அணியின் சிறப்பான செயற்பாடுகள் வட்மோரின் வழிகாட்டுதலுக்குக் கிடைத்த வெற்றிகளாக அமைகின்றன.


**அருளன்**

தனது முதலாவது லீக் ஆட்டத்தில் இந்திய அணியை எதிர்த்தாடியது பங்களாதேஷ். வேகப்பந்துவீச்சாளர் மோட்டஸா சிறப்பாகப் பந்துவீச இந்திய அணி 210 ஓட்டங்களுக்குள் சுருண்டது. வெற்றி இலக்கை 5 விக்கெட்டுகளை மட்டும் இழந்து அடைந்த பங்களாதேஷ் இறுமாப்பில் இருந்த இந்திய அணிக்கு பாடம் புகட்டியது. தொடர்ந்து இலங்கையிடம் தோல்வியைச் சந்தித்த பங்களாதேஷ் அணி, தனது மூன்றாவது லீக் ஆட்டத்தில் அயர்லாந்து அணியை வெற்றிகொண்டு முதல்தடவையாக உலகக் கிண்ணப்போட்டியின் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

2ஆவது சுற்றான 'சூப்பர்-8' இல் கிரிக்கெட் உலகில் முதல்தர அணியாக விளங்கிய தென்னாபிரிக்காவைத் தோற்கடித்து தனது திறமையை மீண்டும் பங்களாதேஷ் வெளிக்காட்டியது. மொகமட் அஸ்ரபுல் அதிரடியாக 87 ஓட்டங்களை விளாசிக் கொடுக்க அவ்வாட்டத்தில் பங்களாதேஷ் அணி 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை வெற்றிகொண்டது.

இதேபோல் 2005 ஆம்ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற முத்தரப்புத் தொடர் ஒன்றில் அப்போதைய முதல்தர அணியான அவுஸ்திரேலியாவை பங்களாதேஷ் அணி வீழ்த்தி அதிர்ச்சியளித்தது. இவ்வாட்டத்திலும் மொகமட் அஸ்ரபுல் 100 ஓட்டங்களை விளாசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. வட்மோரின் வழிகாட்டலின் கீழ் பங்களாதேஷ் அணி முன்னணி அணிகளைப் பயங்கொள்ளாமல் எதிர்கொள்ளப் பழகிக் கொண்டுவிட்டது. ஆரம்ப கட்டங்களில் இருந்தது போலல்லாமல் முன்னணி விக்கெட்டுகளை இழந்தாலும் பின்வரிசை பங்களாதேஷ் வீரர்கள் வெற்றிக்காகப் போராடும் குணத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

தற்போதைய பங்களாதேஷ் அணியை சின்ன அணியென்று அழைக்கமுடியாது. அவ்வணி வளர்ந்துவரும் முன்னணி அணியாக மாறிவிட்டது. இந்தப் பெருமையெல்லாம் பயிற்சியாளர் வட்மோரையே சாரும். வட்மோரின் பங்களாதேஷ் பயிற்சியாளர் பதவிக் காலம் மே மாதத்துடன் முடிவடைகின்றது. அதனைத் தொடர்ந்து இந்திய அணிக்கு பயிற்சியாளராகச் செயற்பட விருப்பம் தெரிவித்துள்ளார். முக்கிய போட்டிகளில் கோட்டைவிடும் இந்திய அணியை எவ்வாறு மாற்றியமைக்கப் போகின்றார் என்பதனைப் பொறுத்திருந்து பார்ப்போம்.



# பல்சுவைக் கதம்பம்

## நீச்சல் வீராங்கனைகள்



ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற உலக சாம்பியன்சிப் நீச்சல் போட்டியில் வெற்றிபெற்ற வீராங்கனைகள்.

## புகையிலைத் திருவிழா


பிலிப்பைன்ஸ் நாட்டின் கொண்டோபா நகரில் நடைபெற்ற புகையிலை திருவிழாவில் நீண்ட சுருட்டொன்றை புகைக்கும் 71 வயது மூதாட்டி ஒருவர்.

## வி.ஐ.பி. பிரசாரம்

உலக அமைதியை வலியுறுத்தி நாடு தழுவிய, உலகம் தழுவிய சுற்றுப் பயணம் செய்யும் சமூக ஆர்வலர்களைப் பார்த்திருக்கிறோம். இதுபோன்ற விஷயங்களில் நாட்டின் மிக உயர்ந்த பதவியில் இருப்பவர்கள், பெரிய



அந்தஸ்தில் இருப்பவர்கள் ஈடுபடுவது மிகவும் அபூர்வம். படத்தில் இருப்பதும் அதுபோன்ற ஒரு உலக சமாதான சைக்கிள் பயணம்தான்.

உலகமெங்குமிருந்து பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 300 பெண்கள் இந்த மத்திய கிழக்குப் பகுதி பயணத்தில் கலந்து கொள்கிறார்கள். படத்தில் 4 ஆவது சைக்கிளை புன்சிரிப்புடன் ஓட்டி வருபவர் சிரியா அதிபரின் மனைவி அஸ்மா அல் அசாத். இது டமாஸ்கஸிலிருந்து 350 கி.மீ. தொலைவில் உள்ள லடாய்கா பிராந்தியத்தின் ராஸ் சாம்ரா என்ற இடம். இந்த சைக்கிள் பிரசாரக்குழு ஜோர்தான் பெய்ருட், அம்மான், மற்றும் அப்பகுதியின் முக்கிய நகரங்கள் வழியாகச் செல்லும்.

## ஸ்கேட்டிங் ஜோடி!


டோக்கியோவில் நடைபெற்ற ஸ்கேட்டிங் சாம்பியன்சிப் போட்டியில் கலந்துகொண்ட ரஷ்யாவைச் சேர்ந்த ஜோடி.

## வயிறு வாடகைக்கு...!

எட்டு மாத கர்ப்பிணியான இவரது பெயர் ஜூலி இவன்ஸ். அமெரிக்காவில் யுமா நகரைச் சேர்ந்த இவர் செய்துள்ள ஒரு விஷயம் பரபரப்பை கிளப்பியுள்ளது.

தனது வயிற்றில் விளம்பரம் செய்து கொள்ள ஒரு இணையதளத்துக்கு அனுமதி அளித்துள்ளார் ஜூலி. இதற்காக கணிசமான பணத்தை பெற்றுள்ளார்.

நோ வொர்ரீஸ் டாட் காம் என்ற இணையதளம்தான் இவரது வயிற்றில்




விளம்பரம் செய்ய அனுமதி பெற்றுள்ளது. அதையடுத்து ஒரு மீன் படமும் நோ வொர்ரீஸ் டாட் காம் என்ற இணையதளத்தின் பெயரும் வயிற்றில் வரையப்பட்டு உள்ளன.

பிரசவமாகும் வரை இது மாதிரி நிறைய நிறுவனங்களுக்கு விளம்பரம் செய்ய அனுமதி தரப் போகிறாராம் ஜூலி. இதில் ஒரே ஒரு நல்ல விஷயம்... வசூலாகும் பணம் அனைத்தையும் நலப் பணிகளுக்கு தரப் போகிறாராம்.

## இலவச இறைச்சி

தென்கொரியாவில் தற்போது பறவைக் காய்ச்சல் பீதி பிடித்து ஆட்டுகிறது. நம்மூரைப் போலவே அங்கும் சிக்கன் சாப்பிடுவதை பலர் நிறுத்திவிட்டனர். இதனால் கறி வியாபாரம் படுத்துவிட்டது.

விடுவார்களா வியாபாரிகள்? கோழி சாப்பிடுவதை ஊக்குவிக்க பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். அதில் ஒன்று இலவச சிக்கன் திருவிழா.

சியோல் நகரில் நடத்தப்பட்ட இந்த திருவிழாவில் வருவோர், போவோர் அனைவருக்கும் இலவசமாக கோழி கறி வழங்கப்பட்டது. அவர்களும் ஒரு பிடிபிடித்தனர்.



## தொப்பிப் போட்

[த]லையில் இருந்து பல... உயரத்துக்கு தொப்பி அணி[ந்]து இருக்கிறார் மைக்கேல் ஸ்மித்.



ஈஸ்டர் பண்டிகையையொட்டி சான்பிரான்சிஸ்கோவில் நடத்தப்பட்ட போட்டியில் அவர் கலந்து கொண்டார்.

இந்த போட்டியில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். இதில் ஸ்மித்தின் வித்தியாசமான தொப்பி அவருக்கு இரண்டாம் பரிசை அள்ளித் தந்தது.



## தணியாத தாகம்!

தகிக்கும் வெயிலில் தணியாத தாகத்தால் ஆற்று நீரை அள்ளி அள்ளி யானை குடிக்க, ஒய்யாரமாய் உட்கார்ந்து வேடிக்கை பார்க்கிறார் பாகன். தாய்லாந்தில் மோ ஹொங் சன் மாகாணத்தில்தான் இந்த காட்சி. தாய்லாந்தில் தற்போது 5 ஆயிரம் யானைகள் இருப்பதாக கணக்கிடப்பட்டு உள்ளது. இதில் 2 ஆயிரம் யானைகள் காடுகளில் உள்ளன.

# அம்மாவுக்கும் டீன் ஏஜ் பெண்ணுக்கும்...

(12ம் பக்கத் தொடர்ச்சி.....)

வரை ஒருவார இடைவெளியில் மீண்டும் உதிரப்போக்கு அல்லது ஓரிரு மாத இடைவெளிக்குப் பிறகு உதிரப்போக்கு ஏற்படுவது என்பது முன்பு குறிப்பிட்டுள்ளது போல் உடலின் தன்மையினைப் பொ...த்தே நிகழ்கின்றது.

ஒவ்வொரு பெண்ணும் இதனை டைரி ...ல் திகதிவாரியாக குறித்துக்கொள்ளும் ...பாழுது, அடுத்த மாதவிலக்கிற்கான ...ப்கின்ஸ்', போன்றவற்றினை கைவசம் ...ாராகக்கொண்டு செல்ல உதவியாய் ...ருக்கும். சிலருக்கு மாதவிலக்கிற்கு முன் ...யிற்றுவலி இருக்கும். அநேக பேருக்கு ...ர்பகம் சற்றுக் கனப்பது போல் இருக்கும். ...லருக்கு உடல் உப்பிசம் இருக்கும். ...லருக்கு இந்தக் குறிப்பிட்ட காலங்களில் ...திக உணர்ச்சி வசப்படுதல், கோபம், ...கை என இருக்கும். இவையெல்லாம் ...ார்மோன் மாறுதல்களின் ...ளிப்பாடுகள்.

...க்காலங்களில் துணியினை ...யோகிப்பது என்பது சுகாதாரத்துக்கு ...கென்றும் அசௌகரியங்கள் அதிகம் ...றும் வலியுறுத்தப்படுகின்றது. 'சானிடரி ...ின்ஸ்' எல்லாக் காலப் பெண்களுக்கும் ...றது. 'டம்பூன்ஸ்' என்னும் வகையும் ...ந்ததே.

...இதனை முறையாய் 3-4 மணிநேரத்தில் ...வ்வப்போது மாற்றுவதும், சோப், டெட்டால், ...துவெதுப்பான நீர்கொண்டு ...ப்புறுப்புகைகள் இவைகளைச் சுத்தம் ...ய்வதும் உடலைச் சுகாதாரமாய் ...வைத்தி...ப்பதும் துர்நாற்றத்தினைத் தவிர்க்கும். ...நடன... நீச்சல் போட்டி என பெண்ணின் ...ழ்க்கை என்றென்றும் பிஸியாகிவிட்ட ...ல ...பொழுது என்பதால்; ...க்கா...ங்களில் சானிட்டரி நப்கின்ஸை ...டம்பூன்ஸை மிக அதிக நேரம் ...பாருத்தி இருப்பது தீங்கினை ...ளவிக்கும். பொதுவாக ஒரு தாய் தனது மகளை பருவமடைந்த பிறகு ஒரு பெண் மருத்துவரிடம் அழைத்துச் சென்று பரிசோதனையும் அறிவுரையும் பெறுவது மிகவும் நல்லது.

ஒவ்வொரு பெண்ணிற்கும் இந்தக் காலகட்டம் சற்று அச்சமானதாகவே இருக்கும். மாதவிலக்கு ஏற்படுவதற்கு ஓரிரு வருடங்களுக்கு முன்பே பிறப்புறுப்பிலிருந்து வெள்ளைநிற அல்லது மஞ்சள் நிற கசிவு பிசுபிசுவென ஏற்படும். இது ஓர் இயற்கையான நிகழ்வே. இக்கசிவு பச்சை, ப்ரௌன் நிறத்தில் இருந்தாலோ அல்லது சிறுசிறு உருண்டையான வடிவத்தில் இருந்தாலோ அரிப்பு, எரிச்சல் இருந்தாலோ அல்லது அதிக துர்நாற்றத்துடன்இருந்தாலோ மருத்துவ சிகிச்சை தேவை. ஆனால், இது சாதாரண மருத்துவ சிகிச்சையில் குணமாகும் ஒன்றே. சிலருக்கு மாதவிலக்கு காலங்களில் உதிரம் கட்டி கட்டியாக வெளியேறலாம். இதுவும் பயப்படக்கூடியது அல்ல. உள்ளிருக்கும் இறந்த செல்கள் வெளிவரும் இயற்கை நிகழ்வு இது. பொதுவாக அதிக உதிரப்போக்கு என்று பல பெண்கள் கூறுவது உதிரத்தினைக் கண்டு அவர்கள் கொள்ளும் அச்சம் காரணத்தினாலேயே.

பல பெண்களுக்கு கீழ் வயிறு, உதடுகளின் மேல் இவற்றிலெல்லாம் முடிவளருவது சங்கடத்தினைக் கொடுக்கும். தலை, புருவம் இவற்றைவிட எங்கு முடி இருப்பினும் அழகின்மை என்பதாலும், பிறப்புறுப்பினை சுற்றிய முடியினை நீக்குவது சுகாதாரத்திற்காக என்பதாலும் வாக்ஸிங், முடிநீக்கும் க்ரீம், த்ரெட்டிங் முறையில் முடியினை நீக்கிக்கொள்வதுவழக்கத்தில் உள்ள ஒன்றே. ரேஸர் கொண்டு ஷேவிங் முறையில் முடியினை நீக்குவது அடர்த்தியான, கரடுமுரடான முடிவளர்த்தியினைக் கொடுக்கும் என்பதால் இம்முறையினைத் தவிர்த்துவிடுக.

### மாறுதல்கள்

மழமழவென்ற பட்டுமுகத்தில் பரு தோன்றலாம். இதற்கு உணவில் கவனமும், அழகுக் குறிப்புகளும் பெரிதும் உதவும். மார்பக வலி ஏற்படலாம். முறையான ப்ரா அணிவது இவ்வலியினை இல்லாமல் செய்யும்.

வயிற்றுவலி: மாதவிலக்கு காலத்தில் சிலருக்கு ஏற்படும் இந்த வலிக்கு சுடுநீரில் இதமாய் குளிப்பது, சுடுநீர் ஒத்தடம் போன்றவை நல்ல நிவாரணம் அளிக்கும்.

பள்ளியிலோ, பொதுஇடத்திலோ திடீரென மாதவிலக்கு ஏற்பட்டு எதுவும் கைவசம் இல்லையென்றாலும் 'சொக்ஸ்' உறைகளை உள்ளாடைக்குள் வைத்து வீடு வந்துவிடலாம் என்று வயதுப் பெண்களுக்கு அம்மாக்கள் சொல்லிக்கொடுக்கவேண்டும். ஆனால், 'சொக்ஸ்' சுத்தமானதாக இருக்கவேண்டும்.

சில பிஞ்சுப் பருவத் தளிர்கள், சகலதையும் பிஞ்சிலேயே கற்றுக்கொண்டு வெம்பிய பிஞ்சாக மாறுவதும் தவிர்க்கமுடியாத செயலாகப் பெருகித் தான் வருகின்றது. மாதவிலக்கு, பருவம், காதல், கல்யாணம், உடல்உறவு, குழந்தை பிறப்பு இவற்றினை இவர்கள் இளவயதிலேயே அறியமுனையும் போது ஆர்வம் காரணமாக வாழ்வினைப் பற்றி இவர்கள் முறையற்ற வழியிலேயே அறிகின்றனர்.

உடல்உறவினைப் பற்றிய கல்வி அவசியம் என பள்ளிப் பருவத்தில் இருக்கும் இளவயதினரைப் பற்றி நாம் கவலைகொள்வது போல் ஒவ்வொரு தாய்க்கும்-குறிப்பாக பெண்குழந்தையை பெற்ற ஒவ்வொரு தாய்க்கும் ஒரு பொறுப்பு உள்ளது. உரிய பருவத்தில் உரிய நிகழ்வுகள் என்ன என்பதையும், இது இயற்கை என்பதனையும் பாதுகாப்பு முறைகளையும் கண்டிப்பாய் பெண்குழந்தைகளுக்கு சொல்லியே தரவேண்டும்



"அவர் போலி டாக்டர் என்று எப்படிச் சொல்றே?"
"அட... காலைப் பிடிச்சு நாடி பார்க்கிறார்!"



"மாணவர்களே.. இந்த உலகம் என்றாவது ஒரு நாள் அழியப் போகிறது... எரிமலை குமுறப் போகிறது... வானம் இடிந்து விழப்போகிறது..."
"சின்ன சந்தேகம் சார்.."
"கேளு..."
"அன்று ஸ்கூல் உண்டா சார்..."

## சொற்சிலம்பம் போட்டி இல. 258

...சொற்சிலம்பம் 258 போட்டிக்கான விடைகளை எழுதி ...னுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் ஏப்ரல் 22 ஆம் ...கதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர் ...ள் ஏப்ரல் 29 ஆம் திகதி சுடர்ஒளியில் பிரசுரமாகும். சொற்...லம்பம் போட்டி இல. 256 இற்கான விடைகள் அருகே ...ரப்பட்டுள்ளன.

...தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்...ங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை ...கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 258

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஏ | 2 கா | 3 த | 4 சி | ■ | 5 வ | ம் | 6 பு |
| 7 [illegible] | [illegible] | [illegible] | த் | 8 தி | ரை | ■ | த் |
| 9 த | [illegible] | ■ | 10 தி | ர | வ | 11 கோ | ல் |
| ல் | ■ | 12 பா | ர | ம் | ■ | 13 கு | வி |
| ■ | 14 இ | ன | ம் | ■ | 15 சி | ல | ■ |
| 16 உ | த | ட் | ■ | 17 அ | ல | ங் | 18 பு |
| 19 [illegible] | ணி | ■ | 20 போ | த | ட் | ■ | ய |
| 21 [illegible] | டு | கோ | லி | ■ | 22 பு | சு | ல் |

## சொற்சிலம்பம் போட்டி இல. 256

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ந | டு | 2 நி | 3 சி | ■ | 4 க | 5 மு | கு |
| ண் | ■ | 6 க | ரி | 7 கா | லி | ன் | ■ |
| 8 ப | 9 தா | ர் | த் | த | ம் | ■ | 10 உ |
| 11 க | டை | ■ | 12 த | ம் | ■ | 13 த | ரு |
| ல் | ■ | 14 சூ | ல் | ■ | 15 கு | வ | ளை |
| ■ | 16 கு | பூ | ■ | 17 ச | ட | ம் | ■ |
| 18 அ | க | ம் | 19 பா | வ | ம் | ■ | 20 கோ |
| 21 வா | ன் | ■ | 22 கு | ம் | பி | ட | ல் |

## சொற்சிலம்பம் போட்டி இல.258

**இடமிருந்து வலம்**

1. பதினொராவது திதி.
5. வீண் சச்சரவுக்கு இழுக்கும் செயல்.
7. சினிமாவை விஞ்சி முன்னுக்கு வந்து கொண்டிருப்பது.
9. மறி.
10. சாவி.
12. கனம்.
13. ஓரிடத்தில் சேர்.
14. இது இதையே சேரும்.
15. ஒன்றுக்கு அதிகமானது, ஆனால், பலவல்ல.
16. பசளை.
17. கழுவு / தோய் / அரற்று.
19. குளிர்மை.
20. இந்த மனமே பொன் செய்யும் / திருப்திச் சொல்.
21. துர்த்தன் / கட்டாத கால்நடை.
22. தானியங்கள் அளக்கும் அலகு.

**மேலிருந்து கீழ்**

1. செல்லுதல்.
2. காண்பி.
3. கம்பு.
4. வரையப்பட்ட படம்.
5. இறுதி செய்வதற்கு முந்திய நகல் வடிவம்.
6. மகள்.
8. மேன்மையானது/ சிறந்தது.
11. கிருஷ்ணர் வளர்ந்த இடைச்சேரி.
12. குடிக்கும் திரவம்.
14. துவி.
15. காலில் அணியும் ஆபரணம்.
16. ஒத்தாசை.
17. ஆறாவது உருபு/ சுட்டும்சொல்.
18. பெருங்காற்றுடன் வரும் சூறாவளி.
20. அசல் அல்ல.

## சொற்சிலம்பம் போட்டி இல. 256

1. ஜெ.நவபுத்திரன்
சிவா சேல்ஸ் சென்ரர் மே/பா
இல.140/A, மட்டுநகர்வீதி,
பாண்டிருப்பு.
2. தர்மிக்கா தர்மதாஸ்
புனித செபஸ்தியார் வீதி,
மன்னார்.
3. ஆர்.கார்த்திகேசு
31/3, 42ஆம் ஒழுங்கை,
கொழும்பு - 6

### பாராட்டுப் பெறுவோர்

1. க.நிரஞ்சன்
22, பிரதிபிம்பராம வீதி
களுபோவில, தெகிவளை.
2. ருஷாம் அன்வர்
55/A, நிவ்கங்காணங்கொடைவீதி,
சீனன்கோட்டை, பேருவளை
3. பவளம் குமார்
64/22, கொட்டாஞ்சேனை வீதி-13
4. சி.இராஜேந்திரா
33-5/1, 42ஆவது ஒழுங்கை,
கொழும்பு-6
5. திருமதி சந்திரா ரவீந்திரன்
திருவேரகம், 199/57, தும்புறுகிரிய வீதி,
ஹற்றன்.
6. எஸ்.ஜோர்ஜ்
60/10, ரட்ணம் வீதி,
கொழும்பு-13
7. திருமதி ச.சொர்ணமலர்
சொர்ணமகால், 17/13, மன்னார் வீதி,
வவுனியா.
8. திருமதி எஸ்.ஹமீட்
இல.46/59, றொபேட் குணவர்த்தன
மாவத்தை, கிருலப்பனை,
கொழும்பு-6
9. பாத்திமா முபாறக்கா
சாஹிரா தேசிய பாடசாலை
அம்பாந்தோட்டை.
10. ரி.சயந்தன்
இல.39, முதலாம் மாடி A
கிரிம்புரா குறுக்கு வீதி, காலி.

# லண்டன் விசா வழிகாட்டி

UK நுழைவு அனுமதிக்கான கை நூல்
விசா வழி முறைகள் கேள்வி பதில் வடிவில்
திரு.வ.மா.குலேந்திரன் எழுதியது

குறிப்பிட்ட பிரதிகளே அச்சிடப்படுகின்றன.
உங்கள் பிரதிகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ள ரூபா 225 ற்கான வரைவோலை / காசுக்கட்டளை அனுப்புக.
[நீர் கொழும்பு அஞ்சல் அலுவலகம்- 11500]

மேல் விவரங்களுக்கு:
"இங்கிலிஷ் அக்கடமி"
21, கனல் றோட், நீர் கொழும்பு.
தொ.பே: 0602311622 / 0312238674

**Regd: No.W.V: 5898**


# மிருணாளினியின் பரத நாட்டிய அரங்கேற்றம்



நிமல்ஷி

செல்வி மிருணாளினி சோமசுந்தர ஐயரின் பரத நாட்டிய அரங்கேற்றம் கடந்த 7ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த அரங்கேற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மொறீசியஸ் நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் தெ. ஈஸ்வரன், சிறப்பு விருந்தினராக கம்பவாருதி ஈ. ஜெயராஜ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அரங்க பூஜையுடன் அரங்கேற்ற நிகழ்வு ஆரம்பமானது. குருவணக்கம், நாட்டியாஞ்சலி, ஜதீஸ்வரம், சக்திநர்த்தனம், வர்ணம்,
எப்படிப்பாடினாரோ என்ற கீர்த்தனம், ஆறுமோ ஆவல், காற்றினிலே வரும் கீதம் என்ற பிரபல பாடகிகள் பாடிய பாடலுக்கான நடனம் என்பன இடம்பெற்றன.
தொடர்ந்து பிரதம விருந்தினர் உரையாற்றினார். தில்லானா, மங்களத்துடன் பரதநாட்டிய நிகழ்வு இனிது நிறைவேறியது. மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் மத்தியில் நல்லதோர் அரங்கேற்ற நிகழ்வைப் பார்வையிட்ட மன நிறைவு.








உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள். வித்தியாசத்தை உணர்வீர்கள்.

No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo
T.P. +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 45
Fax +94 11 4518481 E-mail : info@hotelwesteern.com
Website : www.hotelwesteern.com



இப்பத்திரிகை கொழும்பு-06 வெள்ளவத்தை, பெரக்கம்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள [illegible] ஸ்தாபனத்தினால் 2007 ஏப்ரல் 15ஆம் திகதி வெ